REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 4 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 92 இல. 04 | Thursday 04, January, 2024 | 16பக்கங்கள் | 50/-

விமான நிலைய ஒருங்கிணைந்த

## தொழிற்சங்க தலைவருடன் 28 பேர் இடைநிறுத்தம்


லோரன்ஸ் செல்வநாயகம்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விமான நிலைய ஒருங்கிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட உயர் பதவிகளை வகிக்கும் தலைவர்கள் 28 பேரின் சேவையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில்

06

## நான்கு நாள் விஜயமாக ஜனாதிபதி யாழ். விஜயம்

அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் இன்று பங்கேற்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று வடக்கிற்கு பயணமாகவுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் ஜனாதிபதி பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன் அந்த மாவட்டங்களின் கல்விமான்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும்

06

## 2024 முதல் காலாண்டு முடிவில், மக்கள் மீதான சுமை 75 வீதம் குறைக்கப்படும்



2024ஆம் ஆண்டை சாதகமான பொருளாதார வேகத்துடன் ஆரம்பிப்பதால், இந்த வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75% குறைக்கப்படும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபைக்கான வேலைத்திட்டம் இவ்வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என்றும், அதனால் நுகர்வோர் உரிமைகள் மேலும் பாதுகாக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (03) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத்

06

## 2,258 பரீட்சை நிலையங்களில் GCE A/L பரீட்சை இன்று ஆரம்பம்

அனர்த்த பகுதிகளுக்கு மாற்று ஏற்பாடு தயார்




லோரன்ஸ் செல்வநாயகம்

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகிறது. இதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 2,258 பரீட்சை நிலையங்களில், இம்முறை பரீட்சை நடைபெறுகிறது.

06

# தனியார் வரிக்கோவையை அதிகரிக்க அரசாங்கம் திட்டம்

05 இலட்சமாக உள்ளதை இவ்வருடத்துக்குள் 10 இலட்சமாக அதிகரிக்க இலக்கு

தேசிய வருமான வரி திணைக்களத்துக்கு நிதி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில், தற்போது 05 இலட்சமாக காணப்படும் தனியார் வரிக்கோவை எண்ணிக்கையை இவ்வருடத்தில் 10 இலட்சமாக அதிகரிக்கும் இலக்கை,தேசிய வருமான வரி திணைக்களத்துக்கு நிதி அமைச்சு வழங்கியுள்ளது.

தற்போது காணப்படும் 05 இலட்சத்து 196 தனியார் வரிக் கோவை எண்ணிக்கையை 01 மில்லியனாக அதிகரிக்கும் இவ்விலக்கை அத்திணைக்களத்துக்கு வழங்கியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வருமானவரி வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள வரிக்கோவை எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

உரிய முறையில் வரியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வரிச்சுமை குறைவடையும் அதேவேளை, வரி அடிப்படையை விரிவுபடுத்த முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு 17 இலட்சமாக தனியார் வருமான வரி கோவைகள் இருந்துள்ளது. இது 2021ஆம் ஆண்டு 05 இலட்சத்து 70 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

அதேவேளை 2022 ஆம் ஆண்டு 02 இலட்சத்து 04 ஆயிரத்து 467 ஆக இது குறைவடைந்துள்ளது. எனினும் 2023ஆம் ஆண்டு மீண்டும் அது 05 இலட்சம் வரிக்கோவையாக அதிகரித்துள்ளது.

அதற்கிணங்க இந்த வருடத்தில் அந்த வரிக்கோவை எண்ணிக்கையை 10 இலட்சமாக அதிகரிப்பதற்கு புதிய தேசிய வருமானவரி ஆணையாளர் சேபாலிகா சந்திரசேக்கர தலைமையிலான வருமானவரி திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு, பாரிய இலக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பாக். பாதுகாப்பு செயலர் ஜனாதிபதியுடன் சந்திப்பு




நாட்டுக்கு வருகை தந்திருக்கும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினன் ஜெனரல் (ஓய்வு) ஹமூத் உஸ் சமான் கான் (Lt Gen (Retired) Hamood uz Zaman Khan) நேற்று (03) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

06



தேசிய முற்போக்கு திராவிடகழகத் தலைவர் கேப்டன் விஜயகாந்தின் நினைவிடத்தில் (02) இ.தொ.கா. பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அஞ்சலி செலுத்தியபோது பிடிக்கப்பட்ட படம். சாலி கிராமத்திலுள்ள அவரது வீட்டுக்குச் சென்று, கழகத்தின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அம்மையாரையும் சந்தித்து அமைச்சர் ஆறுதலும் கூறினார்.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் மற்றுமொரு பயணிகள் முனையம்



கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தில் மற்றுமொரு பயணிகள் முனையத்தை நிர்மாணிப்பதற்கு துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

விமான நிலையத்தில் நிலவும் பயணிகள் நெரிசலை குறைக்கும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

## போதகர் ஜெரோம் பிணையில் விடுவிப்பு

வெளிநாட்டு பயணத்தடை தொடரும்



லோரன்ஸ் செல்வநாயகம்

மதங்களை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டாரென்ற குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் இவரை நேற்று (03) ஐந்து இலட்சம்

06

## மழையுடனான காலநிலை இன்னும் 02 நாட்களில் குறையும்

நாட்டில் கிழக்கு, ஊவா மாகாணங்களில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை, அடுத்த 02 நாட்களில் குறைவடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் சிறிதளவில் மழை பெய்யுமென எதிர்வு கூறப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் பல இடங்களில் பி.ப. 02 மணிக்குப்

06

## வட்டுக்கோட்டை இளைஞன் மரணம் ஆட்கொலை என நீதிமன்றம் தீர்ப்பு

04 பொலிஸாரின் விளக்கமறியலும் நீடிப்பு



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்குள்ளாகிய இளைஞனின் மரணம் "மனித ஆட்கொலை" என யாழ். நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா

06

## வரிக்கோவை இலக்கம் சமர்ப்பித்தல் பெப். மாதம் 01 முதல் கட்டாயம்

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

லோரன்ஸ் செல்வநாயகம்

வங்கியில், நடைமுறைக்கணக்கை ஆரம்பித்தல், கட்டிட நிர்மாணத் திட்டம் தொடர்பான அனுமதியை கோரல், வாகனமொன்றை பதிவு செய்தல், வாகனத்துக்கான வருமான வரி அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல் மற்றும் காணி உரிமையை பதிவுசெய்யும் போதும் வரி இலக்கத்தை சமர்ப்பிப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக, நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 01ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு

06

## புது வருடத்தின் முதலாவது சபை அமர்வுகள் 09 இல் ஆரம்பம்



பாராளுமன்றம் எதிர்வரும் 09 முதல் 12ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன அறிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 12ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஜனவரி 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 09.30 முதல் மு.ப 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 05.00 மணிவரை தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான

06

## விசேட 'யுக்திய' சுற்றிவளைப்புக்கள் இதுவரை 1,182 சந்தேக நபர்கள் கைது

19,052 கஞ்சா செடிகள், போதைப்பொருட்கள் மீட்பு

நாடு முழுவதும் கடந்த 02 ஆம் திகதி முதல் நேற்று 03 ஆம் திகதி அதிகாலை வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 1,182 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனுடன் தொடர்புடைய 44 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், 03 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட விரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், போதைக்கு அடிமையான 47 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

06

## இத்தாலியிலிருந்து அனுப்பப்பட்ட ஹஷீஸ் போதைப்பொருள் மீட்பு

06 கோடி ரூபா பெறுமதி; முகவரும் கைது



லோரன்ஸ் செல்வநாயகம்

இத்தாலியிலிருந்து ஹோமாகம பிரதேசத்திலுள்ள முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ள 06 கோடி ரூபாவுக்கும்

06

ஜனாதிபதியின் இன்றைய வடக்கு விஜயம்

## எமது மக்களின் நம்பிக்கையை வலுவூட்டுவதாக அமைய வேண்டும்



அரசியல் தீர்வு, நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் அர்த்த புஷ்டியான நகர்வுகளை முன்னெடுத்து இலங்கை வாழ் தமிழர்களின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வென்றெடுக்க வேண்டுமென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை (04) வடக்குக்கு விஜயம் மேற்கொண்டு, தமிழ்

06

# நகர்வலம்



# நீர் மற்றும் சுகாதார நெருக்கடியை தீர்த்தல் 'சர்வதேச நீர் மாநாடு 2023'

## அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்பு






நீர் மற்றும் சுகாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான 'மாற்றத்தை துரிதப்படுத்துதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் சர்வதேச நீர் மாநாடு 2023, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இரத்மலானை பிரதான அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையின் அபிவிருத்திகள் தொடர்பில் உரையாற்றினார்.

அத்துடன் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சமரதிவாகர, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க ஆகியோரும் இதன்போது உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக கலந்துகொண்ட உலக வங்கியின் சர்வதேச நீர் இயக்குனர் சரோஜ் குமார் ஜா, நீர் பாதுகாப்பு, பசுமை நெகிழ்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான உலகளாவிய நடவடிக்கை நிகழ்ச்சி நிரலை நிறுவுவதற்கான உலகளாவிய கூட்டு நடவடிக்கை குறித்த தனது அறிவு, அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொண்டார்.

நிபுணத்துவ அமர்வுகள், வர்த்தக அமர்வுகள், தொழில்நுட்ப அமர்வுகளுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கருத்தரங்கம், கண்காட்சி மற்றும் களவிஜயம் ஆகியனவும் இம்மாநாட்டின்போது நடைபெற்றன.

நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையில் மாற்றத்தை துரிதப்படுத்தும் வகையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலநிலை மாற்றம் மற்றும் நீர் வள முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான நிலையான தீர்வுகள் பற்றிய பயனுள்ள விரிவுரைகள் உலகெங்கிலுமுள்ள தொழில்துறை தலைவர்கள் மற்றும் நிபுணர்களினால் நிபுணத்துவ அமர்வுகளின்போது நிகழ்த்தப்பட்டன. வர்த்தக அமர்வுகளின்போது நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையின் முன்னணியின் ஒத்துழைப்புடன் வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டன.

## இலக்கியப் புரவலர் ஹாசிம் உமருக்கு திருச்சிராப்பள்ளி ரோட்டரி கிங்ஸ் வரவேற்பு



இனிய நந்தவனம் மாத சஞ்சிகை 27ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டிற்குச் செல்லும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் ஆகியோருக்கு திருச்சிராப்பள்ளி ரோட்டரி கிங்ஸ் சார்பில் எதிர்வரும் சனிக்கிழமை (06) மாலை வரவேற்பளிக்கப்படவுள்ளது.

ரோட்டரி கிங்ஸ் தலைவர் தங்கவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மீடியா பப்ளிக் ஆபிசர் மேஜர் டோனர், டாக்டர் கே.சீனிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். மாவட்டச் செயலாளர் (நிகழ்ச்சி) ரோட்டரி மாவட்டம் 3000 கிருஸ்ணமூர்த்தி வாழ்த்துரை வழங்க நந்தவனம் சந்திரசேகரன் அறிமுகவுரையாற்றுவார். விழாவுக்கான ஏற்பாடுகளை சங்கச் செயலாளர் ராம் பிரகாஷ் மற்றும் பொருளாளர் ரூபன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்



கடற்றொழில் அமைச்சின் புதிய செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச்சேர்ந்த அதிகாரியான திருமதி கே.என். சோமரத்ன (01) தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். கடற்றொழில் அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய திருமதி இந்து இரத்நாயக்க ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அவர், இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் மேலதிகச் செயலாளர்களான திருமதி அப்சரா நிசங்க, தம்மிக ரணதுங்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உள்ளிட்ட அதிகாரிளும் கலந்துகொண்டனர்.

## மதவச்சி அல் மதீனா மாணவன் சாதனை



மதவச்சி, அல்மதீனா மகா வித்தியாலய மாணவன் எம்.ஏ.எம் ஆகிப், 2023 ஆம் வருட க.பொ.த (சா/த) பரீட்சையில் '9 ஏ' சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம்.எஸ்.எம் அரூஸ்,ஆசிரியை ஜஸ்லினா தம்பதிகளின் புதல்வராவர்.

இவர் உதைப்பந்தாட்டம் உட்பட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட்டு வலய, மாகாண மட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அட்டுலுகம அல் கஸ்ஸாலியில் நிர்மாணிக்கப்படவுள்ள

## மர்ஹூம் நஜீப் ஹாஜியார் ஞாபகார்த்த புதிய கட்டடத்திற்கு அடிக்கல்





**(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)**

பண்டாரகம அட்டுலுகம அல் கஸ்ஸாலி தேசிய பாடசாலையில் தேசபந்து மர்ஹூம் முஹம்மத் நஜீப் ஹாஜியார் ஞாபகார்த்த மாடிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

அட்டுலுகம பிரதேசத்தின் முக்கியஸ்தராக விளங்கிய பிரபல சமூக ஆர்வலரும் சமூக சேவையாளருமான அன்னாரின் குடும்பத்தினரால் மேற்படி ஞாபகார்த்த கட்டடம் இப்பாடசாலையில் நிர்மாணித்து அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.

இத்திட்டம் தொடர்பான அத்திவாரக் கல் நடும் வைபவம் அல்கஸ்ஸாலி தேசிய பாடசாலை வளவில் அண்மையில் இடம்பெற்றது. சமய கலாசார விவகார அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிமல் சந்திரரத்ன, ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மட், அட்டுலுகம ஜம்இய்யதுல் உலமா முக்கியஸ்தர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட ஊர் முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட கலாவெவ மத்திய மகா வித்தியாலத்திற்கு அண்மையில் விஜயம் செய்தார். பிரபஞ்சம் செயற்திட்டத்தின் கீழ் கணினி அறைக்கு தேவையான கணினிகள் மற்றும் ஸ்மார்ட் பலகையினையும் அவர் பாடசாலைக்கு வழங்கி வைத்தார். இதன் போது ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க. பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

( படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்





### YMMA, YWMA ஏற்பாட்டில்

## நாடு திரும்பும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கு கொழும்பில் கௌரவிப்பு நிகழ்வு





**ருஸைக் பாரூக்**

அகில இலங்கை YMMA பேரவை மற்றும் இளம் பெண்கள் முஸ்லிம் சங்கம், YWMA ஆகியவை இணைந்து ஒழுங்கு செய்த பாகிஸ்தானின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கிக்கு பிரியாவிடை வைபவம் கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது.இந்நிகழ்வில் YMMA தேசியத் தலைவர் இஹ்ஸான் ஹமீட் மற்றும் YWMA தலைவி திருமதி பவாஸா தாஹா ஆகியோர் உயர்ஸ்தானிகர் மற்றும் அவரது மனைவியை மாலை மற்றும் மலர்க்கொத்துகள் வழங்கி வரவேற்றனர்.

YMMA இஹ்சான் ஹமீட் மற்றும் YWMA தலைவி திருமதி பவாஸா தாஹா ஆகியோர் உயர் ஸ்தானிகர் இலங்கையில் முஸ்லிம் சமூகத்திற்கும் பொதுவாக நாட்டிற்கும் அவர் ஆற்றிய சேவைகளை பாராட்டினர். ஏழை மக்களுக்கு குடிநீர் வழங்குவதிலும் தொலைதூர கிராமங்களில் உள்ள விதவைகளுக்கு உதவுவதிலும் தூதுவர் சிறப்பு அக்கறை காட்டுவதாக பவாசா தாஹா கூறினார்.

கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியரும் YMMA மீடியா உபகுழுவின் தலைவருமான மொஹமட் ரசூல்டீன் தனது சுருக்கமான உரையில், பாகிஸ்தான் தூதுவர் இலங்கையில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், தீவில் உள்ள மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் கௌரவம் பெற்றார் என தெரிவித்தார்.

YMMA நப்பிக்கையாளர் சபைத் தலைவர் காலித் எம். பாரூக், செயலாளர் ஆஷிப் சுக்ரி, YWMA செயலாளர் சுரயா ரிஸ்வி உட்பட YWMA இன் உப தலைவர்கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## அநு./ கல்லஞ்சியாகம முஸ்லிம் வித்தியாலயத்திற்கு Smart Board



**கெக்கிராவ குறூப் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட கல்லஞ்சியாகம முஸ்லிம் வித்தியாலயத்திற்கு 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான Smart Board வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர் எஸ். எம். நுவைஸ் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதற்கான நிதியுதவியினை வன்னி ஹோப் அவுஸ்திரேலியாவின் டாக்டர் மாலதி வாரன் வழங்கியிருந்ததோடு இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் கலந்துகொண்டு சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக வன்னி ஹோப் அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.டி.எம். பாரிஸ், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எ.ஆர். வசீம், மாவட்ட இணைப்பாளர் எஸ்.எம். அக்ரம், மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் பாஸ்கரன் ஆகியோரும் விஷேட அதிதியாக இப்பலோகம வலயக்கல்வி பணிப்பாளர் சட்டத்தரணி நிசாமும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வாறான சேவைகளை தனது மாவட்டத்தில் மேற்கொள்வதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், தமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

## மாத்தளை – குருநாகல் விபத்து; சிகிச்சை பெற்றுவந்த மாணவன் உயிரிழப்பு

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை குருநாகல் பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த மாணவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று (03) மரணமானார். இவ்விபத்து மாத்தளை குருநாகல் பிரதான வீதியில் தொம்பவளை பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இவ் விபத்தில் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் உயர்தர பிரிவில் கல்வி கற்று வரும் சஹ்ரான் வயது (18) என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவத்தினத்தன்று காலஞ்சென்ற நபர் மாத்தளையிலிருந்து மோட்டார் சைக்கிளில் நிக்ககொள்ளையை நோக்கி பயணித்து கொண்டிருந்த நிலையில் எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேராக மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை மஹவல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



இலங்கை சுற்றுலாத்துறையின் துணைத்தலைவர் வின்தா சமரவீரவுக்கு உலகத் தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடத்தின் சார்பாக சிறந்த மனித நேயர் விருது அண்மையில் வழங்கப்பட்டது. இதன்போது ஏனைய தெரிவு செய்யப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் சிறப்பு விருது அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் இலங்கை தூதரகம்; பிரதமருக்கு நியூசி. தூதுவர் பாராட்டு

இலங்கைக்கும் நியூசிலாந்துக்குமிடையே இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவதற்கு நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் ஆற்றிய பங்களிப்புக்காக, பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும், தனது பதவிக்காலம் முடிவடைந்து நாடு திரும்பும் நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பள்டனுக்கும் இடையிலான சந்திப்பொன்று (02) அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



நியூசிலாந்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தை விரைவில் மீண்டும் திறக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

கொவிட்19 இன் சவால்கள் மற்றும் முன்னெப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை குறிப்பிடத்தக்க வகையில் மீண்டுள்ளதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.மூன்று வருடங்களுக்கு முன்னர் தாம், இலங்கைக்கு வந்த போது, நாடு கொவிட்19 தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், தனிமைப்படுத்தப்பட்டு ஹோட்டல் அறையில் தங்கியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

06






## சந்தேகத்துக்கிடமான 07 மரணங்கள்; விசாரணை CIDயிடம் ஒப்படைப்பு

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கடந்த சில தினங்களாக சந்தேகத்திற்கிடமான வகையில் இடம் பெற்றுள்ள ஏழு மரணங்கள் தொடர்பில், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பை குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு கையளித்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், ஹோமாகம பிரதேசத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவமொன்றுடன் தொடர்பு பட்டவரின் சகாக்கள் என குறிப்பிடப்படும் இளைஞர் ஒருவரும் யுவதியும் உடலில் நஞ்சு கலந்ததால் மரணமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்பொலிசார்மேற்படி 21 வயதுயுவதியும் 34 வயதுடைய நபரும் உடலில் நஞ்சு கலந்துள்ளதாலேயே மரணமடைந்துள்ளதாக சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேற்படி யுவதியின் சடலம் யக்கல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் அம்பலாங்கொடைபிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 34 வயது நபரின் சடலம் அவர் தங்கியிருந்த மகரகம பிரதேசத்தில் உள்ள விடுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் சமய போதனைகளில் ஈடுபட்டிருந்த ருவன் பிரசன்ன குணரத்ன என்ற நபர், தமது உடலில் நஞ்சேற்றி தற்கொலை செய்து கொண்டுள்ளார். அதனையடுத்து அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இத்தகைய நிலையில் மரணமடைந்த ருவன் பிரசன்ன குணரத்னவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருந்த இளைஞர் மற்றும் யுவதியும் நேற்றைய தினம் மரணமடைந்த நிலையில், கண்டெடுக்கப்பட்டுள்ளனர். ஒரே விதமான விஷம் உடலில் கலந்ததால் இவர்கள் அனைவருமே மரணமடைந்துள்ளதாக பொலிசார் சந்தேகம் வெளியிட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மறுஅறிவித்தல் வரை

## மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அத்தியாவசிய சேவை மற்றும் தொடர்ச்சியான மின் விநியோகத்தை கவனத்திற் கொண்டு, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் அனைவரினதும் விடுமுறைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்துள்ள மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் கலாநிதி நரேந்திர டீ சில்வா: அத்தியாவசிய தேவைகளுக்காக மேற்படி மின்சார சபை ஊழியர்கள் திணைக்களத்தில் முதல்தர அல்லது, உயர் நிறைவேற்று அதிகாரியின் அனுமதியுடன் விடுமுறையை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய மின்சார சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மின்சார சபை ஊழியர்கள் நேற்றைய தினம் முதல் மூன்று தினங்களுக்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டநடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் கடும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாகவும் மின்சாரசபை ஊழியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, நேற்றைய தினம் மின்சார சபை ஊழியர்களால் கொழும்பிலுள்ள மின்சார சபைக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டம் காரணமாக சில மணித்தியாலங்கள் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன், மக்கள் சில அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்தது.




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 20ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 20


## குறள் தரும் சிந்தனை

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்

இரந்து வாழ்வோர் நிலையை நினைக்கும் போது உள்ளம் உருகுகிறது, இருப்பதைக் கொடுக்க மனமின்றி மறைத்து வாழ்பவரை நினைத்தால் உருகிடவும் வழியின்றி உள்ளமே ஒழிந்து விடுகிறது.

# சீரற்ற காலநிலையினால் மரக்கறிச் செய்கை பாதிப்பு!

நாட்டில் கடந்த சில மாதங்களாக சீரற்ற காலநிலை நீடித்து வருகின்றது. அதன் விளைவாக மக்களின் இயல்பு வாழ்வு பல்வேறு பிரதேசங்களிலும், பலவிதமான பாதிப்புகளுக்கு முகம்கொடுத்த வண்ணமுள்ளது. நாட்டில் அவ்வப்போது வெள்ள நிலையும் மண்சரிவுகளும், மண்மேடுகள் சரிந்து விழுதல்களும் ஏற்படக்கூடிய நிலைமையும் காணப்படுகின்றது. இவற்றின் விளைவாக மக்களின் போக்குவரத்து வசதிகளிலும் போக்குவரத்து தடங்கல்கள் உள்ளிட்ட பலவிதமான இடையூறுகளும் ஏற்படவே செய்கின்றன.

அதனால் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களினால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ நிலையமும், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமும், வளிமண்டலவியல் திணைக்களமும், நீர்ப்பாசனத் திணைக்களமும் அவ்வப்போது வழங்கி வருகின்றன. இந்த முன்னெச்சரிக்கைகள் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கக் கூடியனவாக அமைகின்றன. அதனால் இந்த ஏற்பாடுகளை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

அதேநேரம் நாட்டில் சீரற்ற காலநிலை நிலவும் போது மரக்கறி உள்ளிட்ட உணவு உற்பத்தி பயிர்ச் செய்கை எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களும் பாதிப்புக்களும் பெரிதும் கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையை அடைந்திருக்கிறது. தற்போது உள்நாட்டு சந்தையில் நிலவும் மரக்கறி வகைகளுக்கான பற்றாக்குறைக்கும் அவற்றின் விலைகளில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்புக்கும் சீரற்ற காலநிலையே காரணமாகும்.

ஆனாலும் மரக்கறி வகைகளின் தட்டுப்பாடும் விலை உயர்வும் பல பிரதேசங்களிலும் பேசுபொருளாகவும் உள்ளன. சீரற்ற காலநிலையின் தாக்கமும் செல்வாக்கும் மரக்கறிச் செய்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக பெரும்பாலான மரக்கறிச் செய்கைகள் அழிவடைந்தும் சேதமடைந்தும் உள்ளன. அத்தோடு இக்காலநிலையின் தாக்கம் உரிய விளைச்சலை அளிக்காத நிலையையும் மரக்கறி உள்ளிட்ட உணவுப் பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தி இருக்கின்றன.

இவற்றின் விளைவாகவே நாட்டின் சில பிரதேசங்களில் உள்ள சந்தைகளில் போதியளவில் மரக்கறி வகைகள் இல்லாத நிலைமையும் தற்போதைய சூழலில் சந்தைக்குவரும் மரக்கறி வகைகளின் விலைகளிலும் அதிக அதிகரிப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. இந்நிலைமை மரக்கறி வகைகள் தொடர்பில் பல விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையானது உள்நாட்டுக்கு தேவையான மரக்கறி வகைகளை வருடா வருடம் போதியளவில் பெரும்பாலும் உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

ஆனால் அது வருடம் முழுவதும் சமச்சீராக இடம்பெறக்கூடியதாக இல்லை. அதாவது வருடத்தின் சில மாதங்களில் அபரிமித விளைச்சலை அளிக்கும் மரக்கறி வகைகள் இன்னும் சில மாதங்களில் சீரற்ற காலநிலை உள்ளிட்ட காரணங்களினால் எதிர்பார்க்கும் அறுவடையை அளிக்கத் தவறிவிடுகின்றன. அது மரக்கறி வகைகளுக்கு சந்தையில் தட்டுப்பாட்டு நிலையை ஏற்படுத்துவதோடு, அவற்றின் விலைகளிலும் அதிகரிப்புக்கும் வித்திடுகின்றன.

அதனால் மரக்கறி வகைகளின் அறுவடைகளில் அபரிமித விளைச்சல் கிடைக்கப்பெறும் காலப்பகுதிகளில் அவற்றை நீண்ட காலத்திற்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் சேமித்து களஞ்சியப்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டிய தேவையும் உணரப்படுகிறது. இவ்வாறு சேமித்துக் கொள்ளும் போது சந்தையில் எந்த சூழலிலும் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடோ விலை அதிகரிப்போ ஏற்படாது. இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்பாக உள்ளது.

அதேநேரம் சீரற்ற காலநிலையினால் மரக்கறி உள்ளிட்ட உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்தி எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டிய தேவையும் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. தற்போது மரக்கறி செய்கை அழிவடைந்தும் சேதமடைந்தும் உள்ள போதிலும் அச்செய்கையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கான ஊக்குவிப்புக்கள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக சீ ரற்ற காலநிலை நிலவும் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உணவுப் பயிர்ச்செய்கைகளை ஊக்குவிப்பது அவசியம்.

இல்லாவிடில் மரக்கறி வகைகளையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும். அது நாடு பெருமளவிலான அந்நியச் செலாவணியை இழக்க வழிவகை செய்யும். அது ஆரோக்கியமானதல்ல. நாட்டுக்கு தேவையான மரக்கறி வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு தேவையான இயற்கை வளமும் வசதிகளும் போதியளவில் இங்குள்ளன.

ஆகவே உள்நாட்டு மரக்கறிச் செய்கையை மீளக் கட்டியெழுப்பும் வகையில் ஊக்குவிக்கும் போது நாட்டின் மரக்கறியின் தேவையை குறுகிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றக்கூடியதாக இருக்கும். அதன் ஊடாக அவற்றின் விலைகள் சந்தையில் குறைவடைந்து வழமை நிலைக்கு திரும்பிவிடும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஈழத்துப் பிராந்திய இலக்கியங்களின் களஞ்சியம் பேராசிரியர் யோகராசா

இந்த ஆண்டு செ.யோகராசாவின் மறைவோடு அஸ்தமிப்பது துயரமானது. கொழும்பு பல்கலைக் கழகத்தில் ஒரே காலத்தில் அறிமுகமான நாங்கள், இருவேறு துறைகள் சார்ந்து எமது கல்வி அமைந்திருந்தபோதும், தமிழ் இலக்கிய ஈடுபாட்டால் மிக நெருக்கமானோம்.

செ.யோகராசா தமிழ்மொழியைச் சிறப்புக் கற்கை நெறியாகப் பயின்றவர். நான் பொருளியலைச் சிறப்பாக எடுத்திருந்தேன். தமிழைச் சிறப்பாகப் பயின்று கொண்டிருந்தோருக்கு 'புனைகதை' (Fiction)ஒரு பாடமாக அமைந்தது, கலாநிதி க.கைலாசபதி அப்பாடத்தின் விரிவுரையாளராக வந்தபோது, அவரின் விரிவுரைகளை அவ்வாண்டு முழுதும் நான் தொடர்ந்து கேட்டு வந்திருக்கிறேன். இதனாலும், சித்ரலேகா மௌன குரு, செ.யோகராசா ஆகியோருடனான எனது உறவு நெருக்கமானது.

யோகராசாவை நான் ஒருபோதும் அந்தப் பெயரில் அழைத்ததில்லை. எனக்கு அவர் யோகன். 'கருணையோகன்' என்ற பெயரில் அவர் அப்போதே கவிதைகள் எழுத ஆரம்பித்திருந்தார். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான எங்கள் உறவு அவர் மறையும்வரை தொடர்ந்திருந்தது. என்னைத் தேடி அவர் எனது விடுதிக்கு வருவதும், வெள்ளவத்தையில் அவர் தங்கியிருந்த இடத்திற்கு அவரை நாடி நான் செல்வதும் வழக்கமானவை.



பல்கலைக்கழகக் கல்வி முடிந்த கையோடு நான் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் 'தினகரன்' ஆசிரியர் குழுவில் இணைந்த போது, யோகன் கறுவாக்காட்டில் தபால் நிலையத்தில் பணியில் அமர்ந்தார். வாசிப்பும் தேடலும் மிக்க யோகனுக்கு ஆசிரியர் பணிமட்டுமே உகந்தது என்பது எனது அபிப்பிராயம். ஐந்து, ஆறு ஆண்டுகளுக்குப்பின் அவர் ஆசிரியரானார். மலையகத்தில் சிலகாலம் அவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது, அவருக்குப் புதியதோர் உலகம் தரிசனமானது. மலையகம் அவர் புகுந்த இடமானது. பின்னர் வடமராட்சியில் சில காலம் ஆசிரியத் தொழிலில் கழிந்தது. இந்தக் காலங்களில் அவர் தனது முதுகலைமாணிப் பட்டத்தையும் கல்வி டிப்ளோமாவையும் முடித்து விட்டிருந்தார்.

பேராசிரியர் சி.மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாகத் திகழ்ந்தபோது, யோகன் அங்கு தமிழ் விரிவுரையாளராகப் பதவி பெற்றமை, யோகனின் இலக்கியப் புலமைக்குப் பெருந்தளமிட்டது. மட்டக்களப்பு அவர் மண்ணாகியது. கிழக்கிலங்கையின் இலக்கிய வாசத்தில் அவர் லயித்தார். புதியதலைமுறை எழுத்தாளர்கள் இவரின் முன்னுரைக்கு கியூவில் நின்றனர். கற்றுக்குட்டிகளின் படைப்பிலும் நயம் கண்டு, குறைகளை நோகாமல் சொல்லி, மயிலிறகால் வருடிக்கொடுக்கும் முன்னுரைக்காரராக யோகன் மாறியிருந்தார்.

யோகன் 200 நூல்களுக்கு முன்னுரை கொடுத்திருக்கிறார். அவற்றில், 65 முன்னுரைகள் புதிய எழுத்தாளர்களின் முதற் படைப்புகளுக்கு எழுதப்பட்டவையாகும்.

இலங்கையில் நம் இலக்கிய வாசிப்பிற்குள் வந்து சேராத பல பிராந்தியங்கள், தொழில்முறைகள், சமூக மாற்றங்கள், முரண்பாடுகள் எவ்வளவோ உள்ளன. இவர்களின் வாழ்வியற் கோலங்கள் வேறுபட்டன. தொழில் முறைகள், சமூக உறவுகள், அயலகக் கிராமங்களின் ஊடாட்டங்கள், பொருளாதார முன்னேற்றங்கள், கல்வி வளர்ச்சிகள், அரசியல் நிலைமைகள் என்பன இலக்கியங்களில் இன்னும் போதிய அளவு கொண்டுவரப் படவில்லை.

இத்தகு பிராந்தியங்களில் முகிழ்க்கும் இலக்கிய வெளிச்சங்களை யோகன் அக்கறையோடு அவதானிக்கிறார். இருநூற்றுக்கும் அதிகமாக அவர் எழுதியுள்ள முன்னுரைகள் தொகுக்கப்படும்போது, புதிய இலக்கிய நிலத்தோற்றங்கள் நம் கண்ணில் படும் நல்ல வாய்ப்பு உருவாகும்.

யோகனின் கட்டுரைகள் அளவிற் சிறியன. அனைத்தையும் அவர் bullet points களில் தருவதை வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறார். கொள்ளையான தவல்கள், விபரங்களைக் கொண்ட கிட்டங்கி அவர்.


யோகனின் நுண்ணிய தேடல்கள், பரந்த வாசிப்பு என்பனவற்றிற்கு அவர் தொகுத்தளித்திருக்கும் 'ஈழத்து சிறுவர் அறிவியல் பாடல்கள்', 'ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு', 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்', 'ஈழத்து முச்சந்தி இலக்கியம்', 'ஈழத்துத் தமிழியல்சார் தமிழ் ஆய்விதழ்கள்' ஆகியன அரும்பெரும் சான்றாகும். ஒரு பெரும் நிறுவனம் மட்டுமே செய்து முடித்திருக்கக்கூடிய பணியினை யோகன் தனியொருவராக நின்று, தேடி, திரட்டி, வகைப்படுத்தி, தொகுத்து இலக்கியக் கருவூலங்களாக நமக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார். அத்தகு தேடலும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்ட இன்னொரு ஆய்வாளனை நம் காலத்தில் நாம் இனிக் காண்பதரிது.

இலக்கியமும் வாசிப்புமே யோகனின் மூச்சாக இருந்திருக்கிறது. என்றும் புன்னகை தவழும் முகமும் எளிமையும் எவரையும் புண்படுத்தாத இனிய பாங்கும் மென்மையும் கருணையும் மிகுந்த யோகன் நாம் வாழ்வில் சந்தித்திராத மிகப் பெருஞ் சவால்களை அவர் தன் வாழ்வில் சந்தித்து மீண்டிருக்கிறார் என்பதைச் சொல்லியாக வேண்டும். ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதியான ஆற்றோட்ட வாழ்வாக அவரது வாழ்வு அமைந்திருக்கிறது. உக்கிரமான மோதல்களும் வன்முறைகளும் அபாயமான சூழலும் உயிராபத்துகளும் இனவெறுப்புகளும் அலைமோதிய ஒரு காலப்பகுதியில், ஒரு சித்தனைப்போல அவர் இலக்கியக் கருமமாக்கியவாறு இருந்திருக்கிறார்.



**மு.நித்தியானந்தன்...**

# கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் வெள்ளத்தினால் பெரும் சேதங்கள்!



அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்து வரும் அடைமழை காரணமாக மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளநீர் பெருக்கெடுத்து வருகின்றது. சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் 105 அடிக்கு மேல் உயர்வடைந்ததால், 5 வான்கதவுகள் திறக்கப்பட்டதாக மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சேனநாயக்க சமுத்திரத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து அதன் கீழ் உள்ள கல்லோயா குடியேற்ற விவசாயக் கிராமங்களில் வெள்ளநீர் பெருக்கெடுத்து வருகிறது. இதனால் விவசாயிகள் செய்வது அறியாது சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மாவட்டத்தின் தாழ்நில கரையோரப் பிரதேசங்களான அக்கரைப்பற்று, இறக்காமம், வரிப்பத்தான்சேனை, பொத்துவில், திருக்கோயில், ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை நாவிதன்வெளி போன்ற குடியிருப்புப் பிரதேசங்கள் மற்றும் வயல் நிலங்களில் வெள்ளநீர் நிரம்பியுள்ளது.

அம்பாறை காரைதீவை இணைக்கும் பிரதான வீதியில் மாவடிப்பள்ளியை அண்மித்த பிரதான வீதி மற்றும் அம்பாறை_ சம்மாந்துறை பிரதான வீதியின் வளத்தாப்பிட்டி பிரதேசத்தை குறுக்கறுக்கும் பிரதான வீதி ஊடாக வெள்ளநீர் பாய்ந்து ஓடுவதனால் குறித்த வீதியுடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. கல்முனை நாவிதன்வெளியை இணைக்கும் பிரதான வீதியின் கிட்டங்கி பாலத்திற்கு மேலால் வெள்ளநீர் பாய்ந்தோடுவதனால்குறித்த வீதி ஊடானபோக்குவரத்து தடைபட்டுள்ளதுடன், வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சொறிக்கல்முனை_ சம்மாந்துறை பிரதான வீதி, நாவிதன்வெளி_ வெல்லாவெளியை இணைக்கும் பிரதான பாதையிலும் வெள்ளநீர் பாய்ந்து ஓடுவதனால் மக்கள் தமது அன்றாட பணிகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

"அம்பாறை மாவட்டத்தின் சேனநாயக்க சமுத்திர நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் ஐந்து வான்கதவுகளை சமுத்திரத்தின் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் திறந்துள்ளோம். இதனால்



## வான்கதவுகள் திறக்கப்பட்டதால், வீதிகள் நீரில் மூழ்கின!

அம்பாறை, தமன அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, காரைதீவு போன்ற தாழ்நிலை பிரதேசத்தில் வாழும் பொது மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படுமிடத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கு மாவட்ட செயலகத்தின் ஊடாக முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதால் ஆறுகள் குளங்களில் மீன் பிடிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று வெள்ளநீரில் விளையாடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு சகல பொதுமக்களையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட அனர்த்த மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் எம். ஏ.சி.எம் றியாஸ் குறிப்பிடுகையில் "தற்போது அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை மற்றும் காலநிலை மாற்றத்தின் காரணமாக அனர்த்த ஆபத்திலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்க் கொள்வதுடன் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக இதுவரை 5848 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2749 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துள்ளனர். 88 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் சம்மாந்துறை பிரதேசத்தில் கடந்த 31 ஆம் திகதி வீசிய மினிசூறாவளி மற்றும் கனமழை காரணமாக 4 நபர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்" என்று தெரிவித்தார்

இங்கு மாலை வேலைகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. சம்மாந்துறை அல் அஸ்றக் மகா வித்தியாலயத்தில் பாரிய மரம் சரிந்து வீழ்ந்ததால் கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

சேனநாயக்க சமுத்திர வான்கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து ரம்புக்கன நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இதனால் அல்பிட்டிய, விபுல போன்ற பிரதேசங்களிலும் வெள்ளநீர் வழிந்தோடுகிறது. இதனால் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதேவேளை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் உள்ள மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்போடு காணப்படுவதனால் வள்ளங்கள், தோணிகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன கரையில் இருந்து நீண்ட தூரத்திற்கு அப்பால் பாதுகாப்பாக தரித்து வைக்கப் பட்டுள்ளன. இதனால் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். கரையோரத்தின் பல பிரதேசங்கள் கடல் அலைகளினால் காவு கொள்ளப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் கட்டட இடிபாடுகள் ஏற்பட்டுள்ளதுடன், கரையோரத்தில் நின்ற தென்னை மரங்கள் கடலுக்குள் விழுந்துள்ளன.

**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
(பெரியநீலாவணை விசேட நிருபர்)

# அதிகஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு உதவிகள் வழங்கிய 'வரலாற்று விழுதுகள்' அமைப்பினர்

'வரலாற்று விழுதுகள்' அமைப்பின் வருட இறுதி ஒன்றுகூடலும், அதிகஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேத்தில் நடைபெற்றன.

'வரலாற்று விழுதுகள்' அமைப்பினால் வறுமையை ஒழித்து கற்றலுக்கு உதவும் திட்டத்தின் அடிப்படையில் அமைப்பின் தலைவர் தவலிங்கம் ஐங்கரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அதிகஷ்டப் பிரதேச பாடசாலையான 39ஆம் கிராமத்திலுள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப் பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருவருள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





'வரலாற்று விழுதுகள்' அமைப்பினர் மேற்கொண்டு வருகின்ற சமூகநலப் பணிகளுக்கு இந்நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்ற மாணவர்களும் பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# மேல், மத்திய மாகாண டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் வெற்றி

## பங்களித்தவர்களுக்கு ஜனாதிபதி பாராட்டு

மேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வு கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் (02) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.



ஜனாதிபதி அலுவலகத்தின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலை பின்பற்றி முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு தொற்று அதிகமாக காணப்படும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு டெங்கு ஒழிப்பு மற்றும் அது குறித்த விழிப்புணர்வு தொடர்பிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் காரணமாக டெங்கு பரவல் குறிப்பிடத்தக்க அளவில் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் டெங்கு நோய் பரவல் குறித்து கவனம் செலுத்த வேண்டியிருப்பதாகவும், பாடசாலை, வழிப்பாட்டுத் தலங்கள், பொது இடங்கள், தனியார் நிறுவனங்களை அண்டிய பகுதிகளில் அதிகளவில் டெங்கு பரவல் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது.

பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் டெங்கு ஒழிப்புக்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஜனாதிபதி பாராட்டுத் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்புக்காக சுகாதார அமைச்சின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படும் பிரிவொன்றை நிறுவவும், அதற்கு உரிய அதிகாரிகளை நியமிக்கவும் சுகாதார அமைச்சின் செயலாளர் தலைமையில் முப்படை பிரதானிகள் மற்றும் பதில் பொலிஸ்



மாஅதிபரின் பங்கேற்புடன் நேற்று (03) விசேட சந்திப்பொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதனூடாக நாடளாவிய ரீதியிலான டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மற்றும் அதன் நாளாந்த முன்னேற்றம், எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் அறிவிப்பதற்கான முறைமை தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோருடன் கொழும்பு மாநகர சபை, கல்வி மற்றும் சுற்றாடல் அமைச்சுகளின் பிரதிநிதிகளும் Zoom தொழில்நுட்பத்தின் வாயிலாக இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

---

மலர்ந்துள்ள 2024 புத்தாண்டில்

# கடற்றொழிலாளர்களின் நலன் கருதி அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் கடற்றொழிலாளர்களின் நலன் கருதி எட்டாயிரத்து எண்ணூறு மில்லியன் ரூபா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக கடற்றொழில் சமூகத்திற்காக தமது அமைச்சினால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அதன் பொருட்டு அமைச்சின் புதிய செயலாளர் உள்ளிட்ட ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயல்படுவார்களென எதிர்பார்ப்பதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



புத்தாண்டை முன்னிட்டு அமைச்சில் கடமைகளை ஆரம்பிக்கும் (01) நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் தமக்கு பல்வேறு வகையிலும் உறுதுணையாக இருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான சனத் நிசாந்த, கஞ்சன விஜேசேகர, டி.வி. சானக்க மற்றும் தற்போதைய இராஜாங்க அமைச்சரான பியல் நிசாந்த ஆகியோரை இச்சந்தர்ப்பத்தில் தான் நன்றியுடன் நினைவு கூர்வதாகவும் தெரிவித்த அமைச்சர், கடந்த 04 வருடங்களாக சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள முன்னாள் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க தமது அமைச்சின் முன்னேற்றத்திற்காக பாரிய சேவையாற்றியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



இனிவரும் காலங்களில் அனைத்து ஊழியர்களும் தமது கடமைகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் கிடைப்பதற்கு பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை அபிவிருத்தி செய்யும் செயல் திட்டங்களுக்கு கடற்றொழில் அமைச்சு அனைத்து ஒத்தழைப்புகளையும் வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

---

# சமூக நல்வாழ்வை மேம்படுத்த கிழக்கில் 101 சமூகநலத் திட்டங்கள் அங்குரார்ப்பணம்

2024 ஆம் வருடத்தில் கிழக்கு மாகாண மக்களின் சமூக நல்வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு 101 சமூக நலத்திட்டங்கள் அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

குறித்த சமூகநலத் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டுக்காக கிழக்கு மாகாண ஆளுநரால் 48223 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக உள்ளூராட்சி அமைப்புகளை டிஜிட்டல் மயமாக்கல், பொதுப்பயன்பாட்டிற்காக உள்ளூராட்சி அமைப்புகளில் நிகழ்நிலை சேவைகளை தொடங்குதல், உள்ளூராட்சி சேவைகளுக்கான சேவை கையேட்டை ஆரம்பித்தல், திருகோணமலை நகரசபையின் நிகழ்நிலை கட்டணம் செலுத்தும் முறைமையை அறிமுகம் செய்தல், பெண்கள் அபிவிருத்தி பயிற்சி நிலையங்களுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் கணினிகள் விநியோகித்தல், தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், பஸ் போக்குவரத்துக்கான மின்னியல் பயணச்சீட்டு இயந்திரம் வழங்குதல் போன்ற பல்வேறு சமூகநலத் திட்டங்கள் கிழக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தங்களது நாளாந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் அவர்களது வாழ்வினை சிறப்பாக முன்கொண்டு செல்வதற்காகவும்





முச்சக்கர, துவிச்சக்கர வண்டிகளும் மற்றும் சக்கரநாற்காலிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இத்திட்டத்தின் ஓர் அங்கமாக கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற சமயத் தலங்களுக்கு தலா ரூபா 100000 பெறுமதியான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும் பாதிப்புக்கு உள்ளாகிய குடும்பங்களுக்கு தங்களது சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக ஆளுநர் நம்பிக்கை நிலையத்தில் இருந்து தலா ரூபா 25000 ரூபா பெறுமதியான காசோலையும் பல குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் அவர்களது அன்றாட செயல்பாடுகளை எவ்வித தடைகளும் இல்லாமல் மேற்கொள்வதற்காகவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இச்சமூக நலத்திட்டங்களினூடாக கிழக்கு மாகாணம் நிச்சயமாக இவ்வருட இறுதியில் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்து இலங்கையின் ஒரு முன்னுதாரணமான மாகாணமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என சமூக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இவ்வாறான சமூகநல திட்டங்களை கிழக்கு மாகாணத்தினை அடிப்படையாகக் கொண்டு பல சர்வதேச நாடுகளின் உதவிகளுடனும் இலங்கை அரசாங்கத்தின் நிதி உதவியுடனும் மேற்கொள்வதற்கான திட்டங்களை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துகின்ற கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு கிழக்கு மாகாண மக்களின் சார்பாக தங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கிழக்கு மாகாண சமூக ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அப்துல் கபூர்
(அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்)

---

# கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கௌரவிப்பு





கல்முனை பிரதேசம் சுகாதாரத் துறையில் தேசிய மற்றும் மாகாண ரீதியாக சிறந்து விளங்குவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தர முகாமைத்துவப் பிரிவினால் குறித்த பாராட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது பிராந்திய சுகாதாரத் துறைக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என சகலரும் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

தொழில்சார் சுகாதாரமும் தர முகாமைத்துவமும், அலுவலக மனிதவள முகாமைத்துவம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் ஊடாக நோயாளர் பராமரிப்பு எனும் தலைப்புக்களில் இந்நிகழ்வின் போது விரிவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

தர முகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், சுகாதார தகவல் முகாமைத்துவ பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜிப் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விரிவுரையாற்றினர்.

குறித்த பாராட்டு நிகழ்வினை வெற்றிகரமாக நடத்துவதற்கு உழைத்த தர முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம். ஹில்மி, பணிப்பாளர் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்களினால் இந்நிகழ்வின் போது பாராட்டி நினைவுச் சின்னம் மற்றும் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஏ. எல். றியாஸ்
(பாலமுனை விசேட நிருபர்)

---

# விஜயகாந்த்தை விட்டு ராவுத்தர் விலகுவதற்கு காரணம் பிரேமலதா!

## கப்டனின் சாரதி கூறும் தகவல்!



விஜயகாந்த் மறைவுக்குப் பிறகு பலரும் மௌனத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படித்தான் வெங்கடேஷ். இவர் விஜயகாந்த்திடம் 30 வருடங்களுக்கு மேலாக சாரதியாக இருந்தவர். அத்துடன் கூடவே இருந்தவர். விஜயகாந்தை அதிகம் அறிந்தவர். தனது முதலாளி பற்றி அவர் இப்போது பேச ஆரம்பித்திருக்கிறார்.

'ஒருநாள் கூட அவர் என்னை வேலைக்காரனாக நினைத்துப் பேசியதே கிடையாது. அவர் எனக்கு அண்ணன் மாதிரிதான். ஹோட்டல் அறைகளில் தங்கி இருந்தபோது கூட என்னைத் தரையில் படுக்க விடமாட்டார். அவருடன் ஷோபாவில் தான் படுக்க அனுமதிப்பார். அவர்தான் என்னை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றார். ஒருநாள் கூட நான் இது வேண்டும் என்று அவரிடம் கேட்டதில்லை. அவரே பார்த்துப் பார்த்து என்னைக் கவனித்துக் கொண்டார்" என்கிறார் வெங்கடேஷ்.

"நான் முதன்முதலாக இப்ராஹிம் ராவுத்தர் மூலமாகத்தான் விஜயகாந்த்தைச் சந்தித்தேன். அவர் தான் என்னை சாரதியாக வேலைக்குச் சேர்த்தார். சென்னையில்தான் வேலையில் சேர்ந்தேன். அவர் தான் விஜயகாந்த்திடம் சொல்லி என்னை அவரது சாரதியாக இருக்கச் சொன்னார். அப்போது விஜயகாந்த், 'என்னோட ரசனைக்கு தகுந்த மாதிரி இவர் ஓட்டுவாரா? நான் பார்க்க வேண்டாமா?' எனக் கேட்டார்.

அதற்கு ராவுத்தர், 'உன் டேஸ்ட் எனக்குத் தெரியும். இவன் நல்லா ஓட்டுவான். நான் சொல்கிறேன் வைத்துக்கொள்' என்றார்.

அன்று முதல் 30 வருடங்களாக நான் தான் விஜயகாந்த் சாரதிர்" என்றபடி பேசத் தொடங்குகிறார் வெங்கடேஷ்.

"நானும் கேப்டனும் முதன்முதலாக காரில் போனது மீனாட்சி திருவிளையாடல் ஷூட்டிங் ஸ்பாட்டுக்குதான். இந்தப் படத்தை கே.சங்கர் இயக்கினார். இதன் ஷூட்டிங் விஜிபி பீச்சில் நடந்தது. இந்தப் படம் 1989இல் வெளியானது. போகும்போதே கேப்டன், 'தம்பி வேகமாக ஓட்ட வேண்டும்' என்றார். நான் சாரதி மட்டும் இல்லை. மெக்கானிக்கும் கூட. ஆகவே, அடித்துத் தூக்கி வண்டியை ஓட்டினேன்.

அவருக்கு அது பிடித்துவிட்டது. மேக் அப் ரூம் உள்ளே சென்றதும், ராவுத்தருக்கு தொலைபேசி எடுத்தார். 'சூப்பர் பையன்டா. நான் இவனையே வைத்துக் கொள்கிறேன்' என்றார். அன்று தொடங்கியது அவருடனான பயணம்.

அவருக்கு நாய்கள் மீது அவ்வளவு பிரியம். வீட்டில் கூட நிறைய நாய்கள் வளர்த்தார். அவரது மகனுக்கும் நாய்கள் மீது பிரியம் அதிகம். என்னை விட வேகமாக கார் ஓட்டுவார் கேப்டன். அவர் வண்டி ஓட்டும்போது பயப்படக் கூடாது என்பார். வண்டி போனாலும் பரவாயில்லை. நம்ம பாதுகாப்புதான் முக்கியம். ஆகவே, வண்டிக்கு அடிப்பட்டுவிடும் என்று பயப்படாதே என்பார்" என்கிறார் வெங்கடேஷ்.

விஜயகாந்தின் மதுப்பழக்கம் பற்றிக் கேட்டதற்கு, "உலகத்தில் குடிக்காத மனிதர் யார் உண்டு? அவர் மிகக் கடுமையாகச் சண்டைக்காட்சிகள் செய்வார். அவரைப் போலக் கடினமான சண்டைக்காட்சிகளில் ஈடுபடும் நடிகர்கள் யாருமே இல்லை. டூப் கூட போடமாட்டார். அவருக்கு மதுப்பழக்கம் இருந்தது. ஆனால், இவர்கள் சொல்வதைப் போல் அவர் அடிமையாக இல்லை. அப்படிச் சொல்வர்கள் அவரை அறியாதவர்கள், தெரியாதவர்கள். ஏதேதோ உளறுகிறார்கள். அதில் உண்மை இல்லை. காலையிலேயே எழுந்த உடன் உடற்பயிற்சி செய்வார். அதை எப்போதும் அவர் விட்டது இல்லை. அவரது காலைப் பிடித்துத் தூக்கச் சொல்வார். அதை நெற்றிவரை கொண்டுவந்து தொடுவார். அப்படிச் செய்வது கடினம். அந்தளவுக்குப் பயிற்சி செய்ததால்தான் காலை வைத்து அவரால் அப்படி சண்டைக்காட்சிகளில் நடிக்க முடிந்தது.


கல்யாணத்திற்கு முன்புவரை எங்களுக்குச் சம்பளம் கொடுப்பது, வரவு செலவு கணக்குகளைப் பார்ப்பது எல்லாம் ராவுத்தர்தான் செய்தார். கல்யாணத்திற்குப் பின் அண்ணி வந்துவிட்டார். ஆகவே, அவர் பல விசயங்களைக் கவனிக்கத் தொடங்கினார். அப்படித்தானே எல்லோர் வீட்டிலும் நடக்



கும். அதுதான் கேப்டன் வீட்டிலும் நடந்தது. இதில் ஒரு புதுமையும் இல்லை. அந்த மாற்றம் வந்த பிறகு ராவுத்தர் விலகல் உருவானது. திருமணத்திற்கு முன் கேப்டனை ரவுத்தார் எப்படிப் பார்த்துக் கொண்டாரோ அதைப்போல பின்னால் அண்ணி பார்த்துக் கொண்டார். அதுதானே இயற்கை" என்கிறார் வெங்கடேஷ்.

# வெலிகம அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா காலமானார்

## நல்லடக்கம் இன்று இந்தியாவில்



வெலிகமையைச் சேர்ந்த அத்தரீக்கதுல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் ஆன்மீக தலைவர்சங்கைக்குரிய அஷ்ஷேக் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹ¬ைஸனிய்யுல் ஹாஷிமிய்யி அவர்கள் நேற்று (3/1) தனது 86ம் வயதில் காலமானார். பிரபலமார்க்க அறிஞர் மர்ஹூம் அஷ்ஷேக் ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமி (ரஹ்) தம்பதிகளின் அன்புப் புதல்வரும் இலங்கையின் முதல் அறபுக் கல்லூரியான வெலிகம கல்பொக்கையில் அமைந்துள்ள பாரி அறபுக் கல்லூரியில் நீண்ட காலம் அதிபராக கடமையாற்றிய மர்ஹூம் அல் ஹாபிழ் அஷ்ஷேக் ஏ.ஆர் ஸகரிய்யா ஆலிம் அவர்களின் மருமகனான இவரது ஜனாஸா நல்லடக்கம் இன்று (4/1) இந்தியாவில் இடம் பெறவுள்ளது.

## மழையுடனான காலநிலை இன்னும்...

பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில், காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## இன்றைய பலன்கள்

**( 04. 01. 2024 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. ஆயினும் இது போன்ற காலங்களில் மனக்கலக்கம் கொஞ்சம் அதிகரிக்க தான் செய்யும்.

**ரிஷபம்:**
இடம், பூமி சேர்க்கை வீடு கட்டும், கட்டிய வீட்டை பழுது பார்க்கும் யோகம் உண்டு. பழைய வாகனங்களை கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். வீடு இடம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளின் ஆதரவு திருப்தி தரும்.

**கடகம்:**
பொருளாதார பற்றாக்குறையை சமாளிக்க கடன் வாங்கும் சூழல் உண்டு. வீடு,இடம் சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முடிவு வெற்றி தரும்.

**சிம்மம்:**
உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றம் கிடைக்கும். அலுவலகப் பணி சார்பாக அடிக்கடி பயணங்களும் ஏற்படும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**கன்னி:**
வீடு மாற்றம் இடமாற்றம் எதிர்பார்த்த விதத்தில் வரலாம். வாடகை வீட்டில் வசிப்பவர்கள் சொந்த வீட்டில் குடியேறு வாய்ப்பு கிட்டும்.

**துலாம்:**
புதிய வாகனங்கள் வாங்கி பயணிக்கும் வாய்ப்பு கைகூடும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். கைநழுவிச் சென்ற வரன்கள் மீண்டும் வரலாம்.

**விருச்சிகம்:**
வீடு வாங்கும் யோகம் வந்து சேரும். வெகு நாட்களாக எதிர்பார்த்த காரியங்கள் ஒவ்வொன்றாக முடியும். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு:**
பிள்ளைகளின் கல்யாண கனவுகள் நனவாக வழி பிறக்கும். பிள்ளைகள் வழியில் பெரும்விரயம் ஏற்படலாம்.

**மகரம்:**
அரசு சார்ந்த பணிகளில் சிறந்த விண்ணப்பித்திருப்பவர்களுக்கு அது கைகூடும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

**கும்பம்:**
சக பணியாளர்களால் சிறு சிறு தொல்லைகள் ஏற்படலாம். தொழில் நடத்துபவர்களுக்கு போதிய மூலதனம் இல்லாமல் புதிய பங்குதாரர்களை சேர்க்க விரும்புவர்.

**மீனம்:**
தேவைகள் பூர்த்தியானாலும் கூட சில சமயங்களில் மனக்குழப்பம் அதிகரிக்கும். தந்தை வழியில் இருந்து விரிசல் அகலும்.

## விசேட யுக்திய சுற்றிவளைப்புக்கள்...

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பட்டியலிலிருந்த 138 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விசேட நடவடிக்கையின் போது,

ஹெரோயின் 287 கிராம்,

ஐஷ் 246 கிராம், கஞ்சா 05 கிலோ 400 கிராம், கஞ்சா செடிகள் 19,052, மாவா தூள் 104 கிராம், ஏஷ் 95 கிராம், போதை மாத்திரைகள் 119 என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## வரிக்கோவை இலக்கம் சமர்ப்பித்தல்...

வரப்படுமென நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. அதேபோன்று வரி இலக்கத்தை பெற்றுக் கொண்டோர் அனைவரும் வரியை செலுத்துவதற்கு கடமைப்பட்டவர்களல்ல, என்பதையும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வருடாந்த வருமானத்தினடிப்படையில் 12 இலட்சத்தை விட அதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்களே இந்த வரி செலுத்துவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

எவ்வாறெனினும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தம்மை பதிவு செய்துகொள்வது அவசியம். வருடாந்த வருமானம் 12 இலட்சத்தை விட அதிகரிக்குமானால் ஒரு நபரோ அல்லது நிறுவனமோ வரி செலுத்த கடமைப்பட்டுள்ளனர்.

18 வயதுக்கு மேற்பட்டோர் தம்மைப் பதிவு செய்து வரி இலக்கத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தவறான பிரசாரங்கள் இடம் பெற்று வருகின்றன.

## புது வருடத்தின் முதலாவது...

அலுவலகம் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), தேசிய நீரளவை சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு), கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டமூலத்தின் கீழ் 2355/30ஆம் இலக்க வர்த்தானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 2334/55ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி என்பன, விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், இலங்கை பட்டய கப்பல் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறிகள் திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன இரண்டாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து பி.ப 05.00 மணி முதல் பி.ப 05.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை (ஆளும் கட்சி) மீதான விவாதம் நடைபெறவுள்ளது. 10ஆம் திகதி புதன்கிழமை, மு.ப 09.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (04 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.00 மணி முதல் 10.30 மணி வரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக (05 கேள்விகள்) ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் பி.ப 05.00 மணிவரை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பில் 2023 நவம்பர் 08ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தின் இரண்டாவது நாள் விவாதம் நடத்தப்படவுள்ளது. அன்றையதினம், மத்தியஸ்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்று அங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம், அற்றோனித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம், மத்தியஸ்த சபை (திருத்த) சட்டமூலம், மோசடிகளைத் தடுத்தல் (திருத்த) சட்டமூலம், நொத்தாரிசு (திருத்த) சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறவுள்ளது.

## எமது மக்களின் நம்பிக்கையை...

அரசியல் தலைவர்களை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் வடக்குக்குக்கான உத்தேச விஜயமும் செயற்பாட்டளவில் அமைந்தால், ஒத்துழைப்பை வழங்குவோம்.

நீண்ட காலமாக தீர்க்கப்படாமலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ் வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. தமிழ் தலைவர்கள் இணைந்து கூறினால் வேட்பாளராகக் களமிறங்குவது குறித்து பரசீலிப்னபேன் .

வழமையாக ஜனாதிபதி வடக்குக்கு விஜயம் செய்யும் போது அவரை சந்தித்து தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவேன். ஆனால் இம்முறை சுகயீனம் காரணமாக ஜனாதிபதியை சந்திப்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கவில்லை. நல்லிணக்கம் தொடர்பில் ஒவ்வொருவராலும் காலம் காலமாக பேசப்பட்டு வருகின்றதே தவிர, எவரும் அதனை நடைமுறையில் செய்ய முடிக்கவில்லை. ஒரு தரப்பினர் ஒரு யோசனையை முன்வைக்கும் போது மறுபுறம் சிங்கள பெரும்பான்மை கட்சிகள் அதனை எதிர்க்கும் நிலைமையே காணப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி அதனை நடைமுறை சாத்தியமாக்கினால், அதை நாம் வரவேற்போம். ஆனால் அது எந்த முறையில் செய்யப்படும் என்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை. மார்ச்சில் இதற்கான தீர்வு வழங்கப்படும் என்றால், அதற்கு முன்னர் தேர்தலுக்கான அறிவிப்புக்கள் வெளியாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

## 2,258 பரீட்சை நிலையங்களில்...

பரீட்சைகள் எதிர்வரும் (31) வரை நடைபெறுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இன்று ஆரம்பமாகும் பரீட்சையில் 03 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

அவர்களில் 02 இலட்சத்து 81 ஆயிரத்து 445 மாணவர்கள் பாடசாலை மட்டத்திலும் 65 ஆயிரத்து 531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தியுள்ள பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சாத்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையதளம் ஊடாக அதனை தரவிறக்கம் செய்ய முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதே வேளை, நாடளாவிய ரீதியில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் பரீட்சைகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில், தேவையான நடவடிக்கைகளை பரீட்சைகள் திணைக்களமும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

அது தொடர்பில் ஒருங்கிணைப்பு முறை தயாரிக்கப்பட்டு உரிய வழிகாட்டுதல்களை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுமாயின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் 1911 என்ற இலக்கத்துக்கோ தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதே வேளை, நாட்டின் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய பிரதேசங்களில் வழமையான பரீட்சை நிலையங்களுக்கு பதிலாக மாற்று பாடசாலைகளை தயார்படுத்துவதற்கான வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், அனுராதபுரம் கெகிராவை, பொலனறுவை, அம்பாறை, பஸ்ஸர, மட்டக்களப்பு மற்றும் ஹசலக்க ஆகிய பிரதேசங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மாணவர்களுக்காக பொலனறுவை வெலிக்கந்தை, அரலஹங்வில மற்றும் திம்புலாகல பிரதேசங்களில் வசிக்கும் பரீட்சாத்திகளை கவனத்திற் கொண்டு விசேட பரீட்சை நிலையம் மன்னம்பிட்டி சிங்கள மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 2024 முதல் காலாண்டு முடிவில்...

தெரிவிக்கும்போதே, அமைச்சர் நளின் பெர்ணான்டோ இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நளின் பெர்ணான்டோ,

2024ஆம் ஆண்டை பொருளாதார வேகத்துடன் ஆரம்பிக்கின்றோம். இந்த ஆண்டின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75% குறைக்கப்படும். தற்போதுள்ள வரிக் கொள்கையால், எதிர்காலத்தில் பல சலுகைகள் கிடைக்குமென உறுதி செய்ய முடியும்.

வரி விதிப்பு தவறு என்று யாராவது கூறினால், அவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரானவர் என்பதைக் குறிப்பிட வேண்டும். நாட்டிற்குக் கிடைக்கும் வரி வருமானத்தில் இருந்து நாட்டின் எதிர்காலத்துக்காக முதலீடுகள் செய்யப்படுமானால், அதற்குத் துணை நிற்க வேண்டியது ஒட்டுமொத்த மக்களின் பொறுப்பாகும்.

நாட்டின் வருமானம் குறைவு, வரி அதிகம் என்று ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். மொத்தமாக எடுத்துக்கொண்டால், எமது நாட்டில் 12% என்ற அளவிலேயே வரி வசூலிக்கப்படுகின்றது. ஆனால் நாட்டை விட்டு வெளியேறி தொழிலுக்காகச் செல்லும் நாடுகளின் வரி சதவீதம் 38% முதல் 43% அளவில் உள்ளது. அந்நாடுகளில் இத்தகைய வரிவிதிப்பு முறைகள் இருப்பதனால் அந்நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வெங்காய ஏற்றுமதியை இந்தியா நிறுத்தியதால், நாட்டிற்கு அதிக சுமை ஏற்பட்டுள்ளது. ஆனால் அடுத்த இரண்டு வாரங்களில் வெங்காய ஏற்றுமதியை இந்தியா எளிதாக்கிய பிறகு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

எனினும், வற் மற்றும் வரி அதிகரிப்பு தொடர்பாக எவ்வித ஆய்வும் மேற்கொள்ளாமல், ஊடகங்கள் மூலமாகவும், பல்வேறு வழிமுறைகள் மூலமாகவும் முறையற்ற வகையில் விளம்பரம் செய்வதே எமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு என நம்புகின்றோம். இந்நிலையில் இடைத்தரகர்களும், நிறுவனங்களும் தமது விருப்பத்துக்கு விலையை உயர்த்துவதால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், லங்கா சதொசவினால் 05 புத்தம் புதிய மெகா (mega) விற்பனை நிலையங்களையும் 10 சாதாரண லங்கா ச.தொ.ச விற்பனை நிலையங்களையும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருட இறுதிக்குள் லங்கா ச.தொ.ச விற்பனை நிலைய வலையமைப்பை 500 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், லங்கா ச.தொ.ச நிறுவனத்தின் மொத்த வருமானத்தை சுமார் 70 பில்லியன் ரூபாவாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது . இதன் மூலம் நாட்டின் பொருளாதார சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் நிறுவனத்தின் மொத்த இலாபம் 1.5 பில்லியன் ரூபாவாகவும், நிகர இலாபம் 500 மில்லியன் ரூபா வரை பாதுகாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு மானிய விலையில் தட்டுப்பாடு இன்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை வழங்கும் நோக்கிலேயே சதொச விற்பனை நிலைய வலையமைப்பு 500 ஆக விரிவுபடுத்தப்படவுள்ளது.

2024 ஆம் ஆண்டில், நுகர்வோர் அதிகார சபைக்கான புதிய வேலைத்திட்டமொன்றை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## நியூசிலாந்தில் இலங்கை... (03ஆம் பக்க தொடர்ச்சி)

தற்போதைய அரசாங்கம் நெருக்கடி நிலையை சிறப்பாக முகாமைத்துவம் செய்தமையால் தற்போது சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருவதாகவும் உயர்ஸ்தானிகர் நினைவு கூர்ந்தார். முதலில் வெளிவிவகார அமைச்சராகவும் பின்னர் பிரதமராகவும் கொழும்பில் தங்கியிருந்த காலப்பகுதியில் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கியமைக்காக அவர் பிரதமருக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் அரசாங்கத்துறை சீர்திருத்த திட்டத்துக்கு நிபுணத்துவத்தை வழங்கியமைக்காக நியூசிலாந்துக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொள்ள இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகள், கடன் மறுசீரமைப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## தொழிற்சங்க தலைவருடன்...

இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், நேற்று நண்பகல் 12 மணிமுதல் அவர்களின் சேவையை இடைநிறுத்தி கட்டாய விடுமுறை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் அத்துல கல்கெடிய தெரிவித்துள்ளார்.

மேற்படி தொழிற்சங்கம் கட்டுநாயக்க விமான நிலையம் உள்ளிட்ட இலங்கையில் இயங்கும் ஏனைய அனைத்து சர்வதேச விமான நிலையங்கள், பீதுறுதாலகால ரேடார் மத்திய நிலைய ஊழியர்களையும் இணைத்துக் கொண்டுள்ளதாக விமான நிலைய ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் தம்மிக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் விமான பயண தொடர்புகளைக் கொண்டுள்ள அனைத்து விமான சேவைகளையும் சிக்கலுக்குள்ளாக்கி அதனை சீர்குலைக்கும் நோக்கத்தில் இந்த தொழிற்சங்கத்தின் செயலாளர் மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட கட்டாய விடுமுறை கடிதத்தில் விமான நிலைய தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## இத்தாலியிலிருந்து அனுப்பப்பட்ட...

அதிக பெறுமதியுடைய 04 கிலோவுக்கும் அதிகமான ஹசீஸ் போதைப் பொருள், சுங்கத்துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த போதைப் பொருள் அடங்கிய பார்சலை விடுவிக்க வருகை தந்திருந்த முகவர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உணவுப் பொருள் அடங்கிய பார்சல் என்ற போர்வையில் அனுப்பப்பட்டுள்ள இந்த பார்சலை, சீதுவை செரண்டிப் விமானப் பொருட்கள் விடுவிப்பு நிறுவனத்திலிருந்து சுங்கத்திணைக்களத்தின் வருமான கண்காணிப்பு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். உணவுப் பொருட்கள் அடங்கிய பார்சல் என்ற பெயரில் இவ்வாறு இத்தாலியிலிருந்து அனுப்பப்பட்டிருந்த பார்சலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4.091 கிலோ ஹசீஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் இதன் பெறுமதி 61. 36 மில்லியன் ரூபா என்றும் சுங்கத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நான்கு நாள் விஜயமாக...

மீனவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

அதேவேளை, இன்றைய தினம் வடக்கில் 250 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள பாலியாறு நீர் விநியோகத் திட்டத்தையும் அவர்,ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாண மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படவுள்ளன.

பல்கலைக்கழக உப வேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடங்களின் விரிவுரையாளர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ள ஜனாதிபதி, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் சர்வ மதத் தலைவர்கள் மற்றும் மீனவர் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

## பாக். பாதுகாப்பு செயலர்...

பாதுகாப்பு தலைமையகத்தில் நேற்று (03) நடைபெற்ற மூன்றாவது இலங்கை பாகிஸ்தான் பாதுகாப்பு கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக அவர் இலங்கை வந்துள்ளார்.

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சிநேகபூர்வமாக வரவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரட்ண உள்ளிட்டவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

## போதகர் ஜெரோம்...

ரூபா பிணை மற்றும் 10 மில்லியன் ரூபா சரீரப் பிணைகள் இரண்டிலும் விடுதலை செய்துள்ளது. எனினும், அவரது வெளிநாட்டுப் பயணத்தடை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்பான வழக்கு விசாரணை கடந்த (20) உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்டபெந்தி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது இந்த வழக்கு நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமது குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட போதகர், சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் மன்னிப்புக் கோரி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வட்டுக்கோட்டை இளைஞன்...

அலெக்ஸ் எனும் இளைஞன் சித்திரவதைகளுக்குள்ளாகி கடந்த நவம்பர் 19இல், உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. மன்றுக்கு கிடைத்த இளைஞனின் பிரேத பரிசோதனை அறிக்கையில்,சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞனின் உடலில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

அத்துடன் வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் இளைஞனின் உயிரிழப்பு, மனித ஆட்கொலை என மரண விசாரணை கட்டளையின் போது நீதவான் குறிப்பிட்டார். மேலும் இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்ததாக தெரிவித்தார்.இதுவரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ளதுடன் மற்றைய சந்தேக நபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்பட்து. கைதாகி,விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் விளக்கமறியலை எதிர்வரும் (16) வரை நீதவான் நீடித்துள்ளார்.

## கொழும்பு, கொம்பனி வீதியில் இயங்கும்

# மல்ஹருள் இஸ்லாம் சங்கத்தின் 90ஆவது ஆண்டு வருடாந்த நிகழ்வு















**(அஷ்ரப் ஏ சமத்)**

கொழும்பு 2, கொம்பனி வீதியில் இந்திய முஸ்லிம்களால் 1933ல் மல்ஹருள் இஸ்லாம் சங்கத்தின் (Malharul Islam Association) பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் சிறார்களின் ஆன்மீக கல்வி மற்றும் பாலர் பாடசாலைக் கல்விக்காக இவ் கல்வி நிலையத்தினை ஆரம்பித்து வைத்தார்கள்.

இப்பிரதேசத்தில் வசதி குறைந்த மக்களது ஆன்மீகக் கல்விக்காக 75க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தமது பாடசாலை முடிந்து வீடு வந்ததும் மார்க்கக் கல்வியை பயிலுவதற்காக இங்கு வந்து ஆன்மீக கல்வியை மாணவர்கள் பயின்று வருகின்றனர். இக் கல்வி நிறுவனம் ஆரம்பித்து இன்று 90 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இந்நிறுவனத்தின் 90வது நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி மற்றும் கவிஞருமான டொக்டர் தாசீம் அஹ்மத் கலந்து கொண்டார். இங்கு இடம் பெற்ற நிகழ்வுகளில் வெற்றி பெற்ற சகல மாணவர்களுக்கும் வெற்றிக் கிண்ணமும் மற்றும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. கடந்த 45 வருட காலமாக கொம்பனி வீதி பிரதேச மக்களுக்கு ஆற்றும் வைத்திய சேவைக்காக டாக்டர் தாசீம் அஹமது மற்றும் சங்கத்தின் நிர்வாகத்தினரும் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டனர்.

கடந்த காலங்களில் கொவிட் மற்றும் நாட்டில் ஏற்பட்ட சில அசம்பாவித சூழ்நிலைகளினால் இக் கல்வி நிலையம் மூடப்பட்டிருந்தது. அதனை மீள் திறந்து இப் பிரதேச வாழ் மக்களது சிறார்களின் மார்க்க கல்வியை மற்றும் பாலர் பாடசாலைக் கல்வியையும் புகட்டி இப் பிரதேச மாணவ மாணவிகளை சிறந்த நல்ல பிரஜைகளாக மாற்றுவதற்கும் இச் சங்கம் தம்மை அர்ப்பணிப்பதையிட்டு டொக்டர் தாசீம் அஹமத் பாராட்டுத் தெரிவித்தார்.

---

சகோதரன் மீது கோடரி தாக்குதல்;

## காயமடைந்த நபர் உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

மனைவியின் 63 வயது மூத்த சகோதரனை கோடரியால் தலையில் தாக்கி கொலை செய்த நபர் ஒருவர் கோடரியுடன் ஹிதோகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ஹிதோகம பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய திருமணமான நபர் ஒருவரே இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவரும் இப்பகுதியைச் சேர்ந்த திருமணமான நபர் என்றும் உயிரிழந்துள்ளவரும் சந்தேக நபரும் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளதுடன் சந்தேக நபரின் மனைவி மத்திய கிழக்கு நாட்டில் தொழில்புரிந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் சந்தேக நபரை குறித்த வீட்டிலிருந்து வெளியேறிச் செல்லுமாறு கூறியதனால் கோபமடைந்த நபர் நேற்று முன்தினம் இரவு (02) ம் திகதி வீட்டுக்குள்ளேயே வைத்து கோடரியால் தலையில் தாக்கி கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கோடரி தாக்குதலுக்குள்ளான நபர் பலத்த காயத்திற்கு உள்ளான நிலையில் நெலுபாவ வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

# வட மத்திய மாகாணத்தில் 2023ஆம் வருட சாஹித்திய விழா

## முக்கிய பிரமுகர்களும் கௌரவிப்பு






**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாண சாகித்திய விழா வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் அநுராதபுரம், கொரகவெவயில் அமைந்துள்ள மாகாண பயிற்சி கேட்போர் கூடத்தில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

கலாசார அமைச்சின் ஏற்பாட்டின் கீழ், மாகாண கலாசார திணைக்களத்தினால் 33 வது தடவையாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. "சமூகப் பொறுப்பை மேம்படுத்துவதற்கான கலை" என்பதே இவ்வாண்டு சாகித்திய விழாவின் தொனிப்பொருளாகும்.

வடமத்திய மாகாணம் முழுவதும் பரந்து விரிந்து கிடந்த பல கலைஞர்களின் பங்குபற்றலுடன் இவ்வருட சாகித்திய விழா இடம் பெற்றதுடன் தேசிய மட்ட கலைஞர்கள் குழுவினரும், மாகாணத்தின் 187 கலை நிறுவனங்களும் இதில் கலந்து கொண்டிருந்தன. இவ் வருடமும் நூற்றுக்கு மேற்பட்ட கலைத் துறையினரின் பங்கு பற்றலுடன் இவ் விழா கோலாகலமாக நடை பெற்றது.

குறுநாடகம், மலையகம், கீலைத் தேய புதிய படைப்பிலக்கிய நடனங்கள், நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் சிறுகதைத் தொகுப்புகள், பாடல் ஆக்கங்கள், கவிதை ஆக்கம் உள்ளிட்ட பல போட்டிகளின் கீழ் இவ்வருட விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சப்ரகமுவ மாகாணத்தில் இருந்து வட மத்திய மாகாணத்திற்கு வந்து வடமத்திய மாகாண ஆளுநராக பதவி வகித்து ரஜரட்ட மக்களுக்கு ஆற்றிய சிறந்த சேவையை பாராட்டி வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்துக்கு "ரஜரட்ட ரஜத விருதும், வட மத்திய மாகாண பிரதம செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியாக மாகாணத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையை பாராட்டி மாகாண பிரதம செயலாளர் சந்திரசிறி பண்டார வுக்கு "ரஜரட்ட ரஜத சேவா" விருதுகளும் இதன் போது வழங்கப் பட்டன.

இந் நிகழ்வில் மாகாண கலாசார மற்றும் பிரதம அமைச்சின் செயலாளர் திருமதி அபய லக்ஷ்மி ஹேவாபத்திரன, அமைச்சின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள், மாகாண கலாசார திணைக்கள பணிப்பாளர் திரு.குயான் இந்திக்க வன்னிநாயக்க, நிறுவனங்களின் தலைவர்கள், தேசிய மட்ட கலைஞர்கள், வளரும் கலைஞர்கள் மற்றும் மாகாணத்தின் கலைத்துறையினர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---

# தென்னை மரங்களுக்கு ஒருவகை நோய்

**வெலிகம தினகரன் நிருபர்)**

மாத்தறை மாவட்டத்தில் கடந்த 2023 ம் ஆண்டு மாத்திரம் 4707 தென்னை மரங்கள் நோயின் காரணமாக வெட்டி அகற்றப்பட்டதாக மாத்தறை மாவட்ட தெங்கு உற்பத்தி சங்கத்தின் முகாமையாளர் ஜி. லீலாநந்த தெரிவித்தார்.

வெட்டி அகற்றப்பட்ட மரங்களுக்கு 3000 ரூபா வீதம் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 14,121 மில்லியன் ரூபா வழங்கப் பட்டுள்ளது. இதன் பிரகாரம் மாத்தறை பிரதேச செயலக பிரிவில் 1852 மரங்கள் வெட்டி அகற்றப்பட்டுள்ளதோடு வெலிகம பிரதேசத்தில் 574, திக்குவல்லை பகுதியில் 866, தெவிநுவர பகுதியில் 696, வெலிப்பிட்டிய பகுதியில் 618, திஹகொட பகுதியில் 82, கிரிந்தை புகுல்வல்ல பகுதியில் 17, மற்றும் மாலிம்பட பகுதியில் 2 மரங்களாக மொத்தம் 4707 மரங்கள் வெட்டி அகற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2024.01.02
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5347 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,548,856.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 9 4 1 5 0 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3589 — சீட்டிழுப்பு திகதி 2024.01.02 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,359,669.96
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 01 10 45 79 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 49981

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1695 — 2024.01.02 — 84739 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 419,502,046.00
ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 04 44 52 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.01.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0173
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 4 5 1 2 9 5 — L7 எழுத்து Q
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.22,506,726.68

ராசி சுப பலன் — திகதி 2024.01.02 — சீட்டிழுப்பு இலக்கம் 656 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,360,191.72
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 24 31 38 54 — தனயோக இலக்கம் 56297 — நாளுக்கான விதி எண் 15

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1377 — 2024.01.02 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,032,211.28
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 01 05 28 70 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 08072

# கிழக்கின் குரல்



## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 40 வர்த்தகர்களுக்கு அபராதம்

### டிசம்பர் மாதம் மட்டும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் அறவீடு

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 40 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 01 இலட்சத்தி 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை, தெஹியத்தக்கண்டிய ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 115 வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, இதில் 40 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு 01 இலட்சத்தி 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, நுகர்வோர் நலன் கருதி வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததாக அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களை கூடுதலான விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பாக பொது மக்கள் 1977ம் இலக்கத்திற்கு அல்லது மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் 0632222355 எனும் இலக்க தொலைபேசி இலக்கத்திற்கும் தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸுக்கு கல்முனையில் சேவை நலன் பாராட்டு



(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சுமார் இரண்டு வருடங்கள் பிராந்திய பணிப்பாளராக பணியாற்றி பெரும் சேவையாற்றிய வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவு தலைவர்கள், பிராந்திய சுகாதார நிறுவனங்களின் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக சுமார் இரண்டு வருடங்கள் பணியாற்றி அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அவரின் சேவை மற்றும் திறமைகளை பாராட்டி பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

### பரீட்சை நிலையங்களில்

## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(தோப்பூர் குறூப் நிருபர்)



க.பொ.த உயர்தர பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளில் பரீட்சாத்திகளின் நலன் கருதி டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று மூதூர் சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது.

மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தினால் இருதினங்கள் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்காக புகை அடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக சுகாதார வைத்தியதிகாரி டொக்டர். முஹைதீன் பாவா ஹில்மி தெரிவித்தார்.

இதன்போது தோப்பூர், கிளிவெட்டி மற்றும் மூதூர் பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளுக்கு புகை அடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



'நமது ஈழ நாடு' நிறுவனத்தினால் கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (படம்: வாழைச்சேனை மேலதிக நிருபர்)

## ஆசிரியர்கள் பாராட்டி கௌரவிப்பு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கல்வி பயின்று 1997ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், தமது ஆசிரியர்களின் உன்னத சேவைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனையாடோ விடுதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மாணவர் குழாமின் நடப்பாண்டு தலைவரும் மொறட்டுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி றிஸ்வி நூர்தீன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

### தேசிய வாசிப்பு மாத போட்டி நிகழ்ச்சிகளில்

## வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபையின் கீழ் இயங்கும் மத்திய வாசிகசாலை மற்றும் ஹல்லாஜ் வாசிகசாலை ஆகியவற்றில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிப் பெற்ற பாடசாலை மாணவர்கள், வீட்டு நூலகப் போட்டி வெற்றியாளர்கள், 2023 ஆம் ஆண்டின் சிறந்த வாசகர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசு, நினைவு சின்னம், சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம். றாபீ தலைமையில் அக்கரைப்பற்று ஹல்லாஜ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ. எம்.றாபீ மற்றும் நூலகர் ஏனைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு, சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தனர். இதன்போது பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கரடியனாறு பிரதேசத்தில் யுக்திய சுற்றிவளைப்பு



(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

யுக்திய போதை ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ எதிரிமானவின் ஆலோசனையின் பேரில் மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மோப்ப நாய் சகிதம் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கஞ்சா விற்பனை செய்யப்படும் வீடு மற்றும் கஞ்சா செடிகள் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் என சந்தேகிக்கப்படும் பிரதேசங்களில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

## கல்மெடியாவ குளத்தின் நீர் கசிவு சீரமைப்பு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கல்மெடியாவ குளத்தின் நீரேந்து பகுதியில் ஏற்பட்ட கசிவு கடற்படையினரின் உதவியுடன் சீர்செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களம் ஊடாக குளப்பகுதியின் நீர் கசிவு தொடர்பில் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது. நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு ஆறுகளின் கிளைகளும் திறக்கப்பட்டதால் இக்குளத்தின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கல்மெடியாவ குளத்தின் சுமார் 200 மீற்றர் தூரம் கொண்ட நீரினுள் கடற்படையினர் சென்று நீர்கசிவு தொடர்பில் ஆராய்ந்து அதனை சீரமைத்துள்ளனர்.

### வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## காத்தான்குடியில் சமைத்த உணவுகள் வழங்கி வைப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி ஆறாம் குறிச்சி ஹைராத் நகரில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு காத்தான்குடி ஆறாம் குறிச்சி ஹைராத் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நேற்று சமைத்த உணவு வழங்கப்பட்டது.

காத்தான்குடி கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெள்ளம் வீடுகளுக்கு ஏறி உணவு சமைக்க முடியாத குடும்பங்கள் மற்றும் ஹைராத் நகரில் வெள்ளம் ஏறிய குடும்பங்கள் என 600 குடும்பங்களுக்கு இதன்போது பகல் சமைத்த உணவு வழங்கி வைக்கப்பட்டன.

இதனை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே முரளிதரன் நேரடியாக சென்று ஆரம்பித்து வைத்தார்.



ஹைராத் பள்ளிவாயலின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே முரளிதரன் மாவட்டத்தின் வெள்ள நிலைமை தொடர்பாகவும் கருத்து தெரிவித்தார்.

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் தாழ் நிலப்பகுதிகளுக்கு திடீர் விஜயம்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



இங்கினியாகல சேனநாயக்கா சமுத்திரத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதால் நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறந்து மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா, உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் ஆகியோர் சம்மாந்துறை பிரதேச செயலகப்பிரிவிலுள்ள ஆறுகள், குளங்களை அண்டிய பகுதிகளுக்கு கள விஜயமொன்றினை நேற்றுமுன்தினம் மாலை மேற்கொண்டிருந்தனர்.

தொடர்ந்து மழையுடனான வானிலை தொடருமானால் தாழ்நிலப்பிரதேசங்கள் மூழ்குவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை சம்மாந்துறை பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளதாக பிரதேசசெயலாளர் இதன்போது தெரிவித்தார். சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெய்னாகாடு ஆறு, சம்மாந்துறை பல்லாறு, கல்லோய இடதுகரை ஆறு போன்ற இடங்களை இவர்கள் பார்வையிட்டனர்.

## உன்னிச்சை குளத்தின் மூன்று வான்கதவுகள் திறப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பில் கடும் மழை காரணமாக உன்னிச்சை குளத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரிய குளமாக விளங்கும் உன்னிச்சை குளம் 33 கன அடி நீரினை கொள்ளவாக கொண்டுள்ளது. இந் நிலையில் கடும் மழை காரணமாக நீர் வான் பாய்வதனால் குளத்தின் 3 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

உன்னிச்சை குளத்தின் வான்கதவுகள் மூன்று திறக்கப்பட்டுள்ளமையால் அப்பிரதேச விவசாய நிலங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை காணப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளதுடன் பொது மக்களை அவதானமாக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

அத்துடன் உன்னிச்சை குளம் திறக்கப்பட்டுள்ளமையினால் வவுணதீவு ஆயித்தியமலை பிரதான வீதியின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.



அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் 'தேசிய கலங்கரை தீபங்களுக்கு கௌரவம்' எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.அப்துல் சமதுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிப்பதையும் ஏனைய ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியலாளர்கள் ஆகியோருடன் ஏற்பாட்டுக் குழுவினரும் காணப்படுகின்றனர். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

# சமூகப்பணிகளில் தன்னை அர்ப்பணித்து செயற்படும் தேசமான்ய சந்திரவதனா ரட்ணராஜா குருக்கள்

## தனது சமூக சேவை தொடர்பில் தினகரனுக்கு வழங்கிய செவ்வி



சமூகப் பணிகளின் மூலம் கண்டியில் மிகவும் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்ற ஒரு பெண்மணி தேசமான்ய சந்திர வதணா ரட்ணராஜா குருக்கள். அவர் கணவர் ரட்ணராஜா குருக்கள். சமயக் கிரியைகளை உணர்வுடனும் சமயம் ஆன்மீகம் தொடர்பான புலமைத்துவ நெறியுடனும் நீண்ட காலமாக கடமையாற்றி வருபவர். தனது சமூக செயற்பாடுகள் தொடர்பாக சந்திரவதணா ரட்ணராஜா குருக்கள் தான் கடந்துவந்த பாதை குறித்து தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.



**உங்கள் பல்கலைக்கழக பிரவேசமும் இடைவிலகலும் பற்றிக் கூறுவீர்களா?**

கண்டி பேராதனை வைத்தியசாலையில் எனது சிற்றப்பா அம்பிகாவதி கடமையாற்றினார். நாங்கள் சிறிய வயதில் கண்டிக்கு பெரஹறா பார்க்க வந்த சமயம் முதன் முதலில் எனது கணவருடைய அறிமுகம் கிடைத்தது. எனினும் அப்பொழுது நான் யாழ்ப்பாணத்தில் லேடிஸ் கொலோஜில் படித்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகம் விஞ்ஞானப் பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டேன். அப்பல்கலைக்கழகம் கிடைத்து ஒரு வாரம் கூட அங்கு கற்க முடியவில்லை. அங்கு பிரச்சினை நிலவியது. அதன் காரணமாக அங்கு நிலவிய ஆரம்ப கால யுத்த கெடுபிடிகளின் காரணமாக பேராதனை பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றப்பட்டு கண்டிக்கு வந்தேன்.

அப்பொழுது 1985, 1986 காலப் பகுதி மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டக் காலப்பகுதியாகும். அப்பொழுது அங்கு கல்வி பயின்று கொண்டிருக்கும் கால கட்டத்தில் அடிக்கடி பல்கலைக்கழகம் இழுத்து மூடப்படுவதும், திறக்கப்படுவதும் மாணவர்கள் கைது செய்யப்படுவதுமான கெடுபிடி நிலைமை இருந்தன.

அப்பொழுது ஒரு நாள் நானும் எனது நண்பி ஒருவரும் குறிஞ்சிக் குமரன் கோயிலுக்குச் சென்று விட்டு பின்னால் உள்ள வீதியால் விடுதி திரும்பும் போது வீதியில் வைத்து பொலிஸாரின் சுற்றிவளைப்பில் நாங்கள் இருவரும் சிக்கிக் கொண்டோம். எங்களை பிடித்துக் கொண்டு சென்று மைதானத்தில் நீண்ட நேரம் நிறுத்தி வைத்திருந்தார்கள். பொலிஸ் வாகனத்தில் முகம் மூடியிருந்த நபர் தலையினை ஆட்டியதால் எப்படியோ தப்பி விடுதிக்குச் சென்று விட்டோம்.

இவ்வாறு அடிக்கடி பல்கலைக்ககழம் மூடப்படும் திறக்கப்படுவதுமாக இருந்தது. ஆனால், அப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு என்னை அழைத்துச் செல்வதற்கு அங்கு இருந்து வருவதில் பல சிரமங்கள் இருந்தன. இக்கால கட்டத்தில் ஒரு தடவை பல்கலைக்கழகம் மூடப்பட்டு விட்டது. ஊரில் இருந்து அன்று யாரும் வரவில்லை. அக்காவின் அத்தாதான் வந்தார். கண்டி ஸ்ரீ கதிரேசன் கோயிலுக்கு கூட்டி வந்து அங்கு தங்க வைத்தார். இரு நாள் ஸ்ரீ கதிரேசன் கோயிலில் தங்கினேன். அத்தோடு ஊரடங்குச் சட்டம் போட்டு விட்டார்கள். எங்கேயும் போக முடியாத நிலை ஏற்பட்டது. சித்தப்பா உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து தந்து விட்டுச்சென்று விட்டார். மறுநாள் அக்காவின் அத்தான் வந்தார். அப்பொழுது அவர் ரட்ரா ஜை குருக்களைச் சந்தித்து கலந்துரையாடினார். அந்நேரத்தில் பெரியளவில் அவர் யார் என்று கவனத்தில் கொள்ள வில்லை. அவர் தான் என்னுடைய குடும்ப வாழ்க்கை துணைவராக வருவார் என்ற நான் எதிர்பார்க்கவில்லை. படிக்கின்ற ஆர்வம் இருந்தமையால் அதைப் பற்றி யோசிக்கின்ற மனப்பழக்கம் அப்பொழுது இருக்கவில்லை. கண்டு பேசின பழக்கம் மட்டும்தான்.

**அப்படியாயின் உங்கள் திருமண பந்தம் எப்படி ஆரம்பமாகின்றது என்று கூறுவீர்களா?**

என் தந்தையுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொண்டு நேரடியாக வீட்டுக்கு திருமணம் செய்து கொள்ளப் போவதாக ஒப்புதல் தெரிவித்திருந்தார். முதலாவது தடவை கண்டிப் பெரஹறாப் பார்க்கச் சென்றிருந்த வேளையிலும் இரண்டாவது கோயிலில் தங்கிய வேளையிலும் மூன்றாவது தடவையாக எதேச்சையாக புகை வண்டியில் சந்தித்துப் பேசினார். மூன்றாவது தடவை புகை வண்டியில் சந்தித்த போது அவருடன் கதைக்க வில்லை. அதற்குபின்னர் எங்கள் வீடு தேடி வந்து என் தந்தையுடன் அறிமுகத்தை ஏற்படுத்திக் கொண்டு என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். அப்பொழுது அப்பா என் அக்காவை திருமணம் செய்வதற்காக விருப்பம் கேட்டிருந்தார் என எண்ணிக் கொண்டார். அப்பொழுது அக்காவுக்கு மாப்பிளை பார்த்துக் கொண்டிருந்தார். அந்த வகையில் அக்காவைத் தான் திருமணம் செய்யப் போகிறார் என்று நினைத்து அப்பா அதற்கு சம்மதம் தெரிவித்து விட்டார். எனினும் பின்பு அக்காவை அல்ல என்னைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக என் கணவர் அப்பாவிடம் தெரிவித்திருந்தார்.

அப்பா குகதாச சர்மா. அம்மா பெயர் நாகேஸ்வரியம்மா. மலையகத்தில் ஹட்டன் லக்சபான குரூப் தோட்டத்தில் தோட்ட அதிகாரியாக கடமையாற்றினார். அவர் அங்கு சுமார் 35 வருடம் கடமையாற்றியவர். அப்பா வாக்கு கொடுத்தால் மாற மாட்டார். ஒரு நேர்மையான மனிதன், எனினும் எனது தாய் அவர் ஒரு குடும்பத்தில் ஒருவரை பேசி வைத்திருந்தார். அவர் அப்படி பேசி வைத்திருந்துள்ளார் என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் எப்பொழுதும் அப்பாவின் பேச்சினையே கேட்பேன். இவ்வாறு எனக்கு நடக்கவுள்ள திருமணம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் எவையேனும் பெரியளவில் ஒன்றும் தெரியாது. என் அண்ணா தொலைபேசி தொடர்பு கொண்டு ஊருக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அண்ணனுக்கு எனது திருமண விடயம் தெரியாது. அண்ணனே கூட்டி வந்தார். வீட்டின் வாசற்படி ஏறியதுடன் அம்மா ஒரு சமிஞ்ஞை காட்டினார். எனக்கு அது புரியவில்லை. அப்பொழுது அப்பா என்னிடம் நான் கேட்பதற்கு ஒரே ஒரு பதில் சொல்ல வேண்டும். அது ஆம் அல்லது இல்லை என்று மட்டும் கூற வேண்டும் என்று கூறினார். ஆம் என்று தலை அசைத்தேன்.

ஆனால் அப்பா எந்த விடயமாக இருந்தாலும் வாக்கு கொடுத்து அதனை நிறைவேற்றி வைப்பவர். அந்த வகையில் எனது கணவரின் கோரிக்கைக்கு இணங்க அப்பா அம்மா குடும்பத்தவர்களின் ஆசிர்வாதத்துடன் 1987 இல் எனக்கு திருமணம் முடிந்தது.

அப்பொழுது கணவர் கண்டி ஸ்ரீ கதிசேரன் கோயிலில் சமய குருவாகச் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அங்கு ஒரு சில வருடம் வசித்து வந்தோம். இக்கோயிலுக்கு பெரு எண்ணிக்கையிலான சிங்கள மக்களும் தமிழ் மக்களும் வருகை தருவார்கள்.



இரு சமூகங்களுக்கிடைய என் கணவர் நல்ல நன் மதிப்பை பெற்றிருந்தார். கண்டி தலதா பெரஹறா காலத்தில் அவருக்கு முக்கிய மதிப்பு கொடுக்கப்படும். யானைகளின் பின்னால் அரச உடையணிந்து கம்பீரத்தோடு பெரஹறா ஊர்வலத்தின் போது கண்டி நகர் எங்கும் வலம் வருவார்.

**நீங்கள் அரச உத்தியோகத்தராக குறிப்பிட்ட காலம் சேவையாற்றியதாக நாம் அறிவோம். அவை பற்றிக் கூறுவீர்களா?**

அக்கால கட்டத்தில் நாவலப்பிட்டியில் சட்டத்தரணி விவேகானந்தர் அவர்களிடம் லிகிதராகக் எட்டு மாதம் கடமையாற்றினேன். அதன் பின்பு நீதி மன்றத்தில் பணிபுரிவதற்காக அரச நியமனம் கிடைத்தது. குறிப்பிட்ட காலம் அங்கு வேலை செய்தேன். காரணம். அப்பொழுது தட்டச்சுக்களை நன்கு செய்வேன். நீதி மன்றத்திலும் அலுவலக வேலைகளைச் செய்வதற்காக இணைத்துக் கொண்டார்கள். மூன்று மாதம் நீதிமன்றத்தில் பணிபுரிந்தேன்.





தோட்டப் பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றினேன். முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சராக இருந்த வி. இராதாகிருஸ்ணன்தான் அந்த நியமனத்தைப் பெற்றுத் தந்தார். அவர் மத்திய மாகாண இந்து சமய கல்வி அமைச்சராக இருக்கின்ற காலத்தில் பெற்றுக் கொடுத்தார். ஆனால் அப்படியே எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் இடைவிலகி விட்டேன். இது குறித்து இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஸ்ணன் என்னைக் காணும் போதெல்லாம் விஞ்ஞானம் கற்பிக்கக் கூடிய ஓர் ஆசிரியர். இடை விலகி இருக்கிறார் என்று நினைவூட்டுவார். நீண்ட காலமாக எனது இடை விலகலை ரத்துச் செய்யாமல் அப்படியே வைத்திருந்தார். அவர் என் தந்தையின் குடும்ப நண்பர். எங்களோடு குடும்ப உறவினர்களைப் போன்று பழகுவார். அவரின் மனைவி என் தங்கையின் நண்பி ஆவார். என் மகளின் பரத நாட்டிய அரங்கேற்ற வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**உங்களுடைய கலாசாரப் பண்பாட்டு அம்சங்கள் பற்றி கூற முடியுமா?**

சிறு பராயத்தில் பறங்கிய குடும்பத்தினர்கள்தான் நாங்கள் வாழ்ந்த தோட்டத்தில் இருந்தனர். அவர்கள் கணிசமானளவு மேற்கத்திய கலாசார அம்சங்களைக் கொண்டிருந்தனர். அவர்களுடைய தாக்கம் எங்களுடைய வாழ்க்கை முறையிலும் சிற்சில காணப்பட்டன. அப்பாவுடன் பறங்கியர்கள் வேலை செய்தார்கள். அவர்களுடைய பிள்ளைகள்தான் என்னுடைய சிநேகிதர்கள். அவர்களுடைய பிறந்த நாள் நிகழ்வு ஏனைய கலாசார நிகழ்வு என்பன அங்கு நடைபெறும். நாங்களும் தவிர்க்க முடியாமற் கலந்து கொள்ளுவோம். அம்மா சரியான இந்து சமய பக்தர். அவர் கோயில் சமய கிரியை என்று எங்கள் எல்லோரையும் அழைத்துச் செல்வார்.





மலையக மக்களோடு ஒன்றித்த இந்து சமய அறிவு வளர்ச்சிக்கப்பால் பறங்கியர்களுடைய மனித வாழ்க்கையின் நாகரீக வளர்ச்சியும் பின்னிப்பிணைந்து இருந்தது. அதன் பிறகு கணவனுடைய இந்து சமயப் சமயப் பணியின் அறிவின் பால் ஈர்க்கப்பட்டு உண்மையான மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அதனைப் பயன்படுத்த உணர்ந்தவளாய் அதன் கோட்பாட்டை அறிந்து இந்து சமய திருமணச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நடத்தி வருகின்றேன். இதன் மூலம் மகிழ்ச்சிகரமான திருமண பந்தங்கள் இந்து சமய நியதிகளின் அடிப்படையில் நடத்தி எண்ணற்ற குடும்பத் தம்பதிகளுடைய நல்லாசீர்வாதங்களைப் பெற்று வருகின்றேன்.

நேர்காணல் : ஜீவராஜ்



திருகோணமலையில் நடைபெறவுள்ள தமிழர் கலாசார நிகழ்வு தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநருக்கும், திருகோணமலையிலுள்ள அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்பு சார் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று (3) கலந்துரையாடல் நடைபெற்றது. ஆளுநரின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் மாபெரும் தமிழர் கலாசார விழா தொடர்பாகவும், அதன் ஒழுங்குமுறைகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

(படம்; திருகோணமலை தினகரன் நிருபர்)

## பொத்துவில் ஆத்திமுனை வீதியை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தல்



*( மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

வெளிப்பிரதேசங்களில் இருந்தோ அல்லது பொத்துவிலில் இருந்தோ ஆத்திமுனைக்கு வாகனங்களில் வருபவர்கள் மற்றும் ஆத்திமுனை, சர்வோதயபுரம்,ஹிஜ்ரத் நகர் போன்ற கிராமங்களிலிருந்து செல்பவர்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக இடைவிடாத மழை பெய்து வருவதன் காரணமாக வெள்ளப்பெருக்கு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் பொத்துவில் ஆத்திமுனைக்கு செல்லும் வீதியின் நிலை மிகவும் மோசமடைந்து பயணிப்பதற்கு பொருத்தமற்றதாக மாறியுள்ளது. குறித்த வீதியானது 12 கிலோ மீற்றர் தூரம் வரை கொங்ரீட் வீதியாக புனர்நிர்மாணத்திற்கு விட்டபோதும் அதன் அபிவிருத்திப் பணிகள் சுமார் இரண்டு ஆண்டுகளாக இடைநடுவே கைவிடப்பட்டு காணப்படுகிறது. வீதியின் குறிப்பிட்ட பகுதியே இவ்வாறு சேதம் அடைந்துள்ளது.



புத்தாண்டை முன்னிட்டு அகம் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் வெருகல் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மரக்கன்றுகளும் அதனை தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு பழம் சார்ந்த உற்பத்திகள் மற்றும் நொறுக்கு தீனி உற்பத்திகளுக்கான உபகரணங்களும் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸின் தலைமையில் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. (படம்; தோப்பூர் குறூப் நிருபர்)

# வடக்கின் உதயம்

முல்லைத்தீவில்

# டெங்கு ஒழிப்பு தீவிரம்; நுளம்புகள் பரவும் இடங்களுக்கு சிவப்பு அறிவித்தல்

**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லை த்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவலை தடுக்கும் நோக்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், நுளம்புகள் பரவக்கூடிய இடங்களுக்கு சிவப்பு அறிவித்தல் நேற்று புதன்கிழமை முதல் விடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், கரைதுறைப்பற்று பிரதேச சபையினருடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் சடுதியாக அதிகரித்திருப்பதாகவும் ஆகையால் டெங்கு அபாய நிலைமையைக் கவனத்தில் கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் நீர் தேங்கி நுளம்புக் குடம்பிகள் பரவக்கூடிய சிறிய பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை அகற்றுமாறும் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்படும் எனவும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## வவுனியா வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள்

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா பொது வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையை தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோய் தொற்று ஏற்பட்டு வருகின்றது. அதன் அடிப்டையில் தற்போது வவுனியா வைத்தியசாலையில் 39 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த 39 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உட்பட பிற மாவட்டங்களுக்கு சென்று வந்த நிலையிலேயே டெங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

ஆகவே பொதுமக்கள் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்து டெங்கு தொற்றிலிருந்து தம்மையும், சமூகத்தையும் பாதுகாக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

பக்டீரியா தாக்கத்தினால் பழுதடைந்த

## 21,000Kg விதை உருளைக்கிழங்குகளை காட்டுப்பகுதியில் புதைக்க தீர்மானம்

**யாழ். விசேட நிருபர்**

பக்டீரியா தாக்கத்தினால் பழுதடைந்து பயன்படுத்த முடியாதுள்ள 21,000 கிலோகிராம் (21 மெற்றிக் தொன்) விதை உருளைக்கிழங்குகளை புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பழுதடைந்த விதை உருளைக்கிழங்குகளை கிளிநொச்சி வனவளத் திணைக்களத்துக்கு சொந்தமான காட்டுப்பகுதியில் உரிய நடைமுறைகளை பின்பற்றி புதைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்துக்கு கிடைத்த 21 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு விதைகள் யாழ். குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்துக்குள்ளானமையினால் பழுதடைந்திருந்தமை கடந்த டிசம்பர் 17ஆம் திகதி கண்டறியப்பட்டது.

பக்டீரியா தாக்கத்தினால் 21 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது உருளைக்கிழங்கு விதைகளை பொலீத்தினில் பொதி செய்து பாதுகாப்பாக களஞ்சியசாலையிலிருந்து அகற்றி பாவனையற்ற வெளியான பகுதிகளில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதனையடுத்து கிளிநொச்சி பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் அவற்றை புதைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இதன் மூலம் பொதுமக்களுக்கோ விவசாயிகளுக்கோ மண்ணுக்கோ நிலத்தடி நீருக்கோ பாதிப்பு ஏற்படாதென துறைசார் தரப்புகள் தெரிவிக்கின்றன.



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே82 வெள்ளாந்தெரு கிராம அலுவலர் பிரிவில் வாழ்கின்ற வறுமை நிலை குடும்பத்தினருக்கு கனடாவை சேர்ந்த மெற்றோலான் மீடியா பிரபாகரன் துரிதாவின் நிதிப்பங்களிப்பில் அதன் வடக்குக்கான பொறுப்பாளர் கலாநிதி நா.தனேந்திரன் கிராம அலுவலகத்தில் வைத்து பொங்கல் பானைகளை வழங்கி வைத்தார்.

## கண் சத்திர சிகிச்சை நிபுணர் பாராட்டிக் கௌரவிப்பு

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் மு.ஞானரூபன் மற்றும் அவரது குழுவினர் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கண் சத்திர சிகிச்சை நிபுணரும் அவரது குழுவினரும் சிறப்பான முறையில் பணியாற்றி ஏராளமானவர்களின் பார்வைக் குறைபாட்டை சீர்செய்ததோடு, ஏராளமான கண் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினை பாராட்டி மதிப்பளிக்கும் நோக்கில் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் இந்த ஏற்பாட்டினை மேற்கொண்டனர்.

வவுனியாவில் ஒருவர் மரணம்;

## உடல் உறுப்பு மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் மரணமடைந்த நிலையில் அவருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தில் அவரின் உடல் உறுப்பு மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பதவியா பிரதேசத்தை சேர்ந்த இந்த நபர் சிறுநீரக நோய் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நீமோனியா காய்ச்சலாக மாறி நேற்று முன்தினம் (02) இரவு அவர் மரணமடைந்தார். அவருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்ட நிலையில், அவருடைய உடல் உறுப்பு மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பதவியாவை சேர்ந்த 55 வயதான நபரே இவ்வாறு மரணமடைந்தவர் ஆவார் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

## 'அய்னுல்ஹூதா' நிறுவனத்தின் 25ஆவது வருட பூர்த்தி விழா

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை கிரிமெடிதென்ன பிரதேசத்தில் அமைந்துள்ள 'அய்னுல் ஹூதா' இஸ்லாமிய கல்வி நிறுவனத்தின் 25ஆவது வருட பூர்த்தி விழாவும் உலமாக்களை கௌரவிக்கும் நிகழ்வும் இம்மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இஸ்லாமிய கல்வி நிறுவனத்தின் தலைவர் அல்ஹாபிழ், அல் ஆலிம் அல் உஸ்தாத் ஏ.ஏ.எம்.முசாதிக் அசிஸ் (அல் ஹாஷிமி) தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக அகில இலங்கை ஜமியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ் சேய்க் முப்தி எம்.ஐ.எம்.ரிஸ்வி, அக்குறணை ஜாமியா ரகுமானியா முன்னாள் அதிபர் ஏ.சி.எம்.ஜிப்ரி ஆலிம், அகில இலங்கை ஜமியதுல் உலமா பொதுச் செயலாளர் அல் ஆலிம் எம்.அர்க்கம் நூர் ஆமித், அதிபர் தாருல் உலூம் அல் ஹாசிமியா நாவலப்பிட்டி அல் ஆலிம் அப்துல்லா மஃறூப்(ஸகரியாவி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகள் விசேட அதிதிகள், பொதுமக்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். விழாவுக்கான சகல ஏற்பாடுகளும் இடம்பெற்று வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.




புதுவருடத்தில்

## பெருந்தோட்ட தொழிலாளர்கள் சம்பிரதாயபூர்வமாக கடமையில்!

**பொகவந்தலாவ நிருபர்**



பிறந்திருக்கும் புதுவருடத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் சம்பிரதாயபூர்வமாக தமது பணிகளை ஆரம்பித்தனர்.

அந்த வகையில் மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் மேல் பிரிவு தோட்ட தொழிலாளர்கள் நேற்று தாம் தேயிலை கொழுந்து பறிக்கும் மரங்களுக்கு சம்பிரதாயபூர்வமாக மஞ்சள் நீர் தெளித்து தேயிலை மரங்களுக்கு பூஜைகளை மேற்கொண்டனர்.

அதனை தொடர்ந்து தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரை சம்பிரதாயபூர்வமாக வரவேற்று, அவர்களுக்கு பொன்னாடை போற்றி கௌரவித்ததுடன், அவர்களுக்கு நினைவு பரிசில்களையும் வழங்கி வைத்தனர்.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களுக்காக தோட்ட நிர்வாகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட ஓய்வு அறையும் திறந்து வைக்கப்பட்டது.

## இரத்தினபுரியில் மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் அமுல்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் மாலை வேளைகளில் தொடரும் கடும் மழை காரணமாக மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக இரத்தினபுரி மாவட்ட தேசிய கட்டட ஆராய்ச்சி அலுவலகப் பணிப்பாளர் அபித ஜய சுந்தர நேற்று தெரிவித்தார்

இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை, இம்புல்பே, ஓப்பனாயக வெலிக்கபொல, நிவித்திகல, கிரியெல்ல, கலவான, பெல்மடுல்ல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளின் பல்வேறு இடங்களில் தொடர்ந்து மண்சரிவு இடம்பெற்று வருகிறது.

அத்துடன், இரத்தினபுரியில் வேறு சில புதிய இடங்களிலும் மண்சரிவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன.

அதனால் மலைகள், பள்ளத்தாக்குகளை அண்மித்துள்ள இடங்களில் மரங்கள் சரிந்து விழுதல், கற்கள் உருண்டு விழுதல், சேற்று நிறமான நீர் வெளியாகுதல், கட்டடங்களின் சுவர்கள் மற்றும் தரைகள், நிலங்களில் வெடிப்பு ஏற்படுதல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம் என்பதுடன், அந்த இடங்களில் வாழும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். அவ்விடங்களிலிருந்து அவசரமாக வெளியேறுவது உகந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

## கண்டியில் ஆபத்துடைய மரங்களை வெட்ட தீர்மானம்

பிரதேச செயலாளர்களுக்கு அறிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டியில் ஆபத்து விளைவிக்கும் மரங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கண்டி மாவட்ட பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் ஆபத்து விளைவிக்கக்கூடிய சுமார் 1,500 மரங்கள் உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவற்றை வெட்டி அகற்றவும் அண்மையில் நடைபெற்ற கண்டி மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கான அதிகாரத்தை பிரதேச செயலாளர்களுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

கண்டியில் உள்ள 37 பிரதேச செயலாளர் பிரிவுகளில் சுமார் 2,000 மரங்கள்வரை வெட்டி அகற்ற அரச மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்த போதும், அதற்கான டென்டர் நடைமுறை காரணமாக காலதாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே அதற்கான பொறுப்புகளை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்து துரிதப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிரேஷ்ட பேராசிரியராக பீ.எம். ஜமாஹிர் நியமனம்



பேராதனை பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறைப் பேராசிரியர் பீ.எம்.ஜமாஹிர், சிரேஷ்ட பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டுவரை பேராதனை பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறை தலைவராக கடமையாற்றிய இவர், பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் மெய்யியல் பாடத்தின் பாட இணைப்பாளராகவும் செயற்பட்டு, மெய்யியல் துறையின் விருதுக்கு அர்ப்பணிப்பு செய்தார்.

சிரேஷ்ட மாணவர் ஆலோசகர், மாணவர் வழிகாட்டி, சிரேஷ்ட விடுதி காப்பாளர், மாணவர் அமைதியின்மையை தடுக்கும் குழுவின் அங்கத்தவர், கலைப்பீட ஆசிரியர் நலன்புரி சங்கப் பொருளாளர் எனப் பல குழுக்களிலும் பொறுப்புக்களிலும் சிறப்பாக இவர் செயற்பட்டார்.

கலைப் பீடத்தின் ஒவ்வொரு கல்வியாண்டுக்கான மிகச் சிறந்த மாணவருக்கான தங்கப்பதக்கத்தை வழங்குவதற்கான தேர்வுக் குழுவில் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் கடமையாற்றி பீடத்தின் விருதுக்கு பங்களித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் இவர் மெய்யியல் துறைப் பேராசிரியராகவும் ஒரு வருடம் சேவையாற்றியுள்ளார்.

## விபத்தில் காயமடைந்த மாணவன் மரணம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**




மாத்தளை - குருநாகல் பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று புதன்கிழமை (03) உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து மாத்தளை - குருநாகல் பிரதான வீதியில் தொம்பவளை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த விபத்தில் உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் க.பொ.த. உயர்தரப் பிரிவில் கல்வி கற்று வந்த 18 வயதுடைய சஹ்ரான் என்ற மாணவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தினத்தன்று இந்த மாணவர் மாத்தளையிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நிலையில், எதிரே வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் நேருக்குநேராக மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த விபத்து தொடர்பான விசாரணையை மஹவல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு

# பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் அதிருப்தி வெளியீடு

## அணுகுமுறைகளில் சந்தேகமெனவும் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்துக்கு திடமான தீர்மானத்தினை மேற்கொள்ளவேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தியுள்ளார் என கடற்றொழில் ஊடகப் பிரிவு அமைச்சு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவை பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

சூம் காணொளி ஊடாக நேற்று (03) நடைபெற்ற இக்கலந்துரையாடலில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துவதாக தெரிவித்துள்ள அமைச்சர், சில சந்தர்ப்பங்களில் போதைப்பொருள் வியாபாரிகள் தப்பித்துக்கொள்வதற்கான காலஅவகாசத்தினை பொலிஸார் வழங்கியதான சந்தேகம் மக்கள் மத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.



அதேபோன்று வற் அதிகரிப்பு உட்பட பொருளாதார நெருக்கடிகள் எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகள் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதால் அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் காத்திரமான தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழிலாளர் விவகாரத்தினை தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார்ந்தோரை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இணைந்த செயற்குழுவின் சந்திப்பு மற்றும் இருநாட்டு அமைச்சர் மட்டத்திலான சந்திப்பு போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதேபோன்று பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கான கடன் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் வற் அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றால் நாடளாவிய ரீதியில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் இன்றைய கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**(ஊடகப் பிரிவு: கடற்றொழில் அமைச்சர் 03.01.2024)**

## வவுனியாவில்

# போதைப்பொருளுடன் காதல் ஜோடி கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, சிதம்பரபுரம் பிரதேசத்தில் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் காதல் ஜோடி ஒன்று கைது செய்யப்பட்டுள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிதம்பரபுரம் பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் சோதனை செய்த போது, அங்கு தங்கியிருந்த காதல் ஜோடியிடம் கஞ்சா மற்றும் தொலைபேசியினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப்பொருளும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவர்களிடம் மேலதிக விசாரணை மேற்கொள்வதற்கு பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியை பெறவுள்ளனர்.

# உடுப்பிட்டியில் மதுபானசாலையை அகற்ற கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள மதுபான சாலையை அகற்றக் கோரி நேற்று புதன்கிழமை காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

உடுப்பிட்டி சந்தியில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டதுடன், இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பிரதேசத்தில் கடை அடைப்பும் மேற்கொள்ளப்பட்டது.

கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் பேரணியாக சென்று, கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளரிடம் மகஜரையும் கையளித்தனர்.

பாடசாலைக்கு செல்லும் வழியில் மதுபானசாலை வேண்டாம், மதியை போக்கும் மதுவை அனுமதிக்காதே, பிரதேச செயலாளரே நீங்கள் வழங்கிய அனுமதியை இரத்து செய், சீரழிக்காதே, மாணவ சமுதாயத்தை சீரழிக்காதே உட்பட பல்வேறு கோசங்களை எழுப்பினர்.



தென்னிந்திய தொலைக்காட்சியான Zee தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப இசை நிகழ்ச்சியில் பங்குபற்றிய அசானி, கண்டியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பழ முத்துக் கருப்பன் நகை மாளிகையின் ஏற்பாட்டில் தங்கமாலை வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதன்போது அசானிக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் சுருதி இசைக் குழுவின் தலைவர் பிரபா தங்கமாலை வழங்கி வைப்பதையும் அசானியின் தாயாரையும் படத்தில் காணலாம். (நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# சாவகச்சேரியில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், சாவகச்சேரியின் கோவிற்குடியிருப்பு கிராமத்தில் உள்ள மாணவர்கள் 25 பேருக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சமூக சேவகர் ம.நடனதேவனின் தாயாரான அமரர் ம.மனோகரிதேவியின் முதலாம் ஆண்டு நினைவாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் சாவகச்சேரி பள்ளிவாசல் மௌலவி, சாரதா சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்கள், சர்வசாதன சனசமூக நிலைய தலைவர் மற்றும் சாவகச்சேரி சமூக மேம்பாட்டு அமையத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# ஹல்துமுல்லையில் பாரிய மண்சரிவு

**ஊவா சுழற்சி நிருபர்**



பதுளை கொழும்பு வீதியில் ஹல்துமுல்லை பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாரிய கற்பாறை சரிந்து விழுந்ததில் வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு திடீரென ஏற்பட்ட இம்மண்சரிவு அறிந்த ஹல்துமுல்லை பொலிஸார், ஸ்தலத்துக்கு விரைந்து போக்குவரத்தை சீர்செய்ததாகவும் ஒருவழி பாதையை சீர்செய்து சிறியரக வாகனங்களை மட்டும் போக்குவரத்துக்கு அனுமதித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயினும் பாரிய ஊர்திகள் வீதியில் செல்ல தடை விதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்த வீதியில் பார ஊர்திகளை போக்குவரத்துக்காக பயன்படுத்துவோர் மாற்று வழியை பயன்படுத்துமாறும் போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

இது இவ்வாறிருக்க வெலிமடை – பதுளை வீதியில் உமாஓயா மின் உற்பத்தி நிலையப் பிரதேசத்தில் பாரிய கற்பாறை விழுந்ததில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளதாக வெலிமடை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய வீதி அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்துமாறு பணிப்பு

## இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் விசேட கலந்துரையாடல்

**(கல்லடி குறூப் நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை புனரமைக்கப்படாத வீதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் உயர்மட்ட அதிகாரிகளுக்குமிடையில் விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரனின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தை மணல் வீதியற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இராஜாங்க அமைச்சரால் இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் வீதிகள் அமைக்கும் போது சனத்தொகை மற்றும் நில அமைப்புகளை ஆராய்ந்து தரமான வீதிகளை அமைப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். வெள்ள நீர் வடிந்தோடுவதற்கு தடையாகவுள்ள காரணிகளை அடையாளம் கண்டு இறுக்கமான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் எதிர்காலத்தில் வெள்ள பாதிப்பு ஏற்படாதவாறு வீதிகளை அமைக்க வேண்டுமெனவும் அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சரினால் ஆலோசனைகள வழங்கப்பட்டன.



வீதிகள் தேவைப்பாடுள்ள பிரதேச செயலகப்பிரிவுகளில் கிறவள் பெற்றுக்கொள்ள வாய்ப்பிருந்தால் அந்த வளங்களை பயன்படுத்தி வீதிகளின் தூரத்தை அதிகரிக்க முடியுமெனவும் கலந்துரையாடப்பட்டது. மண்முனைப்பற்று மற்றும் காத்தான்குடி உள்ளிட்ட நகர் பிரதேசங்களிலும் வீதி தேவைப்பாடுள்ள கிராமங்களை இனங்கண்டு பிரதேச செயலகங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஊடாக விரைவாக மதிப்பீட்டறிக்கைகளை சமர்ப்பித்து, எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு முதல் வீதிகளை நிறைவு செய்து மக்கள் பாவனைக்காக கையளிக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் இதன்போது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மாவட்ட பொறியியலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஜதிஸ்குமார், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம்

**(திருகோணமலை தினகரன் நிருபர்)**



திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் 2024 ஆம் ஆண்டிற்கான முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்ட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைமைகளான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் கல்வி, விவசாயம், குடிதண்ணீர் தொடர்பிலான பிரச்சினைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், இம்ரான் மகரூப் மற்றும் மாகாண, மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள் உடன் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

# மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம்

**(தோப்பூர் குறூப் நிருபர் )**

மூதூர் பிரதேச செயலகத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான முதல் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் (3) பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக்கின் வரவேற்புடன் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும், மூதூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான ஏ.எல். எம். அதாவுல்லாஹ்வின் (பா.உ) தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ் தௌபீக், இம்றான் மஹ்ரூப், முன்னால் மாகாண சபை உறுப்பினர் காமினி கேவாஹெ, பிரதேச அரசியல் வாதிகளும், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், திணைக்களத் தலைவர்கள், முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் மூதூர் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

# வெள்ள அனர்த்தம் காரணமாக பொதுமக்களின் போக்குவரத்து பாதிப்பு



**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தின் கல்முனையில் நாவிதன்வெளியை இணைக்கும் கிட்டங்கி பாலத்தின் ஊடாக தொடர்ந்தும் இரண்டாவது நாளாக நேற்றும் வெள்ளநீர் பாய்ந்தோடுவதனால் குறித்த வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நேற்றைய தினம் மழை ஓரளவு குறைவடைந்திருந்தாலும் இவ்வீதி ஊடாக வெள்ளநீர் பாய்ந்தோடுவதனால், மத்திய முகாம், அன்னமலை, சொறிக்கல்முனை போன்ற பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாவிதன்வெளி பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் சுகாதாரத் திணைக்களம் போன்ற அலுவலகங்களுக்கு கல்முனையிலிருந்து கடமைக்கு செல்வோர் கிட்டங்கி பாலத்தை கடந்து செல்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

# சேனநாயக்க சமுத்திரத்தை பார்வையிட்ட வீரசிங்க எம்.பி



**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**

அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதால் சுமார் 12 வருடங்களின் பின்னர் அதன் 05 வான் கதவுகளும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (02) காலை திறக்கப்பட்டுள்ளது. திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான டப்ளியூ.டீ.வீரசிங்க, மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சிந்தக அபேவிக்ரம, மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்டோர் வான் கதவினை திறந்து வைத்தனர்.

# ஆற்றுவாழைத் தாவரங்களை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு



**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை காரணமாக வெல்லாவெளி ஆற்றுப்பகுதியில் தேங்கியுள்ள ஆற்றுவாழைத் தாவரங்களை அகற்றும் பணிகளை பொதுமக்கள் முன்னெடுத்துள்ளனர். வெள்ள நீர் வழிந்தோடுவதற்குப் பெரும் தடையாகவுள்ள ஆற்றுவாழைத்தாவரங்கள் இதன்போது அகற்றப்பட்டன.

ஆற்றுவாழைத் தாவரங்கள் தேங்கியுள்ளதனால் வெள்ளநீர் வழிந்தோட முடியாமல் பல நூற்றுக்கணக்கான வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அப்பகுதி விவசாயிகளும் கவலை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு தேங்கியுள்ள ஆற்றுவாழைத்தாவரங்களை அப்புறப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோரிக்கை முன்வைத்திருந்த போதும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். பொதுமக்கள் ஒன்றிணைந்து ஆற்றினுள் இறங்கி ஆற்றுவாழைத் தாவரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆற்றினுள் மலைபோல் குவிந்து கிடந்த ஆற்றுவாழைத் தாவரங்கள் தற்போது அங்கிருந்து ஓரளவு வெள்ள நீருடன் இழுத்துச் செல்லப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

# இலங்கை மீது முதலீட்டாளர்கள் நம்பிக்கை வைப்பதாயின் எமது அணுகுமுறையில் மாற்றம் தேவை

## போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன

இலங்கை ரயில்வே திணைக்களத்தினால் மருதானை ரயில்வே வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மூன்று மாடி ரயில் சாரதிகளுக்கான ஓய்வறை கட்டடம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஊழியர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர், "இலங்கை ரயில்வே வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் வகையில், 2024 ஆம் ஆண்டு ஜயஸ்ரீ மஹா போதி முன்னால் முழு நாட்டிற்கும் ஆசீர்வாதம் வேண்டி சமய நிகழ்வுகளுடன் பணிகள் தொடங்கப்பட்டன. இதனை ஒவ்வொரு ஆண்டும் தொடரும் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நிகழ்ச்சியாக மாற்ற ரயில்வே திணைக்களம் முயற்சிகளை மேற்கொள்ளும்.



இந்த அமைச்சின் பொறுப்பை நாம் பொறுப்பேற்ற போது, புகையிரத திணைக்களம் ஒருபோதும் மீள முடியாத அரச நிறுவனம் என்ற கருத்து நாட்டில் பொதுவாக காணப்பட்டது. அதனை தனியார் மயமாக்கப்பட வேண்டும் என்று பலர் கருத்து தெரிவித்தனர். ஆனால் வித்தியாசமாக யோசித்து, அனைத்து தொழிற்சங்கங்களுடனும் கலந்துரையாடி ஒருமித்த கருத்துடன் பிரச்சினைகளை தீர்க்க ஒரு திட்டத்தை தயாரித்தேன்.

தற்போது நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்கள் காரணமாக நாட்டில் இயங்கி வரும் பெரும் கட்டுமான நிறுவனங்களின் நிதி பலம் வீழ்ச்சியடைந்துள்ளது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடனாகப் பெறப்பட்ட பணத்திலேயே இதுவரை நாட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருள்கள், உட்கட்டமைப்புகள், உபகரணங்கள், இயந்திரங்கள் என அனைத்திற்கும் செலவழிக்கப்பட்டுள்ளன. தற்போது வெளிநாட்டுக் கடனைப் பெறுவதற்கும் எமது நாட்டுக்கு வாய்ப்பு இல்லை. இத்தனை சிரமங்களையும் மீறி 2019ஆம் ஆண்டு இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகளைத் தொடங்கவிருந்த வடக்கு ரயில்வேயின் புனரமைப்புப் பணிகள் சுமார் மூன்று ஆண்டுகளாக முடங்கிக் கிடந்தன. பின்னர்கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட அநுராதபுரத்தில் இருந்து ஓமந்தை வரையான முதற்கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இரண்டாம் கட்ட பணியும் அடுத்த வாரம் தொடங்கவுள்ளது.

கடன் மற்றும் வட்டியை செலுத்த போதுமான வருமானம் இல்லை என்றால், மீண்டும் கடன் பெற முடியாது. அதற்கு, செலவைப் பிரதிபலிக்கும் விலைக் கொள்கையின் கீழ் கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும். கடன் கிடைக்காத பட்சத்தில், இருக்கும் மற்ற சொத்துக்களை சரியாக நிர்வகித்து, வருமானம் கிடைக்கும் வகையில், தனியார் துறை முதலீட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குவது அடுத்த நடவடிக்கையாகும்.

அதன்படி, ஸ்டேஷன் பிளாசா யோசனையின் கீழ், சுற்றுலா விடுதிகள், பல்பொருள் அங்காடிகள், ரயில்வே நகரங்கள் போன்ற பயனுள்ள திட்டங்களுக்கு தனியார் முதலீடுகள் மூலம் வாய்ப்பளிக்கவும், ரயில்வே துறையின் உரிமைகளைப் பெறவும் வரவு செலவு திட்டத்தில் யோசணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது உலகின் பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய முறையில் பயன்படுத்தப்படாத ரயில்வே சொத்துக்களை திறம்பட பயன்படுத்துவது இத்தருணத்தில் இன்றியமையாதது. புறக்கோட்டை மற்றும் மருதானை ரயில்வே நிலையங்கள் தொடர்பில் இதற்கு முன்னரும் இவ்வாறான யோசணைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் எந்த முதலீட்டாளரும் அதற்கு முன்வரவில்லை.

முதலீட்டாளர்கள் நம் நாட்டின் மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். அதற்கு நம் அனைவரின் அணுகுமுறையிலும் மாற்றம் வரவேண்டும். புத்தாண்டில் புதிய வழியில் சிந்தித்து அந்த மாற்றத்திற்காக உழைக்க வேண்டும்.

அநுராதபுரம் பாரிய நகர திட்ட யோசனையின் கீழ், , ரயிலை மையமாகக் கொண்டு, பாரிய போக்குவரத்து மத்திய நிலையம் மிஹிந்தலையை மையமாகக் கொண்டு ஆரம்பிப்பதற்கு அதன் உட்கட்டமைப்புக்காக, வரவு செலவுத் திட்டத்தில் 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் மூலம் மூன்று மாகாணங்களில் உள்ள பத்து மாவட்டங்களுக்கு நேரடி பலன்களை பெற முடியும். அதற்குத் தேவையான நிலம் நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியாருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான பயனுள்ள ஆலோசனைகளை வழங்க அனைவருக்கும் வாய்ப்புள்ளது.

ரயில்வே துறைக்கு சொந்தமான சொத்துக்களை முறையாக நிர்வகித்தல் மற்றும் வணிக ரீதியாக பயனுள்ள திட்டங்களில் நுழைவதன் மூலம், குறுகிய காலத்தில் நிறுவனத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

மேலும், நிர்வாகத் திறனை உருவாக்கும் வகையில், ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அனைவரின் பங்களிப்புடன் எதிர்கால சந்ததியினருக்கு நாட்டின் சொத்தாக விளங்கும் ரயில்வே திணைக்களத்தை பயனுள்ள மற்றும் செயல் திறன் மிக்க நிறுவனமாக மாற்றுவதற்கு நாம் அனைவரும் பங்களிப்பு வழங்க வேண்டும் என்றார்.

---

## அறிவித்தல்

### பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட தூண்களை விற்பனை செய்தல்

**லங்கா இலெக்ட்ரிசிட்டி (பிரைவட்) லிமிட்டட்**

லங்கா இலெக்ட்ரிசிட்டி (பிரைவட்) லிமிட்டட் இன் நுகேகொடை கிளையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழேயுள்ள வகை கழிக்கப்பட்ட தூண்களை நிலையான விலைமனுக்களின் கீழ் கொள்வனவு செய்யலாம்.

1. பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ள கழிக்கப்பட்ட தூண் வகைகள்
   - PS வகை தூண்கள் (Pre-Stressed)
   - PS வகை தூண்கள் (Rein forced concrete)
2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு மேலதிக தகவல்களை நுகேகொடை கிளை அலுவலகத்தின் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.30 வரை)
3. கொள்வனவு வெய்வதற்கு தேவையுள்ள நபர்கள் 2024.01.15 பி.ப. 3.00 இற்கு முன்பு நுகேகொடை கிளை அலுவலகத்திற்கு காசு செலுத்தி பொறியியல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிப்பதுடன், வருகை தரும் ஒழுங்கு முறையின் பிரகாரம் கொள்வனவு செய்யும் வாய்ப்புக் கிடைக்கும்.

**பிரதம பொறியியலாளர்,**
**(பொது முகாமையாளர் சார்பாக)**
**லங்கா இலெக்ட்ரிசிட்டி (பிரைவட்) லிமிட்டட்**
**கிளை அலுவலகம், நுகேகொடை**
**இல. 204, ஹைலெவல் வீதி, நுகேகொடை**
**011 - 2856380 / 011 - 2813509**

---

**எனது இல : 3/2/1/143**
**பிரதேச செயலகம்,**
**மினுவாங்கொட.**
**2024.01.02**

### காணி சுவிகரிப்பு சட்ட மூலம் (அத்தியாயம் 460) 7ம் பிரிவின் கீழான அறிவித்தல்.

இங்கு கீழே உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கம் சுவீகரிக்க உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2024.01.03 திகதி இலக்கம் 2365/26 உடைய அரச அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பகுதி 111 ஐ பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கம்பஹா |
| பிரதேச செயலகம் | : மினுவாங்கொட வடக்கு |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 125/2 மினுவாங்கொட வடக்கு |
| ஊரின் பெயர் | : மெடமுல்ல |
| காணியின் பெயர் | : கோன் கஹவத்தை அல்லது கோன் கஹவத்தே கெபல்ல |
| காணிப் பிரித்தெடுப்பு | இல. : கடத்திரல் வரைபட இல : 510511 |
| காணித்துண்டு | : 01 |
| பரப்பளவு | : 0.0254 ஹெக்டயார் |

**யு.டபிள்யு. ராஜகருணா**
**பிரதேச செயலாளர்,**
**மினுவாங்கொட.**

---

### சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

119

**பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

DAG-6909 MAHINDRA MINI TRUCK 2018, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 000214

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

### விலைமனுக்கோரல் (IFB)

**அஸ்போல்ட் ஆலை வளாகம் முதல் அஸ்போல்ட் போக்குவரத்து (கேரகல, இங்கிரிய, கொத்மலை)**

| விபரம் | ஒவ்வொரு ஆலைக்குமான டிரம்ப் ட்ரக் வாகனம் (டிப்பர்) |
|---|---|
| கேரகல, இங்கிரிய, கொத்மலை அஸ்போல்ட் ஆலை வளாகம் முதல் அஸ்போல்ட் போக்குவரத்து | 07 (தொன் - 15) |

மேற்படி போக்குவரத்து வழங்களுக்கான தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024 ஜனவரி மாதம் 04 ஆந் திகதி முதல் 2024 ஜனவரி 24 ஆந் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகார சபை இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

## HEINEKEN LANKA LIMITED

### எந்தவொரு உரிமைக்கோரல்கள் குறித்தும் கடன்கொடுநர்களுக்கான அறிவிப்பு

7வது மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 2, 315 வொக்சோல் வீதி, கொழும்பு - 02 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்துடன், முறையாக கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு நிறுவனமான HEINEKEN Lanka Limited, 31.12.2023 என்ற திகதியில் உள்ளவாறு தனது கணக்குப் புத்தகங்களை மூடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பின் குறிப்பிட்ட காலக்கெடு முடிவடையும் திகதிக்குள், 31 டிசம்பர் 2023 திகதியின் படி HEINEKEN Lanka Limited நிறுவனத்தின் அனைத்து கடன்கொடுநர்களையும் எம்முடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய எந்தவொரு நிலுவைத் தொகைகள் குறித்தும் தெரியப்படுத்துவதற்காக இந்த முறையான அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அதன்படி, கடன்கொடுநர்கள் தங்கள் உரிமைக்கோரல்களை எழுத்துமூலமாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிலுவையில் உள்ள தொகைகளை விபரித்து மற்றும் ஏதேனும் அதற்கான ஆதார ஆவணங்களை வழங்க வேண்டிய முகவரி:

| | | |
|---|---|---|
| **முகவரி** | ருவாந்தி பெர்னாண்டோ, சிரேஷ்ட முகாமையாளர், Ernst & Young – Business Consulting, ரொடுன்டா டவர்ஸ், இல 109, காலி வீதி, கொழும்பு 03 | சமந்தி காரியவசம், நிதிப் பணிப்பாளர், HEINEKEN Lanka Limited, 7வது மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 2, 315 வொக்சோல் வீதி, கொழும்பு - 02 |
| **மின்னஞ்சல்** | ruwanthi.fernando@lk.ey.com | samanthi.Kariyawasam@heineken.com |

உரிமைக்கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 10.01.2024 ஆகும்.

HEINEKEN Lanka Limited அதன் கடன்கொடுநர்களிடமிருந்து நிலுவையிலுள்ள தொகைகள் தொடர்பான எந்தவொரு கடிதப் பரிமாற்றத்தையும் 2024 ஜனவரி 10 ஆம் திகதிக்குள் பெற்றுக்கொள்ளாவிட்டால், நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் பிரதிபலிக்கும் நிலுவைகள் உண்மையானவை மற்றும் இறுதியானவை என்று கருதப்படும்.

**ஜொஹான் முனவீர**
**பணிப்பாளர் - நிறுவன விவகாரங்கள்,**
**HEINEKEN Lanka Limited**
**7வது மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 2,**
**315 வொக்சோல் வீதி, கொழும்பு-02.**

---

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

**2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மற்றும் ஏனையவற்றின் காப்புறுதி திட்டத்திற்கான விலைமனுக்கள்**

**B/55/2023**

### நீடிப்பு அறிவித்தல்

இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக விலைமனுவில் பங்குபெறுவதற்காக ஆர்வமுள்ள வளமுள்ள விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

2024.01.11 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்படுவதற்கு உறுதிப்படுத்தப்பட்ட விலைமனுக்களுக்கான சமர்ப்பித்தலுக்கான இறுதித் தினமானது இப்போது 2024.01.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன, 1 ஆம் மாடியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து விலைமனு செல்லுபடியாகும் கால எல்லையானது 119 நாட்கள் என்பதனை (அதாவது: 2024.05.20 ஆம் திகதியன்று வரையும்) குறித்துக் கொள்வதுடன் விலைமனுப்பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 147 நாட்களுக்கு செல்லுபடியாகும் (அதாவது: 2024.06.17 ஆம் திகதியன்று வரையும்) தன்மையிலிருத்தல் வேண்டும்.

2024.01.12ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக supplies@ceypetco.gov.lk என்ற மின்னஞ்சல் வழியாக அல்லது 0094-11-5455424 என்ற தொலைநகல் வழியாக பெறுகை மற்றும் களஞ்சியசாலைளுக்கான முகாமையாளருடன் தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவருடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

விலைமனுக்கோரல் ஆவணத்தில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**முகாமையாளர்**
**(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09, இலங்கை.**

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.21 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு டப்ளியு. ஏ. சசினி அநுராதா அத்தாட்சிப்படுத்திய 2022.04.27 திகதியிட்ட ஈட்டு முறி இல.1713 இன் பேரில் கோனவில, மாகந்துறை, இல. 316 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. வலான கொடகே அநுர மஹேந்ர ரணவீர என்பவரிடமிருந்து தவணைக் கடன் மீது 2023.11.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 21,691,060.11 (இருபத்தொரு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்றொரு ஆயிரத்து அறுபது ரூபாய் பதினொரு சதமும்) அத்துடன் ரூ. 17,333,328.00 (பதினேழு மில்லியன் முந்நூற்று முப்பத்து மூன்று ஆயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் இரண்டு ஐந்து (23.25%) வீதத்தில் 2023.11.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு டப்ளியு. ஏ. சசினி அநுராதா அத்தாட்சிப்படுத்திய 2022.04.27 திகதியிட்ட ஈட்டு முறி இல.1713 இன் பேரில் தவணைக் கடன் மீது 2023.11.07 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.21,691,060.11 (இருபத்தொரு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்றொரு ஆயிரத்து அறுபது ரூபாய் பதினொரு சதமும்) அத்துடன் 2023.11.08 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.றீ கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21றக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மீரிகம மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.

வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டத்தில் கட்டுகம்பொல ஹத்பற்றுவில் பிட்டிகல் கோரளையில் பன்னல பிரதேச சபை எல்லைகளுக்குள் (மாகந்துர உப அலுவலகம் பன்னல பிரதேச செயலகப் பிரிவில் பஹல மாகந்துர 1589 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் இஹல மாகந்துரயில் அமைந்த பொல்கந்தவலகும்புர (தற்சமயம் மேட்டு நிலம்) என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ.எஸ்.கே. எதிரிசிங்ஹ தயாரித்த 2021 ஆகஸ்ட் 17 திகதியிட்ட வரைபடம் இல. 7929 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1, வடக்கில் றுவனி விஜேசிங்ஹ உரிமை கோரும் நெல் வயலும், கிழக்கில் வரைபடம் இல. 5668 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 2 உம், தெற்கில் காணித்துண்டு 3 (பிரவேசப் பாதை) மற்றும் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு 2 உம், மேற்கில் கே.ஏ. கோகில அனுஷான் சிரிவர்தன உரிமை கோரும் காணியும் வரைபடம் இல.3659 இல் காணித்துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 7829 இன் பிரகாரம் மூன்று றூட் முப்பது பேர்ச்சுகள் (ஏ.0,றூ.03, பே.30) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் E 330/135 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்கூறிய வரைபடம் இல. 7929 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 3 (15 அடி அகல பிரவேசப் பாதை) நெடுகவும் அதன் வழி உரிமையும் ஆகும்.

மேற்கூறிய காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 3 (பிரவேசப் பாதைகள்) கீழ் விபரித்த காணியின் உப பிரிவுகளாகும்.

மேற் குறிப்பிட்டவாறு இஹல மாகந்துரயில் அமைந்த பொல்கந்தவல கும்புர என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ.எஸ்.கே. எதிரிசிங்ஹ தயாரித்த 2017 ஒக்டோபர் 01 திகதியிட்ட வரைபடம் இல.5668 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1, வடக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் யூ.எஸ்.கே. எதிரிசிங்ஹ தயாரித்த வரைபடம் இல. 3659 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 உம், றுவனி விஜேசிங்ஹ உரிமை கோரும் நெல் வயலும், கிழக்கில் வரைபடம் இல. 5668 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 2 உம், தெற்கில் தங்கொட்டுவ - கிரிஉல்ல பிரதான பாதையும் டபிள்யு. லக்மால் பிரியசாந்த உரிமை கோரும் காணியும் கே.ஏ. கோகில அனுஷான் சிரிவர்தன உரிமை கோரும் காணியும், மேற்கில் டபிள்யு. லக்மால் பிரியசாந்த உரிமை கோரும் காணியும், கே.ஏ. கோகில அனுஷான் சிரிவர்தன உரிமை கோரும் காணியும் வரைபடம் இல. 3659 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3659 இன் பிரகாரம் ஒரு ஏக்கர் மூன்று றூட் பத்தொன்பது தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.1,றூ.03, பே.19.50) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் E 330/102 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**திருமதி. கே.பீ.கே.றீ.என்.அமரசேன.**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**
**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**மீரிகம.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

SUNDAY OBSERVER adz it's what you want | වට පිට | தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements**
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

## Gampaha District

**Gampaha - 033 22 23 464**
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

**Wattala - 011 2 937 989**
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

**Nilpanagoda - 077 8 627 321**
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

**Wattala - 011 2 932 511**
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

**Kochchikade - 031 22 78 359**
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

**Batuwatta - 071 8 921 271**
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

**Dunagaha - 077 3 517 752**
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

**Ja-Ela - 011 2 947 379**
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

**Negombo - 071 480 43 55**
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

**Katunayake - 077 4 115 998**
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

**Kandana - 011 2 233 651**
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

**Minuwangoda - 011 2 297 881**
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

**Katana - 031 2 241 687**
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

**Ja-Ela - 071 8 571 713**
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

**Kotugoda - 011 2 290 815**
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

**Negombo - 071 552 22 40**
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

**Udugampola - 071 4 554 696**
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

**Ganumulla - 076 2 217 181**
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

**Indigolla - 033 5 613 736**
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

**Kelaniya - 011 2 947 379**
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

**Malwana - 011 2 487 560**
1461 - G. Shamila Vithana - No. 549/5, 'Dilsha' Walgama, Malwana.

**Kadawatha - 011 2 902 092**
1434 - M. M. S. Damayanthi Herath - Adz soon Advertising, 137/1, Kandy Road, Kadawatha.

**Dompe - 071 7 186 955**
1498 - S. A. C. Senadheera - 'Jayanthi', Dompe.

**Kiribathgoda - 077 3 719 282**
1499 - P. A. Priyani Peliarachchi - New Samanala Book Shop, No. 181, Kandy Road, Kiribathgoda.

**Yakkala - 077 3 475 696**
1561 - W. Mudalige - Ruhunu Hardware Stores, No. 50 A, Kirindiwela Road, Yakkala.

**Kirindiwela - 077 2 047 350**
1607 - D. M. Sarath Premathilake - Chandana News Center, Radawana Road, Kirindiwela.

**Nittambuwa - 033 22 89 608**
1654 - W. P. K. R. S. Narangoda - Ganga Trade Center, No. 134, Kandy Road, Nittambuwa.

**Nittambuwa - 077 3 191 979**
1905 - L. T. R. S. Jayawardana - Jayawardena Book Shop, No. 643, Wathupitiwala, Nittambuwa.

**Giriulla - 077 9 542 492**
1906 - K. A. Jagath Chandrasiri - No. 45, Negombo Road, Giriulla.

**Kelaniya - 011 4 820 896**
1910 - P. D. Sumedha Samarajeewa - No. 340, Biyagama Road, Sinharamulla, Kelaniya.

**Makola - 078 5 200 648**
1940 - R. D. Chirantha Jayawardena - No. 365/5, Gunarathna Mawatha, Makola North, Makola.

**ADZ HOTLINE - 011 2 429 369**

**CALL - 011 2 429 342/ 343**

பின்னிணைப்பு 04

## 1964 இலக்கம் 28 கொண்ட காணி கையகப்படுத்தும் (திருத்தங்கள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு காணி கையகப்படுத்தும் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம்) 39(1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

அலுவலக கோப்பு எண் - DS-WD/LND/05/02/02
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு கோப்பு எண் - LD/05/2023/VEP/509

மேலே குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் இங்கு உப அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணி/காணிகள் அரசாங்கத்திற்கு எடுப்பதை இரத்துச் செய்கின்றேன். மேலதிக விபரங்களுக்காக 2023-06-01 ஆம் வியாழக்கிழமை நாளிட்ட இலக்கம் 2334/33 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 111ஆவது பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

**அமைவு** - தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் கங்கபட பற்றில் வெலிவிட்டி திவித்துரை பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 193ஏ திவித்துரை தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மலித்தகொட ஊரில் அமைந்துள்ளது.

**காணியின் பெயர்** - அக்குரெட்டிய வத்த
**வரைபட இலக்கம்** - 2010-11-12 நாளிட்ட காலி/ 3793
**துண்டு இலக்கம்** - 01

திகதி -2023-12-07

**கையகப்படுத்தும் அதிகாரி/ பிரதேச செயலாளர்**
**வெலிவிட்டி திவித்துரை**

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023 நவம்பர் 08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு ஆர்.டீ.எஸ்.கே. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2019.05.28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 258 இன் பேரில் கெக்கிராவ, பலுகஸ்வெவ, தெமுன்னாவ ஹோம்ஸ் சீஸ் ரைஸ் மில் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி. ராஜபக்ஷ கருணாநாயக்க ஹேரத் பண்டாரலாகே உதயங்கனி ஹேரத் மற்றும் (காலஞ்சென்ற) திரு. ஹேரத் பண்டாரலாகே சேனாரத்ன பண்டார ஆகியோரிடமிருந்து கடன் வசதி மீது 2023.09.26 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 20,525,688.89 (இருபது மில்லியன் ஐந்நூற்று இருபத்தைந்து ஆயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபாய் எண்பத்தொன்பது சதமும்) அத்துடன் நிலுவை முதல் ரூ. 12,000,000.00 (பன்னிரெண்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தொன்பது (29%) வீதத்தில் 2023.09.27 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பிரசித்த நொத்தாரிசு ஆர்.டீ.எஸ்.கே. நரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2019.05.28 திகதியிட்ட ஈட்டு முறி இல. 258 இன் பேரில் கடன் வசதி மீது ரூ. 20,525,688.89 (இருபது மில்லியன் ஐந்நூற்று இருபத்தைந்து ஆயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபாய் எண்பத்தொன்பது சதமும்) அத்துடன் 2023.09.27 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் முதலாவது அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. MHT கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கெக்கிராவக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

வடமத்திய மாகாணம் அநுராதபுர மாவட்டத்தில் பலுகஸ்வெவ பிரதேச சபை எல்லைகளுள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் மாதம்புவ கோரளை தெமுன்னாவ கிராம சேவகர் பிரிவு இல. 594 இல் (எனினும் தெபுக்காவ என பதிவு செய்துள்ள) தெமுன்னாவ கிராமத்தில் அமைந்த "ரஜயே இடம" என அழைக்கும் காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணி வடக்கில் கே.எம். சோமபாலவின் காணியும், கிழக்கில் பிரதான பாதை ஒதுக்கமும், தெற்கில் எம். பி. ஜயதிலக்கவின் காணியும் மேற்கில் தெமுன்னாவ தொட்டிக்கான ஒதுக்கமும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் (ஏ.1,றூ.0,பே.0) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் L.D.O.X 05/42 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.வீ. சோமபால தயாரித்த 2001.03.16 திகதியிட்ட அண்மைய மீளளவை வரைபடம் இல. 3675 இன் பிரகாரம் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய தெமுன்னாவ கிராமத்தில் அமைந்த "ஸ்டேற் லாண்ட் அல்லது இடம" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.வீ. சோமபால தயாரித்த 2001.03.16 திகதியிட்ட வரைபடம் இல. 3675 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 அடையாளமிட்ட காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1, வடக்கில் கே.எம். சோமபாலவின் காணியும், கிழக்கில் பாதையும், தெற்கில் எம்.பி. ஜயதிலக்கவின் காணியும் மேற்கில் தெமுன்னாவ தொட்டிக்கான ஒதுக்கமும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் (ஏ.1,றூ.0,பே.0) அல்லது ஹெக்டெயார் பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் நான்கு ஏழு (ஹெக்.0.4047) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்புள்ள கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. உரிமையாளர் குறிப்பாக மேட்டு நிலத்தில் 1/4 ஏக்கர் ................ ஹெக்டயர்கள்/ ஏக்கர்கள் நீர்ப்பாசன நிலம் ................ இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை விற்பனை செய்யலாகாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பங்கின் அதாவது .................. பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரையும் உரிமையாளராக்க முடியாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்வொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்திலான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ தேடவோ எடுக்கவோ உபயோகப்படுத்தவோ விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொருப் பகுதியையும் கைமாற்றக்கூடாது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**திருமதி. எச்.எஸ்.டப்ளியு. சிரிவர்தன**
**கிளை முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**கெக்கிராவக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# மேல் மாகாண சபை

## மாகாண பொறியியல் பணியகம்

**நிர்மாண வேலைகள், பொருள் மற்றும் சேவை வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024**

மேல் மாகாண பொறியியல் பணியகத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய பொறியியல் அலுவலகங்களினால் செயற்படுத்தப்படவுள்ள நிர்மாண செயற்றிட்டங்களுக்காக ''நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள், சேவை வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்கள்'' என்பவர்களைப் பதிவு செய்து கொள்ள உத்தேசிக்கின்ற நிர்மாண நிறுவனங்கள் மற்றும் நபர்கள், ஆலோசனை சேவைகள் வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024ஆம் வருடத்திற்கு பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**இதற்கமைய பின்வரும் ஒவ்வொரு வகுதிக்காகவும் 2024ஆம் வருடத்திற்காக பதிவுகள் மேற்கொள்ளப்படும்.**

A - வகுதி - நிர்மாண ''வேலை''க்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்
B - வகுதி - பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்
B வகுதியின் பின்வரும் உப வகுதியின் கீழ் வகுதிப்படுத்தப்பட்டுள்ளன.
BA - தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்கள்
BB - சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்கள்
BC - சேவை வழங்குநர்கள்
BA - தொழில்நுட்ப ஆலோசனைச் சேவை வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| BA 1 | கட்டமைப்பு பொறியியல் சேவைகள் | கட்டிட வடிவமைப்பு சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 2 | கட்டிடக் கலை சேவைகள் | நிறுவன ரீதியான கட்டிடங்கள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 3 | கட்டிடக் கலை சேவைகள் (உள்ளகம்) | உள்ளக வீட்டு அலங்காரங்கள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 4 | கட்டிடக் கலை சேவைகள் / நிலச் சீராக்கம் | நிலச் சீராக்கம் மற்றும் பராமரிப்பு சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 5 | உத்தரவுபெற்ற நில அளவையாளர் சேவைகள் | நில அளவைக்கான தகைமை மற்றும் அனுபவம் சகிதம் |
| BA 6 | அளவு மதிப்பீட்டுச் சேவைகள் | கட்டிட அளவு மதிப்பீட்டுச் சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 7 | மின் பொறியியல் சேவைகள் | கட்டிட மின்சார பொறியியல் சேவைகள் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 8 | பொறிமுறை பொறியியல் சேவைகள் | கட்டிடங்களுக்கு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 9 | பொறிமுறை பொறியியல் சேவைகள் | கட்டிட சேவைகள் (மின் உயர்த்தி முறைமைகள், வளிச்சீராக்க முறைமை மற்றும் தீப் பாதுகாப்பு முறைமை) |
| BA 10 | பொறிமுறை பொறியியல் சேவைகள் | மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பான நிபுணத்துவம் சகிதம் |
| BA 11 | பட்டய மின் பொறியியலாளர்கள் | மின்சார நிறுவல்களை உறுதிப்படுத்துவதற்காக இமிச வுடன் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் |
| BA 12 | புவியியல் தொழில்நுட்ப விசாரணை சேவைகள் | விசேடமாக தரைப்பரப்பை மேம்படுத்துதல், அத்திவாரத்தை திட்டமிடுதல் மற்றும் மண் பரிசோதனை நிபுணத்துவ சேவைகள் |
| BA 13 | பிரதான திட்ட வரைபடத்தைத் தயாரித்தல் (Master Plan) / ஆலோசனைச் சேவைகள் (Consultants) | மேல் மாகாண சபையின் நிறுவனத்திற்காக பிரதான திட்ட வரைபடத்தைத் தயாரித்தல் (Master Plan) மற்றும் ஆலோசனைச் சேவைகள் |

BB - சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிறுவனங்கள்

| | |
|---|---|
| BB 1 | கதவுகள் / யன்னல்கள் / மற்றும் பகுதி பிரித்தல் (பார்டிஷன்) வேலைகளுக்கான அலுமினிய வடிவமைப்பை திட்டமிடுதல் |
| BB 2 | கட்டமைக்கப்பட்ட உருக்கு தயாரிப்பாளர்கள் (உருக்கு மதில்கள், உருக்குக் கட்டிட சட்டகங்கள் போன்றன) |
| BB 3 | உள்ளக மற்றும் திறந்தவெளி தோட்டச் செய்கைகள், புல் பற்றைகளை பதித்தல் மற்றும் நில அலங்கார சேவைகள் |
| BB 4 | கட்டடங்களின் சுவர்களுக்கான உலோக மறைப்புகளை நிறுவுதல் (Wall Cladding) |
| BB 5 | துருப்பிடிக்காத உருக்குக் கட்டமைப்பாளர்கள் (Stainless steel fabricators) |
| BB 6 | தரைக் கம்பளங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BB 7 | டிஜிட்டல் அச்சு வேலைகள் மற்றும் பதாகை வரைதல் மற்றும் பெயர்ப் பலகைகள் போன்றன |
| BB 8 | சிறிய வேலைகளுக்கான மரங்களை வழங்குதல் |
| BB 9 | கட்டிட ஆக்கக்கூறுகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் (கூரை திருத்தவேலைகள், நிறப்பூச்சு பூசுதல், சாந்து பூசுதல், நிலச் சீராக்கம், மேசன் வேலைகள், மழை நீர்க் குழாய்கள், கதவுகள், யன்னல்கள்) |
| BB 10 | கலிகள் மற்றும் வடிகால் வழிகள் உட்பட நீர்க் குழாய், நீர் வழங்கல் மற்றும் மழை நீர் முறைமைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 11 | குறைந்த அழுத்த மின் முறைமைகள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 12 | Spilt வகையான வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 13 | வடிகாலமைப்பு மற்றும் நீர்ப் பம்பிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| BB 14 | பலகையினாலான தரைகளை அமைத்து மட்டப்படுத்துதல், மெருகூட்டுதல் மற்றும் சீலன்ட் (Sealants) இடுதல் மற்றும் சீமெந்து தட்டு இடுதல் |
| BB 15 | கலி சேவைகள் (கழிவுநீர் தாங்கி, ஊறல் குழிகளை சுத்தப்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) |
| BB 16 | மின்பிறப்பாக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |

BC - சேவை வழங்குநர்கள்

| | |
|---|---|
| BC 1 | நீர் முத்திரை இரசாயனங்களை வழங்குநர்கள் / நிறுவுநர்கள் / நீர்க் கசிவு ஒப்பந்தக்காரர்கள் (Water Proofing) |
| BC 2 | பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகள் / கறையான் கட்டுப்பாட்டுச் சேவைகள் |
| BC 3 | அலுவலக தளபாடங்களை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BC 4 | திரைச்சீலைகள் மற்றும் மழை மறைப்புகளை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BC 5 | தீப் பாதுகாப்பு மற்றும் நிவாரண முறைமைகளை திட்டமிடல், வழங்குதல் மற்றும் பொருத்துதல் |
| BC 6 | கொங்கிறீட் திருத்தவேலைகள், கொங்கிறீட் நிர்மாணங்களின் பழுதுகள் மற்றும் மூட்டுகள் அல்லது உட்செலுத்தல் முறையைப் பயன்படுத்தி புதுப்பித்தல், துருப்பிடித்தவற்றைப் புதுப்பித்தல் உட்பட்டவை |
| BC 7 | கணனி கிரபிக் / மென்பொருளைப் பயன்படுத்தி கட்டிட முப்பரிமாணங்களை (3D) வடிவமைத்தல் |
| BC 8 | பாதுகாப்பு சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் |
| BC 9 | இன்டர்லொக் கற்கள் வழங்கும் நிறுவனங்கள் |
| BC 10 | வாகனத்திற்கான முழுமையான திருத்தவேலைகள் / வாகனங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல் |
| BC 11 | வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள் |
| BC 12 | கணனி மற்றும் துணைப்பாகம் சார்ந்த சேவைகள் வழங்குதல் |
| BC 13 | தொலைபேசி மற்றும் தரவு முறைமை சார்ந்த சேவைகள் வழங்குதல் |

### 1.0 தகுதி மூலப்பிரமாணங்கள்

A - வகுதி - நிர்மாண ''வேலை''க்கானவை
1.1. கட்டிட நிர்மாணத் துறையின் ICTAD (தற்போதைய நாமம் CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1.2 மேல் மாகாணத்தினுள் வியாபாரப் பதிவு முகவரியொன்று இருத்தல் வேண்டும்.
1.3 அபகீர்த்தியாளர் பட்டியில் உள்வாங்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள நிர்மாணங்களின் தரத்தைப் பேணுவதற்கு முடியாமற் போன அறிக்கைகள் இருத்தல் கூடாது.
B - வகுதி - வழங்குநர்கள், ஆலோசனை சேவை வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கானவை
1.4 நாளது தரவேற்றம் செய்யப்பட்ட வியாபாரப் பதிவு இருத்தல் வேண்டும்.
1.5 இயைபுடைய தொழில்சார் மற்றும் நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு பரிந்துரைக் கடிதங்களைச் சமர்ப்பிக்க முடியுமாயிருத்தல்.
1.6 வாடிக்கையாளர்களின் பட்டியல் மற்றும் செயலாற்றுகை சான்றிதழ்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
1.7 இதற்குப் புறம்பாக BA வகுதிக்கு உரித்தான தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது பதிவு சகிதமான நபர்கள் அல்லது நிறுவனங்களாகவிருத்தல் வேண்டும். (அதாவது கட்டிடக் கலை நிறுவனங்கள், பொறியியல் நிறுவனங்கள் மற்றும் அளவு மதிப்பீட்டு நிறுவனங்கள் போன்றன.....)

### 2.0 பொதுத் தகைமைகள் மற்றும் தேர்வு முறைகள்

2.1 ஒவ்வொரு வகுதியின் கீழும் பதிவு செய்து கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரர் மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும். அல்லாவிடில் மேல் மாகாணத்தினுள் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். வியாபாரப் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்க முடியாதவிடத்து கிராம சேவையாளரினால் நிரந்தர வதிவு முகவரி / வியாபார முகவரியை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2.2 சகல விண்ணப்பதாரர்களும் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட அனுபவமுடையவர்களாகவிருத்தல் வேண்டும். உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
2.3 விண்ணப்பப் படிவத்தைப் பரீட்சித்துப் பார்த்ததன் பின் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) அவர்களினால் பெயரிடப்பட்ட குழுவினால் வியாபார இடத்தைப் பரீட்சித்துப் பார்த்து / மதிப்பீடு செய்ததன் பின் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
2.4 விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) தன்னகத்தே கொண்டுள்ளார்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்கள் மேல் மாகாண பொறியியல் பணியகத்தின் கணக்கியல் பிரிவிற்கு ஒவ்வொரு வகுதிக்காகவும் மீளளிக்கப்படாத 1500.00 ரூபா வீதமான கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி பொறியியல் பணியகத்தின் பெறுகைக் பிரிவிற்கு பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-01-04ஆம் திகதி முதல் 2024-02-05ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரையான காலத்தினுள் விண்ணப்பப் படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-2092504 / 011-2092506 எனும் தொலைபேசி இலக்கங்களில் பொறியியல் பணியகத்தின் பெறுகைப் பிரிவைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை சான்றுபடுத்தும் ஆவணங்கள் சகிதம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024'' எனக் குறிப்பிட்டு 2024-02-06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்), மேல் மாகாண பொறியியல் பணியகம், 5வது மாடி, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

**பொறி. கே.ஆர். அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5வது மாடி,**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 011-2092504**

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

# அறிவித்தல்

**வ/ப நாத்தாண்டிய புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2023-12-31ஆம் திகதியில் உள்ளவாறான வாக்குரிமை அங்கத்தவர்களின் பெயர் பட்டியல்**

**2024-01-11ஆம் திகதி முதல் 2024-01-25ஆம் திகதி வரை**

**பின்வரும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.**

**அதில் உங்களது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தால் அதுபற்றி**

**2024-01-25ஆம் திகதிக்கு முன் தலைமை அலுவலகத்திற்கு எழுத்துமூலம் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின் எந்தவொரு முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

சங்கத்தின் முகவரி : செயலாளர்,
வரையறுக்கப்பட்ட நாத்தாண்டிய புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நாத்தாண்டிய

தொலைபேசி இல. : 032-2254236

| பிரதேச இலக்கம் | பிரதேசத்தின் பெயர் | காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 1 | நாத்தாண்டிய இல. 01 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 2 | இல. 02 நாத்தாண்டிய (இல. 03 நாத்தாண்டிய, இல. 11 தம்போவ என்பன ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 3 | 04 பிலாகட்டுமுல்ல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 4 | 05 மானிங்கல | பிரதேசத்தில் உள்ளது |
| 5 | 06 துன்கன்னாவ | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 6 | 07 நாராவில (இல. 24 கச்சிராவ ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 7 | 08 யக்தெஸ்ஸாவ | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 8 | 09 மீகஹவெல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 9 | 10 பஹல கொட்ராமுல்ல | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 10 | 12 தம்மிககம | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 11 | 13 சோமவத்த | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 12 | 14 மாவில | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 13 | 15 லங்சிகம | கிராமிய வங்கியில் உள்ளது (லங்சிகம) |
| 14 | 16 இஹல கொட்டாரமுல்ல | கிராமிய வங்கியில் உள்ளது (இஹல கொட்டாரமுல்ல) |
| 15 | 17 இஹல கட்டுநேரிய | கட்டுநேரிய கிராமிய வங்கி மற்றும் தலைமை அலுவலகம் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 16 | 18 கொஸ்வத்த | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 17 | 19 மொரகெலே | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 18 | 20 பலுவெல்கால | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 19 | 21 முதுகட்டுவ | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 20 | 22 மெத கட்டுநேரிய (இல. 23 பஹல கட்டுநேரிய ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | கட்டுநேரிய கிராமிய வங்கியில் உள்ளது |
| 21 | 29 தெமட்டபிட்டிய | கிராமிய வங்கியில் உள்ளது (தெமட்டபிட்டிய) |
| 22 | 30 வதுகஹமுல்ல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 23 | 31 மெதகொட | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 24 | 33 குடாமடுவெல்ல (இல. 46 பரதெல்பொல ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | பிரதேசத்தில் உள்ளது |
| 25 | 34 தொடுவாவ | கிராமிய வங்கியில் உள்ளது (தொடுவாவ) |
| 26 | 35 கொஸ்வாடிய | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 27 | 36 முட்டிபெந்திவெல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 28 | 37 மஹவெவ (இல. 32 மட்டாகொடுவ ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | மஹவெவ கோப்சிட்டியில் உள்ளது |
| 29 | 38 தல்வில | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 30 | 39 ஹால்பன்வில | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 31 | 42 குடாவெவ | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 32 | 43 மாரவில தேவாலய வீதி (இல. 40 பிரனாந்து வீதி 01, இல. 41 பிரனாந்து வீதி 02 என்பன ஒன்றிணைக்கப்பட்டுள்ளன) | மாரவில மினிகோப்சிட்டி மற்றும் பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 33 | 44 மாவிர நவீனமயப்படுத்துதல் | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 34 | 45 வலஹபிட்டிய (இல. 50 கல்அமுன ஒன்றிணைக்கப்பட்டுள்ளது) | மினி கோப்சிட்டியில் உள்ளது (வலஹபிட்டிய) |
| 35 | 47 மரந்த | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 36 | 51 சாகரகம | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 37 | 52 மோதரவெல்ல | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 38 | 53 இரணவில | கிராமிய வங்கியில் உள்ளது (இரணவில) |
| 39 | 54 கடோல்கொடவத்த | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 40 | 55 இத்தமல்கம | பஹல வலஹபிட்டிய கோப்சிட்டியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 41 | 56 பனங்கொட | பிரதான அலுவலகம், செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 42 | 57 பஹல வலஹாபிட்டிய | கோப்சிட்டியில் உள்ளது |

**செயலாளர்,**
**வ/ப நாத்தாண்டிய புதிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

# அறிவித்தல்

வ/ப அளவ்வ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2023-12-31ஆம் திகதியில் வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியலை காட்சிப்படுத்துதல்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் (வடமேல்) வெளியிடப்பட்டுள்ள 2131/54 மற்றும் 2019 ஜூலை 19ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் திருத்தப்பட்ட 1981/2 - 2016 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதேச செயற்குழுவைத் தெரிவு செய்தல், கூட்டுறவு பதவிநிலை தேர்தல் கட்டளையின் 5.1 கட்டளையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள, சங்கத்தின் பின்வரும் கூட்டுறவுச் சங்கப் பிரதேசங்களின் வாக்குரிமை அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் 2024-01-11ஆம் திகதி முதல் 2024-01-25ஆம் திகதி வரையான காலத்தில் சங்கத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பின்வரும் இடங்களில் கடமை நேரங்களில் காட்சிப்படுத்தப்படும்.

| தொ. இல. | பிரதேச இல. | பிரதேசத்தின் பெயர் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | அளவ்வ | அளவ்வ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 02 | 02 | கல்பொத்தேபொல | கல்பொத்தேபொல கூட்டுறவு மலர்ச்சாலை |
| 03 | 03 | குடுமுல்ல | குடுமுல்ல கூட்டுறவு பிரதேசம் |
| 04 | 04 | பம்பதெனிய | பம்பதெனிய கூட்டுறவு கிராமிய வங்கி |
| 05 | 05 | வலகும்புர | வலகும்புர பிரதேசம் |
| 06 | 06 | மகரச்சிமுல்ல | மகரச்சிமுல்ல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 07 | 07 | ஹூம்புலுவ | ஹூம்புலுவ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 08 | 08 | நுகவெல | பம்பதெனிய கூட்டுறவு கிராமிய வங்கி |
| 09 | 09 | யட்டிகல்மலுவ | யட்டிகல்மலுவ கூட்டுறவு பிரதேசம் |
| 10 | 10 | பொரமடல | பொரமடல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 11 | 11 | உடுமுல்ல | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 12 | 12 | வதாவ | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 13 | 13 | கெப்பிட்டிவலான | போயவலான கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 14 | 14 | போயவலான | போயவலான கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 15 | 15 | கல்தெனிய | கல்தெனிய கூட்டுறவு பிரதேசம் |
| 16 | 16 | மடவல | மடவல கூட்டுறவு பிரதேசம் |
| 17 | 17 | கிரிவானாபொல | மகரச்சிமுல்ல கூட்டுறவு கிராமிய வங்கி |
| 18 | 18 | வல்கமுவ | வல்கமுவ கூட்டுறவு பிரதேசம் |
| 19 | 19 | நவதல்வத்த | நவதல்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 20 | 20 | வென்னொருவ | வென்னொருவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 21 | 21 | புஜ்ஜொமுவ | புஜ்ஜொமுவ கூட்டுறவு பிரதேசம் |
| 22 | 22 | அபிபோவ | அபிபோவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 23 | 23 | தும்புல்ல | நவதல்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 24 | 24 | தமுனுபொல | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 25 | 25 | ஹபுகஹகெதர | அளவ்வ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 26 | 26 | ஹெட்டிகெதர | கல்தெனிய கூட்டுறவு கிராமிய வங்கி |
| 27 | 27 | போவல | நவதல்வத்த கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 28 | 28 | கந்தேகெதர | கந்தேகெதர கூட்டுறவு கிராமிய வங்கி |
| 29 | 29 | நுங்கமுவ | உடுமுல்ல கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 30 | 30 | கல்கமுவ | கல்கமுவ கூட்டுறவு கிராமிய வங்கி |
| 31 | 31 | ஹங்கவத்த | ஹங்கவத்த மினி கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 32 | 32 | தெதெல்கமுவ | யடகல்மலுவ கூட்டுறவு பிரதேசம் |
| 33 | 33 | ஓதர கிருவன்பொல | மடவள கூட்டுறவு பிரதேசம் |
| 34 | 35 | பாத்தயால | ஹூம்புலுவ கோப்சிட்டி விற்பனை நிலையம் |
| 35 | 36 | ஹென்டுவாவவத்த | போயவலான கோப்சிட்டி விற்பனை நிலையம் |

முக்கியம் : இந்த வாக்குரிமை அங்கத்தவர் பெயர்ப் பட்டியலில் பெயரை உள்ளடக்காதவர்கள் தமது பெயரை உள்ளடக்கிக் கொள்ளல் தொடர்பில் மேன்முறையீடு அல்லது பட்டியலில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ள அங்கத்தவர் பெயர் தொடர்பில் எதிர்ப்புகள் ஏதும் இருப்பின் அவைகளை 2024-01-11ஆம் திகதி முதல் 2024-01-25ஆம் திகதி வரையான காலத்தினுள் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கவனிக்கவும் : இந்த வாக்குரிமை அங்கத்தவர் பெயர்ப் பட்டியலுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளதானது 2022-12-31ஆம் திகதி வரை பங்குப் பணத்தைச் செலுத்தி முடித்து வருடத்தை பூர்த்தி செய்துள்ள அங்கத்துவத்திற்கு உரித்தான அங்கத்தவர்களின் பெயர்கள் மட்டுமே என்பதுடன், 2022-12-31ஆம் திகதியின் பின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள அங்கத்தவர்கள் சங்கத்தின் பதவிநிலை தேர்தலில் கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் வாக்குரிமை இல்லை என்பதை கவனத்திற் கொள்ளவும். (இது தொடர்பில் 2024-01-04ஆம் திகதிய தினமின பத்திரிகை, 2024-01-04ஆம் திகதிய தினகரன் தமிழ் பத்திரிகைகளில் விளம்பரத்தின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது).

கட்டளையின் பிரகாரம்,
செயலாளர்
எம்.எம்.டீ.டீ. குமாரி,
வ/ப அளவ்வ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நாரம்மல வீதி, அளவ்வ.

037-2278131
2024-01-01.

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6556(MAR) | 01 No. of CV 50-200 Johnson Vertical Self-Priming Centrifugal Sea Water Pump and Spares for Dredger Hansakawa | 100,000.00 | 3,500.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6558(EL) | VFC Unit for Alimak Elevators of ZPMC Cranes at JCT | 30,000.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6559(EL) | Current Transformers for the Yaskawa YS1000 Inverters of Cranes at JCT | 7,500.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6560(EL) | 12 Nos. Current Transformers for the Yaskawa A1000 Inverters of Cranes at JCT | 7,500.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6562(EL) | 06 Nos. IGBT for the Yaskawa A1000 Inverters of Cranes at JCT | 40,000.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6563(MP) | Spares for Terberg Terminal Tractors at JCT | 90,000.00 | 1,000.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6510(EL) | Spreader Statues Indication Led Lamps for Spreader of STS Cranes | 75,000.00 | 1,000.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6561(MAR) | Spares for 8000 -12000 Hour Overhead of both ABB VTR214P-11 Turbochargers of Wartsila 9L 20 main Engines of M/T Barana II | 350,000.00 | 3,500.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6457(MP) | 02 Nos. Fork Lift 3.5 Ton (Short Mass) | 280,000.00 | 3,500.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/14/067 | 7200 KGS dissolved Acctylene GAS for Year 2023-2024 | 360,000.00 | 3,500.00 | 2024.01.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/22/017 | 168 Nos. GI Lip Channel 150 X 75 x 20, 3MM Thick 12M Length | 84,000.00 | 1,000.00 | 2024.01.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/050K | Paint and Thinners for construction work of proposed Fort Lift repair section | 100,000.00 | 3,500.00 | 2024.01.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/066 | 12 Nos. Fuel Injectors for Gardner Engines of Launches "Donald Neish" and "Alfred Normandale" | 45,000.00 | 1,000.00 | 2024.01.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/073 | Spares for Caterpillar C-15 Engines of RTG Cranes | 120,000.00 | 3,500.00 | 2024.01.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/065 | Motor Tyres 1000X20 PLY (Cross PLY) | 27,500.00 | 1,000.00 | 2024.01.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/-074 | Spares for Cummins QSK-15 Engines of RTG Cranes | 70,000.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/064 | 25 Nos. Motor Tyres 1100 x 20 16 PLY | 43,250.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/23/016 | Steel material and accessories for construction work of proposed Fort Lift repair section | 86,000.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/062 | Overall – 3700 No. for Year 2024 | 234,000.00 | 3,500.00 | 2024.01.31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/069 | Spares for UD Nissan Prime Movers | 19,000.00 | 1,000.00 | 2024.01.31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜனவரி 05 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராகக் கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேகுறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அஸ்போல்ட்**
**ஆலை (60/70) Bulk பிட்மன் 1150MT கொள்வனவு செய்தல்**

| விபரம் | ஆலை | அளவு |
|---|---|---|
| 60/70 Bulk பிட்மன் | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மொத்த அஸ்போல்ட் ஆலை | 1,150 MT |

மேற்படி 60/70 Bulk பிட்மன் கொள்வனவு செய்வதற்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024 ஜனவரி மாதம் 04 ஆந் திகதி முதல் 2024 ஜனவரி 24 ஆந் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகார சபை இணையத் தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**1964 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்த) சட்டத்தின் திருத்தத்திற்கமைய காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7(1) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்**

**எனது குறிப்பு இல : KDS/PDB/4/3/2/21**
**காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் : 4-3/12/2018/ws/49**

பொது நடவடிக்கைக்கு தேவையான கீழ் குறிப்பிடப்பட்ட உப பிரிவிற்கமைவான காணித்துண்டை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கருதுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 2023.10.06 ஆம் திகதி 2352/34 மற்றும் 2023.12.06 ஆம் திகதி 2361/24 இலக்கத்தினுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானி பத்திரிகையை பார்க்கவும்.

டப்.எம்.டி.டி.கே.வீரகோன்
பிரதேச செயலாளர்
பாத்ததும்பரை.

பாத்ததும்பரை பிரதேச செயலாளர்
அலுவலகத்தில்.
2023.12.28

**உபபிரிவு**

பிரதேச செயலாளர் அலுவலகம் : பாத்ததும்பரை

கிராமம் : கிராகடுவ

அமைப்பு : மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பரை பிரதேச செயலாளர் பிரிவில் கிராகடுவ கிராமத்தில் அமைந்த காணித்துண்டு

காணித்துண்டின் பெயர் : ஹபுகஸ்பிடியேஹேன ஹெவத் வத்த

வரைப்பட இலக்கம் : கெடஸ்ட்ரல் இலக்கம் 321097 இல் வலய இலக்கம் 1 ஆம் பத்திரம் மற்றும் இலக்கம் 02.

காணித்துண்டின் இலக்கம் : 01, 02, 03

**1964 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்த) சட்டத்தின் திருத்தத்திற்கமைய காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7(1) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்**

எனது குறிப்பு இல : KDS/PDB/4/3/2/23

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் : 4-3/18/2020/ws/49

பொது நடவடிக்கைக்கு தேவையான கீழ் குறிப்பிடப்பட்ட உபபிரிவிற்கமைவான காணித்துண்டை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கருதுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 2023.10.06 ஆம் திகதி 2352/34 மற்றும் 2023.12.06 ஆம் திகதி 2361/24 இலக்கத்தினுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**டப்.எம்.டி.டி.கே. வீரகோன்**
**பிரதேச செயலாளர்**
**பாத்ததும்பரை.**

**பாத்ததும்பரை பிரதேச செயலாளர்**
**அலுவலகத்தில்.**
**2023.12.28**

**உபபிரிவு**

| | | |
|---|---|---|
| பிரதேச செயலாளர் அலுவலகம் | : | பாத்த தும்பரை |
| கிராமம் | : | கிராகடுவ |
| அமைப்பு | : | மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், பாத்ததும் பரை பிரதேச செயலாளர் பிரிவில், கிராகடுவ கிராமத்தில் அமைந்த காணித்துண்டு |
| காணித்துண்டின் பெயர் | : | ஹபுகஸ்பிடியேஹேன ஹெவத் வத்த |
| வரைப்பட இலக்கம் | : | கெடஸ்ட்ரல் இலக்கம் 321097 இல் வலய இலக்கம் 1 ஆம் பத்திரம் மற்றும் இலக்கம் 03, வலய இலக்கம் 1 ஆம் பத்திரம் மற்றும் இலக்கம் 01 |
| காணித்துண்டின் இலக்கம் | : | 01, 02 |

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.11.21 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு பீ.டீ. சமன்மலி அத்தாட்சிப்படுத்திய 2021.06.11 திகதியிட்ட ஈட்டு முறி இல. 237 இன் பேரில் மாகொல, தலவத்துஹேன்பிட்ட, இல.226/3 எனும் முகவரியில் அமைந்த டெஸ்க் டு டெஸ்க் டிலிவரி சொலுஷன்ஸ் பங்காளர்கள் திரு. நெத்திகுமாரகே அமல் சதுரங்க பொன்சேகா மற்றும் திரு சூரியபண்டாரகே டொன் இனசன்ட் டொல்றான் ஜானக ஆகியோரிடமிருந்து 1 ஆவது கடன் மீது 2023.09.25 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 12,372,234.03 (பன்னிரெண்டு மில்லியன் முந்நூற்று எழுபத்திரெண்டு ஆயிரத்து இருநூற்று முப்பத்து நான்கு ரூபாய் மூன்று சதமும்) அத்துடன் ரூ. 9,857,130.00 (ஒன்பது மில்லியன் எண்ணூற்று ஐம்பத்தேழு ஆயிரத்து நூற்று முப்பது ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தேழு தசம் ஏழு ஐந்து (27.75%) வீதத்தில் 2023.09.26 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2 ஆவது கடன் மீது 2023.09.25 வரை முதலும் வட்டியும் ரூ. 2,448,733.89 (இரண்டு மில்லியன் நானூற்று நாற்பத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று முப்பத்து மூன்று ரூபாய் எண்பத்தொன்பது சதம்) மீது ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் (15.50%) வீதத்தில் 2023.09.26 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட 2021.06.11 திகதியிட்ட ஈட்டு முறி இல.237 இன் பேரில் 1 ஆவது கடன் மீது ரூ. 12,372,234.03 (பன்னிரெண்டு மில்லியன் முந்நூற்று எழுபத்திரெண்டு ஆயிரத்து இருநூற்று முப்பத்து நான்கு ரூபாய் மூன்று சதமும்) 2 ஆவது கடன் மீது ரூ. 2,448,733.89 (இரண்டு மில்லியன் நானூற்று நாற்பத்தெட்டு ஆயிரத்து எழுநூற்று முப்பத்து மூன்று ரூபாய் எண்பத்து ஒன்பது சதமும்) அத்துடன் 2023.09.26 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணைகளில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. M.H.T. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கிரிபத்கொடை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட அட்டவணை.

மேல் மாகாணம் கம்பஹா மாவட்டம் சியனே கோரளை, அதிகாரி பற்றுவில் வத்தளை பிரதேச சபை எல்லைகளில் (வெலிசறை உப அலுவலகம்) ஹீன்கெந்த 254 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் மஹர ஹீன்கெந்த கிராமத்தில் அமைந்த குருகுலாவ தேவாலய வீதி வரி மதிப்பு இல. 03 ஐக் கொண்ட "மீகஹவத்த கஹட்டகஹவத்த அந்தஒதுதென பிட்டமுல்லே கும்புர" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ.எம். கமல் பெரேரா தயாரித்த 2019 மார்ச் 27 திகதியிட்ட வரைபடம் இல 906 இல்எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 1, வடக்கில் வரைபடம் இல. 457 1987 இல் காணித்துண்டு A2 இன் மீதிப்பாகமும் கிழக்கில் இக் காணியின் மீதிப்பாகமும் தெற்கில் பாதையும் மேற்கில் யூ.டீ பிரன்ஸிஸ் அந்தோனியின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 906 இன் பிரகாரம் இருபத்து நான்கு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.24) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் L500/39 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வரைபடம் இல. 906 இல் மேற்குறிப்பிட்ட காணித் துண்டு / கீழ் விபரித்த காணியின் மீளளவை செய்த ஒரு உப பிரிவாகும்.

மேற்குறிப்பிட்டவாறு மஹர ஹீன்கெந்த கிராமத்தில் அமைந்த "மீகஹவத்த கஹட்டகஹவத்த லீகஹவத்த கஹட்டகஹவத்த என அழைக்கும் (மீகஹவத்த கஹட்டகஹவத்த கபெல்லயின் பகுதி மற்றும் அந்தலுதுதென பிட்டமுல்லே கும்புர ஓவிட்ட அல்லது தற்சமயம் அரைப்பங்கு என பதிவு செய்துள்ள) காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.ஏ.ரூபசிங்ஹ தயாரித்த 1987 செப்டெம்பர் 02 திகதியிட்ட வரைபடம் இல 457/1987இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு A2 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A2, வடக்கில் குருகுலாவ பாதையும் காணித்துண்டு A1 உம் கிழக்கில் ஜயவர்தனயின் காணியும் இக்காணியின் மீதிப்பாகமும் தெற்கில் டி.டி.சீ பாதையும் மேற்கில் யூ.டீ பிரன்ஸிஸ் அந்தோனியினதும் எஸ். ஜயசிங்ஹவினதும் காணிகளும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 457/1987 இன் பிரகாரம் ஒரு ஏக்கர் ஆறு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.1, றூ.0,பே.6.50) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இக்காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் L114/07 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி ஜே.டி.ஹெட்டிஆரச்சி**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**கிரிபத்கொடை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.12.04 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசுகளாகிய எம்.டீ.ஐ.கே. கருணாரத்ன மற்றும் யூ.பீ. பிரேமதிலக்க ஆகியோர் அத்தாட்சிப்படுத்திய 2013.05.09 மற்றும் 2013.05.10 திகிதியிட்ட ஈட்டுமுறி இல. 463/24072, பிரசித்த நொத்தாரிசு எம்.டீ.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2015.07.03 திகதியிட்ட ஈட்டு முறி இல.1227, பிரசித்த நொத்தாரிசு டபிள்யு.ஏ.எஸ் அநுராதா அத்தாட்சிப்படுத்திய 2020.02.03 திகதியிட்ட ஈட்டு முறி 933, பிரசித்த நொத்தாரிசு எம். டபிள்யு. ஏ. எஸ். பீ. விஜேவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2022.01.07 திகதியிட்ட ஈட்டு முறி 2805 ஆகியவற்றின் பேரில் மரதகஹமுல, ரஞ்சலாண்ட் வத்த இல. 342/01 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. டில்ஷான் திவங்க பிரேமரத்ன என்பவரிடமிருந்து 1 ஆவது கடன் மீது 2023.10.10 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 10,510,949.79 (பத்து மில்லியன் ஐந்நூற்று பத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தொன்பது ரூபாய் எழுபத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. 6,490,000.00 (ஆறு மில்லியன் நானூற்று தொண்ணூறு ஆயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தைந்து தசம் இரண்டு ஐந்து (25.25%) வீதத்தில் 2023.10.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 2 ஆவது கடன் மீது 2023.10.10 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.10,192,783.52 (பத்து மில்லியன் நூற்று தொண்ணூற்றிரண்டு ஆயிரத்து எழு நூற்று எண்பத்து மூன்று ரூபாய் ஐம்பத்து இரண்டு சதமும்) அத்துடன் ரூ. 6,293,332.00 (ஆறு மில்லியன் இருநூற்று தொண்ணூற்று மூன்று ஆயிரத்து முந்நூற்று முப்பத்திரெண்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தைந்து தசம் இரண்டு ஐந்து (25.25%) வீதத்தில் 2023.10.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை 2023.08.03 வரை மேலும் வட்டியும் 3 ஆவது கடன் மீது 2023.10.10 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 2,537,285.58 (இரண்டு மில்லியன் ஐந்நூற்று முப்பத்தேழு ஆயிரத்து இருநூற்று எண்பத்தைந்து ரூபாய் ஐம்பத்தெட்டு சதமும்) அத்துடன் ரூ. 1,573,332.00 (ஒரு மில்லியன் ஐந்நூற்று எழுபத்து மூன்று ஆயிரத்து முந்நூற்று முப்பத்திரெண்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்தைந்து தசம் இரண்டு ஐந்து (25.25%) வீதத்தில் 2023.10.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 4 ஆவது கடன் மீது 2023.10.10 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 616,968.19 ( அறுநூற்றுப் பதினாறு ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தெட்டு ரூபாய் பத்தொன்பது சதமும்) அத்துடன் ரூ. 502,743.92 (ஐந்நூற்று இரண்டு ஆயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றிரண்டு சதம்) மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு (12%) வீதத்தில் 2023.10.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட 2013.05.09 மற்றும் 2013.05.10 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 463/24072, 2015.07.03 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1227, 2020.02.03 திகதியிட்ட ஈட்டு முறி இல. 933, 2022.01.07 திகதியிட்ட ஈட்டு முறி 2805 ஆகியவற்றின் பேரில் 1 ஆவது கடன் மீது ரூ. 10,510,949.79 (பத்து மில்லியன் ஐந்நூற்று பத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தொன்பது ரூபாய் எழுபத்தொன்பது சதமும்) 2 ஆவது கடன் மீது ரூ. 10,192,783.52 (பத்து மில்லியன் நூற்று தொண்ணூற்றிரண்டு ஆயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று ரூபாய் ஐம்பத்து இரண்டு சதமும்) 3 ஆவது கடன் மீது ரூ. 2,537,285.58 (இரண்டு மில்லியன் ஐந்நூற்று முப்பத்தேழு ஆயிரத்து இருநூற்று எண்பத்தைந்து ரூபாய் ஐம்பத்தெட்டு சதமும்) 4 ஆவது கடன் மீது ரூ. 616,968.19 (அறுநூற்றுப் பதினாறு ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தெட்டு ரூபாய் பத்தொன்பது சதமும்) அத்துடன் 2023.10.11 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும், இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச். கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி திவுலப்பிட்டிய கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை வடக்கு துனகஹ பற்றுவில் திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் திவுலப்பிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் உராபன B 86 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் உராபன கலேபிட்டிமுல்ல மற்றும் மாபலன்கெதர கிராமங்களில் அமைந்த "ரான்ஜ்லாண்ட் எஸ்டேற்" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு விதாரன தயாரித்த 1998 ஆகஸ்ட் 05 திகதியிட்ட வரைபடம் இல. 3248 இல் எல்லை நிர்ணயித்த பிரிக்கப்பட்ட மேற்கூறிய காணித்துண்டு வடக்கில் ஈபேர்ட் பொன்சேகாவும் குணதிலக்க பொன்சேகாவும் உரிமை கோரும் காணித்துண்டு 137உம், கிழக்கில் கலீடஸ் பொன்சேகாவும் குணதிலக்க பொன்சேகாவும் உரிமை கோரும் காணியும், தெற்கில் பிரதான பாதையும் (ஆர்.டீ.ஏ) மேற்கில் பிரதேச சபை பாதையும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3248 இன் பிரகாரம் ஒரு றூட் (ஏ.0, றூ.1, பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் J25/62இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**திருமதி டப்ளியு.ஏ.ஜீ .டீ. வேரகொட**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**
**திவுலப்பிட்டிய கிளை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/148**<br>வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (அலுவலகம்)- மட்டக்களப்பு பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம்.<br>(இரண்டு வருடகாலம்) | 17-01-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், (மட்டக்களப்பு) 065-2222639 அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு மாகாணம் | **DGM(E)/QPPC/23/149**<br>வாடகைக்கு வான் - டபிள் கப் மின் அத்தியட்சகர் - (அபிவிருத்தி) பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருடகாலம்) | 17-01-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன்

கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொதுமுகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# இலங்கை டெஸ்ட் அணித் தலைவரானார் தனஞ்சய: ஒருநாள் குழாமும் அறிவிப்பு



இலங்கை டெஸ்ட் அணியின் தலைவராக தனஞ்சய டி சில்வா நியமிக்கப்பட்டதாக இலங்கை தேர்வுக் குழு தலைவர் உபுல் தரங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இந்த செய்தியாளர் சந்திப்பில் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவின் மற்ற உறுப்பினர்களான தில்ருவன் பெரேரா, இந்திக டி சேரம், அஜந்த மெண்டிஸ் மற்றும் தரங்க பரணவிதான ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் தனஞ்சய டி சில்வா அணித் தலைவராக செயற்படுவார் என்று உபுல் தரங்க குறிப்பிட்டார். இலங்கை ஒருநாள் அணித் தலைவராக அண்மையில் நியமிக்கப்பட்ட குசல் மெண்டிஸ் டெஸ்ட் அணியின் உப தலைவராக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சிம்பாப்வே அணிக்கு எதிராக நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான 17 பேர் கொண்ட உத்தியோகபூர்வ குழாத்தை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இலங்கை கிரிக்கெட் சபை 21 பேர் கொண்ட முதற்கட்ட குழாத்தை கடந்த வாரத்தில் அறிவித்திருந்த நிலையில், தற்போது 17 பேர் கொண்ட இறுதி ஒருநாள் குழாத்தை வெளியிட்டுள்ளது.

அதன்படி இறுதி ஒருநாள் குழாத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த குழாத்தில் காணப்பட்ட சாமிக்க கருணாரத்ன, கமிந்து மெண்டிஸ், அசித பெர்னாண்டோ மற்றும் சாமிக்க குணசேகர ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் விளையாடிய திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், குசல் பெரேரா, துஷான் ஹேமந்த மற்றும் தனன்ஜய டி சில்வா ஆகியோரும் சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் குழாத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

முன்னணி வீரர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில் ஜனித் லியனகே, சஹான் ஆராச்சிகே, நுவனிது பெர்னாண்டோ, அவிஷ்க பெர்னாண்டோ, அகில தனஞ்சய, ஜெப்ரி வெண்டர்சே மற்றும் பிரமோத் மதுசான் ஆகியோர் குழாத்தில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை ஒருநாள் குழாம்: குசல் மெண்டிஸ் (தலைவர்), சரித் அசலங்க (உப தலைவர்), பெதும் நிஸ்ஸங்க, சதீர சமரவிக்ரம, அவிஷ்க பெர்னாண்டோ, நுவனிது பெர்னாண்டோ, சஹான் ஆராச்சிகே, தசுன் ஷானக, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, ஜனித் லியனகே, துனித் வெள்ளாலகே, துஷ்மந்த சமீர, பிரமோத் மதுசான், டில்ஷான் மதுஷங்க, அகில தனஞ்சய, ஜெப்ரி வெண்டர்சே.**

## இந்தியாவிடம் 55 ஓட்டங்களுக்கு சுருண்டது தென்னாபிரிக்க அணி



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் 55 ஓட்டங்களுக்கே சுருண்டது.

கேப்டவுனில் நேற்று ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த தென்னாபிரிக்கா மளமளவென்று விக்கெட்டுகளை பறிகோடுத்தது. இதனால் அந்த அணி 23.2 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு சுருண்டது. இருவர் மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றனர். அதிரடியாக பந்து வீசிய மொஹமட் சிராஜ் 9 ஓவர்களில் 15 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 6 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இது டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கு எதிராக பெறப்பட்ட மிகக் குறைந்த ஓட்டங்கள் என்பதோடு 1932க்குப் பின்னர் தென்னாபிரிக்காவின் மிகக் குறைந்த ஓட்டங்களாகவும் பதிவானது. இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்கா இன்னிங்ஸால் வெற்றியீட்டியது.

## தங்கம் வென்றார் இப்சாம்

*மாளிகைக்காடு குறூப் நிருபர்*



தேசிய சொட்டக்கன் கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 13ஆவது தேசிய சொட்டக்கன் கராத்தே சாம்பியன் போட்டியின் கனிஷ்ட பிரிவில் இ. இப்சாம் தங்கப்பதக்கத்தை வென்றார். சுகததாச உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் காதா பிரிவிலேயே அவர் வெற்றிபெற்றார். அவர் ஓட்டமாவடி, மீராவோடை அல்ஹிதாயா மகா வித்தியாலயத்தில் தரம் 8இல் கல்வி கற்கும் மணவராவார்.

## சர்வதேச செய்திகள்

# லெபனானில் ஹமாஸ் பிரதித் தலைவர் அல் அரூரி படுகொலை: பலஸ்தீனத்தை தாண்டி போர் அபாயம்

### ஈரான், ஹிஸ்புல்லாவின் கண்டனத்திற்கு இடையே அமைதிகாக்க ஐ.நா கோரிக்கை



லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேலின் ஆளில்லா விமானத் தாக்குதல் ஒன்றின் மூலம் ஹமாஸ் அமைப்பின் பிரதித் தலைவர் சலேஹ் அல் அரூரி கொல்லப்பட்டது காசா போர் பலஸ்தீனத்தை தாண்டி பரவும் அச்சுறுத்தலை அதிகரித்துள்ளது.

ஹமாஸ் அமைப்புக்கு எதிராக கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேல் போரை ஆரம்பித்தது தொடக்கம் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்ட மூத்த ஹமாஸ் அரசியல் தலைவராக அரூரி உள்ளார்.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதி ஒன்றான முஷரபியாவில் உள்ள ஹமாஸ் அலுவலகத்தின் மீது கடந்த செவ்வாய்க் கிழமை மாலை நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அரூரி கொல்லப்பட்டுள்ளார்.

ஐவருடன் கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்தபோது ஏற்பட்ட வெடிப்பிலேயே அரூரி கொல்லப்பட்டதாக லெபனான் ஹிஸ்புல்லா அமைப்பின் தொலைக்காட்சி தெரிவித்தது. இதில் மேலும் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த வெடிப்பில் அரூரி கொல்லப்பட்டதை உறுதி செய்த ஹமாஸ் அதிகாரிகளில் ஒருவரான பசம் நயீம், தமது ஆயுதக் குழுவின் மேலும் இரு அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

'ஹமாஸ் தலைமைக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையிலேயே சலேஹ் அல் அரூரி மரணித்தார்' என்று இஸ்ரேலிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த படுகொலைக்கு ஹமாஸ் அமைப்பு கண்டனத்தை வெளியிட்டிருப்பதோடு, இது லெபனான் இறைமை மீதான தாக்குதல் என்று ஹிஸ்புல்லா அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் லெபனானை மோதலுக்கு இழுப்பதாக லெபனான் பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படையின் முக்கிய புள்ளியாக இருந்த அரூரி, ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியேவின் நெருங்கிய கூட்டாளியாவார். லெபனானில் அவர் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான தொடர்புகளை பேணுபவராகவும் இருந்து வந்துள்ளார்.

இந்த படுகொலையைச் செய்ததாக உறுதி செய்வதை தவிர்த்துக் கொண்ட இஸ்ரேலிய பேச்சாளர் மார்க் ரெகேவ், 'யார் இதனைச் செய்தாலும் அது லெபனான் மீதான தாக்குதலாக இருக்காது' என்று தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

எனினும் லெபனான் மண்ணில் இஸ்ரேல் மேற்கொள்ளும் எந்த ஒரு படுகொலைக்கும் 'கடுமையான பதிலளிக்கப்படும்' என்று ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா எச்சரித்துள்ளார்.

காசாவில் கடந்த ஒக்டோரில் போர் வெடித்தது தொடக்கம் லெபனானுடனான இஸ்ரேலின் தெற்கு எல்லையில் லெபனானின் பலம்மிக்க ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இஸ்ரேலிய படைக்கும் தொடர்ந்து மோதல் நீடித்து வரும் நிலையிலேயே இந்தப் படுகொலை இடம்பெற்றுள்ளது.

அரூரி கொல்லப்பட்டதை அடுத்து மர்ஜ் அருகே ஏவுகணைகள் மூலம் இஸ்ரேலிய படைகளை இலக்கு வைத்ததாக ஹிஸ்புல்லா கூறியது.



இஸ்ரேலியர்கள் மீது அரூரி கொடிய தாக்குதல்களை நடத்தி வருவதாக இஸ்ரேல் நீண்ட காலமாக குற்றம்சாட்டி வந்தது. எனினும் கட்டார் மற்றும் எகிப்தின் மத்தியஸ்தத்தில் மேற்கொள்ளப்படும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் அவர் முக்கிய பங்காற்றி வந்ததாக ஹமாஸ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

#### 'உயிர் தியாகத்திற்கு காத்திருக்கிறேன்'

ஹமாஸ் ஆயுதப் பிரிவான இஸதீன் அல் தீன் அல் கஸ்ஸாம் அமைப்பின் இணை நிறுவனராக அரூரி இருப்பதாக இஸ்ரேல் குறிப்பிடுகிறது. காசாவுக்குள்ளேயோ அல்லது வெளியேயோ ஹமாஸ் தலைமைகளை ஒழிப்பதாக கடந்த ஓகஸ்ட் மாதம் இஸ்ரேல் எச்சரித்தபோது அதற்கு பதிலளித்த அரூரி, 'நான் உயிர் தியாகம் செய்ய காத்திருப்பதோடு நான் அதிக காலம் வாழ்ந்து விட்டதாக நினைக்கிறேன்' என்றார்.

ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகளின் பிரதான ஆதரவாளராக உள்ள ஈரானின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நாஸர் கனானி கூறும்போது, 'அரூரியின் படுகொலை பலஸ்தீனத்தில் மாத்திரமன்றி பிராந்தியத்தில் மற்றும் உலகெங்கும் சுதந்திரத்தை நாடுபவர்கள் இடையே சந்தேகத்திற்கு இடமின்றி எழுச்சியையும் சியோனிஸ ஆக்கிமிப்பாளர்களுக்கு எதிராக போராடுவதற்கும் தூண்டுகிறது' என்றார்.

அரூரியின் படுகொலையை கண்டித்து ரமல்லா மற்றும் மேற்குக் கரையில் உள்ள மற்ற நகரங்களில் கூடிய நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் 'பழிதீர்ப்போம், பழிதீர்ப்போம், கஸ்ஸாம்!' என்று கோசமெழுப்பினர்.

'இந்தத் தாக்குதல் லெபனான் இறைமையை மீறும் கோழைத்தனமான...பயங்கரவாதச் செயல் என்பதோடு இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பின் வட்டத்தை அதிகரித்துள்ளது' என்று ஹமாஸ் தலைவர் ஹனியே கூறினார்.

இந்தப் படுகொலையைக் கண்டித்த லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி, லெபனானை மேலும் போருக்குள் இழுக்கு செயலாக உள்ளது என்றார். அது குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் புகார் செய்யத் திட்டமிடுவதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில் பதற்றம் தீவிரம் அடையும் அச்சம் அதிகரித்துள்ளது. பெய்ரூட்டில் ஹமாஸ் தலைவரின் படுகொலையை அடுத்து பதற்றம் தீவிரம் அடையும் சாத்தியம் பற்றி ஆழ்ந்த கவலை அடைந்திருப்பதாக லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் திட்டம் தெரிவித்துள்ளது.

லெபனான் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான எல்லைகளை கண்காணிக்கும் இந்த அமைதிகாக்கும் திட்டத்தின் பேச்சாளர் கன்டிஸ் ஆர்டியேல் கூறியதாவது, 'அனைத்து தரப்பினரும் தங்கள் கொந்தளிப்பை நிறுத்துமாறு நாங்கள் தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம், மேலும் செல்வாக்கு உள்ள எந்தவொரு தரப்பும் அமைதிகாக்கும்படி வலியுறுத்த வேண்டும்' என்றார்.

இந்நிலையில் இஸ்ரேலிய போர் அமைச்சரவை உறுப்பினர் ஒருவரான பென்னி கானஸுடனான உரையாடலில், லெபனானில் போர் சூழல் ஒன்று பற்றி பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் எச்சரித்துள்ளார்.

எனினும் எந்தச் சூழலையும் எதிர்கொள்ளத் தயாராய் இருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

#### 22,000ஐ தாண்டிய உயிரிழப்பு

இதேவேளை காசாவில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை முடிவுற்ற 24 மணி நேரத்தில் 207 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு உறுதி செய்தது. இதனால் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 22,313 ஆக அதிகரித்துள்ளது.

57,296 பேர் காயமடைந்திருப்பதோடு 7,000 பேர் வரை காணாமல்போயுள்ளனர். அவர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக நம்பப்படுகிறது. காசாவில் மூன்று மாதங்களாக நீடிக்கும் குண்டு மழை காரணமாக அந்த குறுகிய நிலப் பகுதியின் மக்கள் தொகையில் நான்கு வீதத்தினர் கொல்லப்பட்டு, காயமடைந்து அல்லது காணாமல்போயுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றை அடுத்து மக்கள் மீட்பு நடவடிக்கைகள் மற்றும் இடிபாடுகளில் சிக்கி இருப்போரை காப்பாற்றுவதற்காக அந்தப் பகுதிக்கு விரைந்தனர்.

'இதுவரை 12 பேர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். சிறுவர்களே பெரும்பான்மையாக உள்ளனர். அவர்கள் என்ன தப்பு செய்தார்கள்? அவர்களில் எனது ஒரு மாத மகனும் உள்ளான். அவன் இஸ்ரேலுக்கு என்ன செய்தான்?' என்று காசி தர்விஷ் என்பவர் கேள்வி எழுப்பினார். 'எனது மற்ற மகனுக்கு ஐந்து வயதாகிறது. அவனும் உயிர்த்தியாகம் செய்துள்ளான்' என்றார்.

மேலும் தெற்காக கான் யூனிஸில் இஸ்ரேல் தமது தலைமையத்தின் மீது இரு முறை தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் குறிப்பிட்டது. இதனால் ஐவர் கொல்லப்பட்டு மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

'அவர்கள் தெற்காக செல்லும்படி கூறினார்கள். அங்கு பாதுகாப்பானது என்றும் கூறினார்கள். ஆனால் அவர்கள் பொய்யர்கள்' என்று செம்பிறை சங்கம் மீதான தாக்குதலில் காயமடைந்து நாசர் மருத்துவமனையில் தரையில் வைக்கப்பட்டிருக்கும் தனது மகளை காண்பித்தபடி பாதி அல் அப்ஃ கூச்சலிட்டார்.

இந்தத் தாக்குதல்களை மனசாட்சி அற்றது என்று உலக சுகாதார அமைப்பு கடுமையாக சாடியது. கான் யூனிஸில் நேற்றும் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்று வந்த நிலையில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை காசாவில் உள்ள மக்களை தொடர்ந்து வெளியேறுவதற்கு உத்தரவிட்டு வரும் இஸ்ரேல் கடந்த செவ்வாயன்று போர் விமானங்கள் மூலம் வீசிய துண்டுப் பிரசுரத்தில் கான் யூனிஸின் பல இடங்களில் இருந்து மக்களை வெளியேறும்படி குறிப்பிட்டுள்ளது.

'தரைவழி தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட போது காசா நகரில் இருந்து கிசான் அல் நிஜார் பகுதிக்கு நான் வெளியேறினேன். ரபா நகர் மற்றும் கான் யூனிஸுக்கு இடையில் உள்ள கிசான் அல் நிஜார் முன்னர் பாதுகாப்பான இடமாக இருந்தது' என்று யூனிஸ் என்பவர் 'மிடில் ஈஸ்ட் ஐ' செய்தி இணையதளத்திற்கு குறிப்பிட்டிருந்தார்.

'மூன்று நாட்களுக்கு முன் 87 தொகுதியில் இருந்து வெளியேறும்படி துண்டுப் பிரசுரம் கிடைத்தது. இன்று அதில் 83, 84 மற்றும் 86 தொகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. நான் 85 தொகுதியில் இருக்கிறேன். அது மாத்திரம் தான் இந்த தொகுதியில் இல்லாத பகுதி. ஆனால் 86 தொகுதியுடன் இது மாத்திரமே வெளியேற்றப்படாத தொகுதியாக உள்ளது. குண்டு வீச்சுக்கு மத்தியில் வாழ்வது மிகக் கடினமானது' என்று அவர் சுட்டிக்காட்டினார்.

காசாவில் உள்ள 2.3 மில்லியன் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட அனைவரும்போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதோடு காசாவின் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதியில் அடைக்கலம் பெற்றவர்கள் எண்ணிக்கை தற்போது ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.